நந்தா விளக்கு

பாலகுமாரன்


பாலகுமாரன்
நந்தா விளக்கு

01.

'ஓஹூம்' என்று காற்று அந்த நிலப்பரப்பு முழுவதும் சுழன்றடித்துக் கொண்டு இருந்தது. உலகில் மிகச் சுதந்திரமான விஷயம் காற்று மட்டும்தான். நீர் வரையறை செய்யப்பட்டு வருகிறது. எப்போதாவதுதான் விடுதலை பெறுகிறது. நிலம் நகர முடியாது. இடம் மாற இயலாது. அதுவும் எப்போதாவதுதான் இடம் பெயரும். பூகம்பத்தால்தான் நிலைமாறும். நெருப்புக்கு பரவுவதில் தடைகள் உண்டு. பற்றிக்கொள்ளச் சுள்ளியிருந்தால்தான் நெருப்பு பரவும். இல்லையெனில் இருந்த இடத்திலேயே கொழுந்துவிட்டு எரிந்து அணைய வேண்டியதுதான். காற்றுதான் விடுதலையான விஷயம். எங்கேயும் நிலை பெறாத விஷயம்.

வள்ளி மலையிலிருந்து பச்சையான ஈரக் காற்று அந்த நரிப்பள்ளியை மோதிவிட்டு வட கிழக்காக எங்கோ போகிறது. இந்நேரம் மோதின காற்று தொண்டை மண்டலத்தின் பாதியைத் தாண்டியிருக்கும். தொண்டை மண்டலம் தாண்டி, சாளுக்கிய தேசம் போயிருக்கும்.

இந்தக் காற்று எங்கிருந்து வருகிறதென்று தெரியவில்லை. இத்தனை வேகமாய் எங்கே போகிறதென்றும் தெரியவில்லை. இதை மடக்கி நிறுத்த எவராலும் முடியவில்லை.

"இந்தக் காற்றுக்கு ஓய்வே இல்லையா?" சேந்தன் உமையாள் யோசித்தாள். காலையில் வெய்யில் கனத்து எழுந்து பனி குறைந்தவுடன் காற்று ஓய்வெடுத்துக் கொள்கிறது. இலைகளைக் கூட அசைக்காமல் மொத்தமாய் ஊர் மீது, வயல் மீது, ஓடை மீது, மலை மீது அமர்ந்து கொள்கிறது. சூரியன் உச்சிக்கு வந்து சரியத் துவங்கியதும், மெல்லப் புரள ஆரம்பிக்கிறது. கதிர் சாயச் சாய கன வேகமாய் வடகிழக்கு நோக்கி ஓடுகிறது.

அது ஏன் வேறு பக்கம் போகக் கூடாது? ஏன் மேற்கே ஓடக் கூடாது? ஒரு சமயம் எதிர்ப்பட்ட தமிழ்ப் புலவரை சேந்தின் உமையாள் கேட்டாள்.

"கிழக்கே பெரிய கடல் இருக்கிறதாம். கண்ணுக்கு எட்டியவரை நீர் இருக்குமாம். அத்தனை நீரும் உப்பளம். அலை பொங்கியபடியிருக்குமாம். அந்த நீர் சூரியனால் சூடாக, அங்கே அதைக் குளுமைப்படுத்த இங்கிருந்து காற்று போகுமாம். போய் வெப்பத்தோடு கலந்து மேகமாகுமாம். மெல்ல மெல்ல மேகம் திரண்டு இன்னும் கிழக்கே போய் அங்குள்ள தேசங்களில் மழை பொழியுமாம்."

"கடல் தாண்டியும் தேசம் உண்டா. அங்கு புலவர் போயிருக்கிறாரா?"

புலவர் போனதில்லையாம். ஆனால், சோழ தேசத்து வணிகர்கள் கூட்டம் கூட்டமாக போயிருக்கிறார்கள். பெரிய பெரிய பாய்மரக் கப்பல்களில் ஏறி போயிருக்கிறார்கள். கடாரம், மாயிருடிங்கம், இலாமுரி தேசம், தலைக்கோலம், பப்பாளம், கம்போஜம் என்று பல ஊர்கள் உண்டாம். நக்கவரம் என்கிற தீவுகளும் நடுவே உண்டாம். அவைகளைத் தாண்டியும் கடலாம். அந்தக் கடல் தாண்டியும் ஊர்கள் இருக்கின்றனவாம்.

"பூமி மிகப்பெரியது உமையாள். மிகப் பெரியது. அந்தப் பூமியின் அளவுக்கு முன்னே மனிதன் தூசு. வள்ளி மலையை பூமி என்று வைத்துக் கொள்வோம். அதில் உன் பத்து வேலி நிலம் இத்தனை அளவு" என்று ஒரு பருக்கைக் கல் எடுத்துக் காண்பித்தார். சுண்டு விரல் நகத்தை விட சிறியதாய் இருந்தது அந்தக் கல்.

பத்து வேலி நிலமும், ஒரு பருக்கைக் கல் என்றால், அதில் உமையாள் வீடு ஒரு தூசு. நாலு கட்டு வீடு ஒரு தூசென்றால் அதில் உமையாள் தூசிலும் தூசு.

வெகு நேரம் அந்தப் பருக்கைக் கல்லையே பார்த்திருந்துவிட்டுத் தொலைதூரம் வீசிப் போட்டாள். பத்து வேலி நிலத்தையும் பார்த்தாள். இந்தப் பத்து வேலியும் அவள் நிலம். நல்ல நன்செய் நிலம்.

ராஜேந்திரத் தேவர் அவள் தாய்க்கு தானமாகக் கொடுத்த நிலம். நிலத்திற்கு நடுவே நடுகல் இருக்கிறது. ஒரு நடுகல் அல்ல நாலு நடுகல்.

அப்பாவின் நடுகல்லும், தாத்தாவின் நடுகல்லும் உயரமாய் இருக்கின்றன. அது ஊர் சபை நட்டது. உமையாள் நிலத்திற்கு நடுவே நடுகல். கல் நோக்கி நடந்தாள்.

தென்பெண்ணை ஆற்றிலிருந்து அவள் வயல் வழியேதான், வாய்க்கால் வழியே அவள் ஊரான நரிப்பள்ளத்துக்கு நீர் பாய்ந்து கொண்டிருக்கிறது. ஊரில் வாய்க்கால் நீர் நின்று போனால் சேந்திர உமையாள் வயல் நோக்கித்தான் ஓடுவார்கள். மாடு மிதித்து கல் புரண்டோ, தானாய் மண் புரண்டோ, நீர் அடைத்துவிடும். வாய்க்கால் நீர் நின்று போனால் நரிப்பள்ளம் கிராமம் பெரியதாய் கூவும். ஊரிலுள்ள வாழைகளுக்கும், தென்னைகளுக்கும் கோவில் தோட்டத்திற்கும் அவள் வயல் தாண்டிய பெண்ணை ஆற்று நீரே போக வேண்டும். நீர் சலசலவென்று போய்க் கொண்டிருக்கிறது. மேற்கே மழை பெய்து பெண்ணை ஆறு முழுவதும் நீர் புரண்டு போகிறது.

தென் பெண்ணையாற்றுக் கரையை போன பௌர்ணமிக்குத்தான் ஊர் உயர்த்தி, கல் புரட்டிப் போட்டு

சிறிய மதகு ஏற்படுத்தியிருக்கிறது. முதலில் நீர் ஊருக்குப் போகட்டும். பிறகு உன் வயலுக்குத் திருப்பி விடு என்று உமையாளைக் கேட்டுக்கொண்டது. உமையாளும் அவளது பிள்ளை வீரனும் இரவு முழுவதும் கறியும் சோறும் சமைத்து தட்டிலெடுத்துக் கொண்டு போய் வயல் நடுவே அமர்ந்து கொண்டார்கள். புலவரும் துணைக்கு வந்திருந்தார். புலவர் ஊர் ஊராய்த் திரிகிறவர். அவர் மனைவி சிறு வயதிலேயே மூன்றாவது பிள்ளை பேறின் போது சிவலோகப் ப்ராப்தியடைந்து விட்டாள். அவரது சிறு குழைந்தைகளை மனைவியின் சகோதரன் தத்தெடுத்துக் கொண்டான். மனைவியைப் பிரிந்த சோகத்தால் புலவர் பல கவிதைகள் எழுதியிருக்கிறார். அதை ஊர் ஜனங்கள் விரும்பிக் கேட்டார்கள்.

எல்லா ஊரிலுள்ள ஜனங்களும் யாரையாவது பிரிந்தோ, இழந்தோதான் இருந்தார்கள். எல்லா ஊரிலும் இளம் வயதில் அகால மரணமடைந்தவர்கள் இருந்தார்கள். புலவர் தன் மனைவியை இழந்த துக்கத்தைப் பாட்டாய்ப் பாடுகிற போதுதான் பிரிந்தவர்களை நினைத்து கண்ணீர் விட்டு அழுதார்கள்.

தன் துக்கத்தைச் சொன்ன புலவர் பிறர் துக்கத்தையும் செவி மடுத்துக் கேட்டார். அதைப் பாடலாய் எழுதினார். ஊரிலுள்ள பாணர்களைக் கூப்பிட்டு ஒரு குழுவாய்ப் பாடச் செய்தார். தகப்பனை இழந்த பிள்ளை,

மகனை இழந்த தாய், கணவனை இழந்த பெண்டீர், அண்ணனை இழந்த தங்கை என்று பல்வேறு சோகப் பாடல்கள். இந்தப் பாட்டை மனனம் செய்த பாணர்கள் அறுவடைக் காலங்களில் வெளியூர் போனார்கள். புலவரின் பெயரைச் சொல்லி, அவருடைய துக்கம் சொல்லி, அவர் எழுதிய பாடலைப் பாடி அவர் புகழ் பரப்பினார்கள். தஞ்சை நகரிலிருந்து மயிலை கிராமம் வரையில் புலவரின் பாட்டுக்கள் புகழ் பெற்றிருந்தன. மேற்கே கொங்கு நாடு வரையும் அவர் புகழ் பரவியிருந்தது. எந்த ஊருக்குப் போனாலும் அவருக்கு சோறும், துணியும் கொடுத்தார்கள். இரவு நேரம் நெருப்பைச் சுற்றி உட்கார்ந்து, அவர் பாட்டை வேதனையோடு கேட்டார்கள்.

அந்தப் புலவர் அப்பாவைப் பற்றியும், தாத்தாவைப் பற்றியும் கூடப் பாடியிருக்கிறார். ராஜேந்திரர் வடக்கே படையெடுத்த சமயம் சாளுக்கிய மன்னன் பெரிய யானைகளுடன் எதிர்த்துப் போரிட்டானாம். ராஜேந்திர சோழரின் குதிரைப் படை, யானைகளைப் பார்த்து மிரண்டு நின்றதாம்.

ராஜேந்திரர் வில்லாளிகளை முன்னே அனுப்பினாராம். அப்போது யானைகளின் நெற்றியைக் குறி வைக்க முடியவில்லையாம். யானைகளின் முகப்படாம்களைத் துளைத்து வேல்கள் பாயவில்லையாம். வீரர்கள் கூழானார்களாம். ராஜேந்திரர் ஒரு யானையையாவது

சொல்லும்படி அவள் அப்பாவுக்கு உத்தரவிட்டாராம். அப்பா முள் சங்கிலியெடுத்து யானையின் தந்தம் பிடித்து ஏறி, அதன் மத்தகத்தில் ஈட்டி சொருகி சாய்த்தாராம். யானை, அவரது வலது காலைப் பிய்த்துப் போட்டதாம். சரிந்து கீழே விழுந்தால், யானையால் மிதிக்கப்பட்டு, கூழாய் அடையாளம் தெரியாமல் செத்து விடுவோம் என்பதால் அம்பாரியைப் பிடித்தபடியே இறந்து போனாராம். யானை சரிந்து விழ, அப்பாவின் உடல் அதன் மீதிருந்ததாம்.

இந்தப் பத்து வேலி நிலமும் அப்பாவின் வீரத்திற்கு இறையிலியாய், வரி கொடுக்கப்பட வேண்டாத நிலமாய் ராஜேந்திர சோழனால் தரப்பட்டது.

வடக்கேயிருந்து தொண்டை மண்டலம் தாண்டி தஞ்சை நோக்கிப் போகும் போது, நரிப்பள்ளி கிராமம் அவரைத் தடுத்து நிறுத்தியது. "மிகப்பெரிய வெற்றி, மிகப்பெரிய வெற்றி" என்று முரசறைந்து காலாட் படை வீரர்கள் போனார்கள். இவள் வீட்டு வாசலில் நின்று ஒரு மண் சட்டியை அப்பா என்று கொடுத்தார்கள். தனியே தகனம் செய்தது, பானையில் அஸ்தியைக் கொண்டு வந்து அம்மாவின் காலடியில் வைத்தார்கள். அம்மா நெஞ்சிலடித்துக் கொண்டு அழுதாள். ஆயிரம் ஆயிரமாய் படைகள் ஊர் வழியே திரும்பிக் கொண்டிருந்தன. வீட்டு வாசல் முன்பு வாளுயர்த்திச் சுழற்றி அப்பாவின் கலசத்தின்

முன் மண்டியிட்டார்கள். ஒரு யானையை அடித்துக் கொன்றதும், மற்ற யானைகள் பிளிறிப் பின்வாங்கினவாம். அப்போது சடேரென்று காலாட் படையை ஒதுங்கச் சொல்லிவிட்டு ராஜேந்திர சோழர் குதிரையுடன் முன்னேறினாராம். சாளுக்கிய தேசம் முழுவதும் சூறையாடினாராம்.

பெண்டிரும், யானையும், பண்டாரமும், கொண்டு பின்னே வருகிறாராம். "நரிப்பள்ளி வந்து விட்டதா, முத்தரையன் வீடு வந்து விட்டதா" என்று அடிக்கடி கேட்கிறாராம். நரிப்பள்ளியில் ஒரு நாள் தங்குபடி நேரிடலாமாம். இறந்து போன ஆறு வீரர்கள் வீடுகள் தவிர மற்ற எல்லா வீடுகளிலும் சுண்ணாம்பு அடித்து, நீர் தெளித்துக் கோலம் போட்டிருந்தார்கள். அழுது புலம்பும் அம்மாவை, தாத்தா அதட்டி நிறுத்தினார்.

"சாவுக்கு அஞ்சினவனா வேளாளன். ராஜேந்திர சோழன் கட்டளையிட்டு மரணம் நோக்கிப் போனது எல்லோருக்கும் கிடைக்குமா. இந்த குடும்பத்தின் மரியாதை எவ்வளவு கூடி விட்டது. சோழ தேசத்தின் எல்லா வாட்களும் இந்த வீட்டு மண்ணை முத்தமிட்டுப் போகிற அற்புதத்தைப் பார்க்கவில்லையா? நோய்ப்பட்டு இறந்தவனைப் போல் உன் புருஷனை நினைத்து அழுவதை நிறுத்து. கல் தடுக்கியும், காட்டாற்று வெள்ளத்திலும்,

குடித்துவிட்டு நடக்கும் கலவரத்திலும் உன் புருஷன் சாகவில்லை. ஒரு வேளாளச்சி வீர மரணமடைந்த புருஷனுக்காக அழுதல் கூடாது. அடுத்த போருக்கு பிள்ளையை அனுப்புகிறோமென்று ராஜேந்திரச் சோழனிடம் நெஞ்சைத் தட்டிச் சொல். அரசனுக்காக குடி மக்கள். குடி மக்களுக்காக அரசன்."

"நான் உயிரோடிருக்க என் மகன் போனானே. அதுதான் வேதனை. எந்த வீரசாகஸமும் செய்யாமல் வெறும் வேளாளனாய் இருக்கிறேனே. இதுதான் விதி."

"என் பிள்ளை என்னிலும் புகழ் பெற்றவனாய் இருக்கிறானென்று பார்க்க சிறிது பொறாமை கூட வருகிறது. கால் பிய்ந்து தொங்கியும், அம்பாரியை விடாதிருந்தானாம். யானை சரியும் பொழுதுதான் சரிந்தானாம்."

"எங்கே அந்தப் புலவன். அவனைப் பாடச் சொல். என் மகன் யானையைக் கொன்ற வீரத்தைப் பாடச் சொல்."

அடுத்த வீட்டில் புலவருக்கு சோறு போடப்பட்டது. புலவர் படை வீரர்களோடு பேசிப் பேசி பல தகவல் சேகரித்தார். வருகின்ற படை வீரர்களையெல்லாம் நிறுத்தி அப்பாவைப் பற்றி விசாரித்தார். யுத்தத்தின் திருப்பு

முனையாக இருந்ததால் எல்லோருக்கும் இந்த செய்தி தெரிந்திருந்தது.

காலாட்படை வீரர்கள் போக, பொதி கழுதைகளும், மாட்டு வண்டிகளும் தொடர்ந்தன. கழுதைகளில் பிதுங்க பிதுங்க ஆடை, ஆபரணங்கள் தொங்கின. ஒரு சேனாபதி இரண்டு கை பொற்காசுகள் எடுத்து அப்பாவின் அஸ்தி கலசத்தின் முன் வைத்தான்.

எந்த ராணியோ போட்டிருந்த கனத்த காசு மாலையை, முத்து வடத்தை அப்பாவின் அஸ்தி கலசத்தின் மீது போட்டான்.

ஊர் வியந்தது. "ஆஹா... ஆஹா..." என்று இந்த தானத்தைப் பாராட்டியது. அம்மா அசையாது கலசத்திற்கு அருகே உட்கார்ந்திருந்தாள். தாத்தா, இடுப்பில் புதுத்துணி கட்டி, இடுப்பில் வாள் சொருகி கிராமத்தில் முன்னும், பின்னும் உலாவிக் கொண்டிருந்தார்.

அது என் மகன்தான் என்ற அப்பாவின் பெயரை எல்லோருக்கும் நடுவில் சொன்னார். வீரர்கள் நின்று துக்கம் கேட்கப் பெருமையானார். இருட்டத் துவங்கியதும், பொதிக் கழுதைகளுக்குப் பின்னால் மூடப்பட்ட வில் வண்டிகள் வந்தன. வில் வண்டிகளில் திரை போடப்பட்டிருந்தது.

ஊருக்கு வெளியே அந்த வண்டிகளை நிறுத்தினார்கள். உள்ளேயிருந்தவர்களை அதட்டி இறக்கினார்கள். நூற்றுக்கணக்கான பெண்கள். ஏழு வயது முதல் எழுபது வயதுவரை விதம் விதமான பெண்கள். அரசிகள், இளங்குமரிகள், தாதிகள்.

கிராமம் முழுவதுமே அவர்கள் இறங்கியிருந்த தோப்பைச் சூழ்ந்து கொண்டது. மரங்களுக்கு மறைவிலிருந்து எட்டிப் பார்த்தது. பயத்தினாலும், நெடுந்தூரப் பயணத்தாலும் அந்தப் பெண்கள் களைத்துப் போயிருந்தார்கள்.

"தஞ்சை வந்து விட்டதா?" என்று ஒரு பெண் சாளுக்கிய மொழியில் கேட்க, "நான் இருக்குமிடமே உனக்குத் தஞ்சை. வா..." என்று ஒரு வீரன் இடது தொடையில் தட்டிக் காண்பித்தான்.

வீரர்கள் கேலி செய்தார்களே தவிர, எவரும் அந்தப் பெண்களை இம்சிக்கவில்லை. புழுக்கப்பட்ட அரிசிச் சோறும், கறிக்குழம்பும் தாமரை இலையில் வைத்து அந்தப் பெண்களுக்குத் தரப்பட்டது. தரையில் கம்பளங்கள் விரிக்கப்பட்டன. மரங்களுக்கு நடுவே திரை கட்டப்பட்டது. இளம் அரச குமாரிகள் திரைக்கு உள்ளே

தூங்க, தலை நரைத்த உரம் மிகுந்த கிழவிகள் திரைக்கு வெளியே காவலிருந்தார்கள்.

மேலே மேகம் கறுத்து, பூமியில் புழுதிக் காற்று வீசிய போது, இந்தக் காற்று மழையைக் கொண்டு வந்து தரும் என்று உணர்ந்து கொண்டார்கள். பெரிய மண்டபங்கள் உள்ள ஜம்புநாதேஸ்வரர் கோவில் கதவைத் திறந்தார்கள். தாதிகளையும், அரசிளங்குமரிகளையும் அங்கே அனுப்பினார்கள். வீரர்கள் மதுபானம் செய்திருப்பதால், கோவிலுக்கு உள்ளே வர வெட்கப்பட்டு, கிராமத்துப் பெண்களை எழுப்பி காவல் காக்கச் சொன்னார்கள். சேந்தன் உமையாள் காவலுக்குப் போனாள். மண்டபத்துள் வரிசையாக அரச குடும்பத்துப் பெண்கள் படுத்திருக்க, தலை நரைத்த கிழவி அவளை தன் அருகே உட்கார இடம் காட்டினாள்.

பிடிபட்ட பெண்களோடு உட்காருவதா என்று உமையாள் தயங்கிய போது, அந்தக் கிழவி வாய் விட்டுச் சிரித்தாள்.

"வேறு தேசத்தவள் என்று உட்கார அஞ்சுகிறாயா? பெண்ணுக்கு ஏதாவது தேசம் உண்டா? எல்லாப் பெண்களும் எடுபட்ட பிறவிதானே. எந்த தேசத்தில் வாழ்க்கைப்படுகிறோமோ அதுதானே நமக்கு தேசம்."

"என் தாய் சோழ நாடு. தொண்டை நாட்டில் வாழ்க்கைப்பட்டாள். திருவெற்றியூரில் குடிபுகுந்தாள். திருவெற்றியூர் சாளுக்கியரால் கைப்பற்றப்பட்டு விட்டது. என் வாலிப வயசில் இப்படி வண்டியேறி வடக்கே வேறெங்கோ அழைத்துப் போனார்கள். ஒரு தளபதிக்கு தானமாகக் கொடுத்தார்கள். பாண்டிய தேசத்தின் முத்தும், சோழ தேசத்தின் தங்கமும், தொண்டை மண்டலத்து நெல்லும் என் வீட்டில் இரைந்து கிடந்தன. இப்பொழுது சோழர்கள் படையெடுத்து எங்களைக் கைதிகளாக்கிக் கொண்டு வந்து விட்டார்கள். என் தேசம் எது? திருவெற்றியூரா? சோழர் தலை நகரான தஞ்சையா? நான் வாலிபத்தைக் கரைத்த முசங்கி நாடா? அல்லது இப்பொழுது போய்க் கொண்டிருக்கிறேனே, குடந்தையோ? தஞ்சையோ? அதுவா. என்னை தஞ்சையிலா விட்டு வைப்பார்கள். எந்த அரசிளங்குமரிக்கேனும் தாதியாய் எங்கேனும் கொண்டு போகலாம். எந்த சேனாதிபதிக்கோ ஏவல் செய்பவளாய் நடத்திக் கொண்டு போகலாம். மதுரையோ, குமரி தேசமோ அனுப்பலாம். நான் பேசுகிற தமிழ் உனக்குப் புரிகிறதா...? பெண்ணுக்கு தேசமுமில்லை, மொழியுமில்லை..."

"போரென்று வந்தால் முதலில் செத்துப் போவது யானைகளோ, குதிரைகளோ இல்லை. பெண்கள்தான். வலிவுமிக்க என் நாடு சாம்பலாயிற்று. தஞ்சையும், மதுரையும் கூட ஒரு நாள் சாம்பலாகும். அப்போதும்

பெண்கள்தான் வேதனைப்படப் போகிறார்கள். இரக்கமற்ற ஆண்களின் குணத்திற்கு முதல் பலி பெண்தான்."

கிழவி உரக்கச் சொல்லி நிறுத்தினாள். நரிப்பள்ளி பெண் ஒருத்திக்குக் கோபம் வந்துவிட்டது.

"இதையே சாளுக்கியர்கள் ஜெயித்திருந்தால் சொல்வாயா? சோழர்கள் தோற்று ஓடிப் போயிருந்தால் இப்படிப் பேசுவாயா?"

"போர் பற்றி உனக்குத் தெரியவில்லை. போரில் ஏற்படுகின்ற வேதனைகளை நீ நேரே பார்த்ததில்லை. நான் விதவையா, கட்டுக்கழுத்தியா என்பது கூட எனக்குத் தெரியாது. சோழர்கள் வருவதை வேவு பார்க்கச் சென்றவன் என் புருஷன். அவனைக் கைது செய்து, கால் விலங்கிட்டு குடந்தைக்கு அனுப்பியதாகச் சொல்கிறார்கள். ஏதோ கங்கை கொண்ட சோழபுரமாமே. அங்கு கல் உடைக்கும் பணியில் ஈடுபட்டிருப்பதாய்ச் சொன்னார்கள். அவன் இருக்கிறானா, இல்லையா என்பது தெரியவில்லை. அவன் இறந்து போனான் என்று தெரியாத வரையில் நானும் அறுக்கிறதாய் இல்லை. என்றேனும், எங்கேயும் கைப்பற்றியவனைக் கண்டுபிடித்து விடமாட்டோமா என்ற நப்பாசையில்தான் இருக்கிறேன். இங்கிருந்து கங்கைகொண்ட சோழபுரம் எவ்வளவு நாள் பயணம்?" கிழவி விசாரித்தாள்.

"மூன்று நாள் பயணம்" கிரமத்துப் பெண் பதில் சொன்னாள்.

"என்ன கண்டுபிடித்து விட்டீர்களா?" மூக்கு சிறியதாயிருந்த இளம் பெண் ஒருத்தி அருகே வந்து உட்கார்ந்தாள். கிழவி இல்லை என்று உதடு பிதுக்கிற்று.

"இது யார்?" கிராமப் பெண்கள் விசாரித்தார்கள்.

"என் கணவரின் மூன்றாவது மனைவி. குடகு தேசத்தை சேர்ந்த பெண். எங்கேயோ பிறந்து, எங்கேயோ வளர்ந்து, எங்கேயோ வாழ்ந்து, எங்கேயோ போகப் போகிறாள். என்னை விட்டுப் பிரியாமலிருங்கள் என்று தினமும் என்னைக் கெஞ்சுகிறாள். சேர்வதும், பிரிவதும் நம் கையிலா இருக்கிறது. எவளுக்குத் தாதியாய் வாழப் போகிறாளோ, எந்த சேனாதிபதிக்கு விசிறுவதற்காகப் போகப் போகிறாளோ தெரியவில்லை."

மழை வரவில்லை. வெப்பமும், புழுக்கமும் தாக்கின. முரண்டு செய்து தற்கொலைக்கு முயன்ற சில பெண்களின் கைகளில் விலங்கு போடப்பட்டிருந்தார்கள். தூக்கத்தில் புரளுகின்ற அந்தப் பெண்களின் விலங்கொலிகள் நாராசமாய்க் கேட்டன.

"சிறு பெண்ணாக இருக்கிறாயே, உன் கணவரும் போருக்குப் போயிருக்கிறானா?"

"இல்லை. இவள் முறை மாமன் போருக்குப் போயிருக்கிறான். அவன் திரும்பி வரக் காத்துக் கொண்டிருக்கிறாள்."

"வரட்டும். நல்லபடி வரட்டும். ஊத்தையடையாமல் வரட்டும். சர்வேஸ்வரா..."

அந்தக் கிழவி கர்பக்கிரகம் நோக்கிக் கை கூப்பினாள். சடேரென்று மழை தரையைத் தாக்கியது. காற்றுக்காக படிகளில் உட்கார்ந்து கொண்டிருந்தவர்கள், மண்டபத்துக்கு உள்ளே அடைந்தார்கள். இடி இடித்து தரை தொட்டது. அரசிளங்குமரிகள் திடுக்கிட்டு எழுந்தார்கள். தாதிகளைக் கட்டிப்பிடித்துக் கொண்டார்கள். விளக்குகள் தூண்டப்பட்டு பெரிதாய் எரிந்தன. சேந்தன் உமையாள் ஒரு அரசிளங்குமரிக்கு அருகே போய் அமர்ந்து கொண்டாள். அவள் கைகளில் விலங்கு போடப்பட்டிருந்தது.

நல்ல உயரம். ஆனால், குறுகிய உடம்பு. சிறிய மார்புகள். கனிந்த உதடுகள். சோர்வும், பயமும் முகத்தில் அப்பியிருந்தன. கைது செய்யப்பட்டு வந்தாலும் அரசி என்கிற கர்வம் போகவில்லை.

"யார் இவள்? உமையாளைப் பார்த்து சாளுக்கிய மொழியில் கத்தினாள்.

கிழவி பதில் சொன்ன பிறகு, "அருகில் வராதே" என்று பாம்பைப் போல் சீறினாள். கிழவி பதிலுக்கு அதட்ட... அவளையும் முறைத்தாள்.

"ஏன் கோபப்படுகிறார்கள்?" என்று உமையாள் மிருதுவாகக் கேட்க, கிழவி பதிலுக்குச் சிரித்தாள்.

"இப்படியும் சில ஜென்மங்கள். தான் பேரழகி என்ற கர்வம். பிணமாகிற வரையில் சில பெண்களுக்கு விடாது போலும்."

"அப்படியொன்றும் அழகி இல்லையே..."

"அது உனக்கும், எனக்கும் தெரிகிறது. அவளுக்குத் தெரியவில்லையே..."

"சரி, அழகியாகவே இருக்கட்டும். நம்மை நோக்கி சீறுவானேன்?"

"க்ஷத்ரிய வம்சத்தைச் சேர்ந்த என் அருகே ஒரு வேளாளப் பெண்ணை அமரச் செய்கிறாயே?" என்று கத்தினாள்.

"பிறகு?"

"அரசருக்கு அனுக்கியாய், கிழத்தியாய் அவள் மாறினால் உன்னை உட்கார வைத்ததற்காக என்னை உயிரோடு சுட்டுப் பொசுக்குவாள்."

"அசிங்கமாக அல்லவா பேசுகிறாள்?"

"வேறு எப்படிப் பேசுவாள். காமக் கிழத்தியின் மகள் காமக் கிழத்தியாகத்தான் இருக்க வேண்டும்..."

"உங்களுக்கு குழந்தைகள் இல்லையா?"

"ஒரே ஒரு மகன். சமணப் பள்ளியில் படித்தான். மருத்துவம் முக்கியப் பாடமாகப் படித்தான். விருது ஏற்றான். கடல் கடந்து ஈழம் போகிறேன் என்று போய் விட்டான்."

"துறவியாய் மாறிவிட்டாரா...?"

"துறவி ஆனானா என்பது தெரியவில்லை. துறவியாவதற்கான பயிற்சி அவனுக்குக் கொடுக்கப்பட்டது."

"உங்கள் மகன் துறவியானது உங்களுக்கு வேதனையாக இல்லை..."

"முதலில் இருந்தது. வம்சாவழி அற்றுப் போகிறதே என்கிற வேதனை இருந்தது. ஆனால், என் மகன் போருக்குப் போக மாட்டான். வாள் ஏந்த மாட்டான். எவரையும் வெறியோடு வெட்டித்தள்ள மாட்டான். எவரையும் கசையிலடித்துத் துன்புறுத்த மாட்டான். பெண்கள் தலைமயிறைப் பற்றியிழுத்து வந்து அவளைக் கிழத்தியாகவோ, பொது மகளிராகவோ மாற்றுவதற்கு நிற்பந்திக்க மாட்டான் என்கிற நிம்மதி போதும் என்றிருக்கிறது..."

"வேதனைப்பட்ட பெண்ணாகிய எனக்குப் பிறந்த பிள்ளை, எவரையும் வேதனைப்படுத்த மாட்டான் என்கிற நிம்மதி வந்து விட்டது."

"ஆக, உங்களுக்குப் புருஷனும் துணையில்லை. பிள்ளையும் துணையில்லை."

அதனாலென்ன? எனக்கு நானே துணை." கிழவி சாதாரணமாகக் கூறினாலும், அவள் குரலுக்குப் பின்னே ஒரு வேதனையிருந்தது.

சற்று நேரம் மௌனமாக நின்ற கிழவி, மறுபடியும் பேசினாள்.

"நல்ல வேளை. எனக்கு தலை நரைத்த பிறகு சோழர்கள் படையெடுத்து வந்தார்கள். இல்லையெனில் வாடி என்று கைபிடித்து, இழுத்தவர்களோடெல்லாம் நான் படுக்க வேண்டியிருக்கும். அடிமைப் பெண்கள் தேவரடியார்களைவிடக் கேவலமானவர்களாக நடத்தப் பெறுவார்களென்பது எனக்குத் தெரியும். உயிர் கொடுத்து உயிர் வாங்கி எங்களைப் பிடித்து வந்தவர்களல்லவா? அதனால் மிருகங்களைப் போல நடத்துகிறார்கள். தேவரடியார்களுக்குத் தெரிந்த ஆட்டமோ, பாட்டோ, யாழ் மீட்டலோ எதுவும் தெரியாது. எனவே, போகத்திற்கு மட்டும் என்று எங்களை ஒதுக்கித் தனியே வைத்து விடுவார்கள். பழையறைக்கு அருகேயுள்ள கரந்தையில் சிறையெடுத்த பெண்களுக்காக தனியே வேயம் அமைத்திருக்கிறார்களாமே..."

"ஆமாம்... கேள்விப்பட்டிருக்கிறேன்..."

"சோழன் ஜெயித்துவிட்டான். என்னை சிறைப்பிடித்து வைத்து விட்டார்கள். சாளுக்கியம் ஜெயித்திருந்தால் உன்னை சிறைபிடித்துக் கொண்டு வந்திருப்பார்கள்."

"அப்போதும், இப்படிப் பேசுவீர்களா? பெண்களுக்காக பரிந்து குமுறுவீர்களா? அவர்களைத் துன்புறுத்த வேண்டாம் என்று தடுப்பீர்களா?"

"அப்படித் தடுத்ததன் விளைவுதான், என் புருஷனின் மூன்றாவது மனைவி, இந்தக் குடகுக்காரி. இவளை ஊருக்குப் பொது மகளாக ஆக்க வேண்டுமென்று ஏக கூச்சல்கள். இவள் அழகையும், இளமையையும் பங்கு போட்டுக்கொள்ள வேண்டுமென்று பலமான ஆர்ப்பாட்டங்கள். இவள் பூப்படையும் முன்பே திருமணமாகிவிட்டதாம். இவள் புருஷனின் தலை போரில் துண்டிக்கப்பட்டதும், பசுவை இழந்த கன்று மாதிரி கதறிக் கொண்டிருந்தது. காலா காலத்தில் எனக்கு ஒரு மகள் பிறந்திருந்தால், அவளுக்கு இந்த வயதுதானே இருந்திருக்கும். மயங்கி விழுந்தவளை வாரியெடுத்துக் கொண்டு வந்துவிட்டேன். சேனாதிபதி விரும்பினார் என்று நினைத்து அமைதியாகி விட்டார்கள். ஒரு விஷயம் தெரியுமா? என் புருஷனும் இவளை இன்று வரை தொடவே இல்லை. இவளும் அவர் எதிரே நின்றதில்லை. என்னோடு மட்டும்தான் பேசுவாள். நான்

இருக்குமிடத்தில்தான் இருப்பாள். இந்தப் போருக்குப் பிறகுதான் என் புருஷனைப் பற்றி அதிகம் விசாரிக்கிறாள். அவர் உயிரோடு இருக்க வேண்டுமென்பதற்காகவே ஒரு வேளை உணவு மட்டுமே உண்டு, நோன்பிருக்கிறாள். இரவு உணவு உண்பதே இல்லை. எதற்கு என்று கேட்டால், உங்களுக்காக நோன்பிருக்கிறேன் என்று என்னைச் சுட்டிக் காட்டுகிறாள்.

"சரி, நீங்கள் இரண்டாவது, இவள் மூன்றாவது. முதலாவது யார்?"

"கொன்று விட்டார்கள்."

"ஐயோ...! எப்போது?"

""பதினைந்து தினங்களுக்கு முன்பு."

"ஏன்?"

"அந்தப்புரத்திற்குள் நுழையக் கூடாதென்று வாள் நீட்டித் தடுத்தார். தட்டி விட்டு உள்ளே போனார்கள். தட்டிய சோழ வீரனை அக்கா வெட்டி வீழ்த்தினார்கள். சொடுக்கு நேரத்தில் நெஞ்சிலும், வயிற்றிலும், தொண்டையிலும் மூன்று கத்திகள் பாய்ந்தன. எங்கள் கண் முன்னே அந்தக் கோரச் சம்பவம் நடந்தது."

"ஜெம்புநாதா..." உமையாள் வேதனையால் முகம் பொத்திக் கொண்டாள். உண்மைதானா இது என்பது போல் கிழவியைப் பார்த்தாள்.

"பெண்களில் பலவகை உண்டு உமையாள். எவனுக்கு காமக் கிழத்தியாவோம் என்று கனவு காண்பவரும் உண்டு. கத்தியால் குத்தப்பட்டு செத்தவரும் உண்டு. என்னைப் போல் வெள்ளத்தில் மிதக்கின்ற நெற்றுத் தென்னையான பெண்களும் உண்டு. என் கவலையெல்லாம் வாழ்ந்தே அறியாத இந்தக் குடகுப் பெண்ணுக்கு எந்த இழுக்கும் வரக்கூடாது என்பதே..."

"சிறை பிடித்து வரப்பட்ட பெண்களுக்கு எந்தத் துன்பமும் நேரக் கூடாதென்று நான் செம்பை மாதேஸ்வரருக்கு வேண்டிக் கொள்கிறேன். வேறு என்ன என்னால் செய்ய முடியும்?" உமையாள் கை கூப்பினாள்.

"அது போதும் உமையாள். உனக்கு நல்ல புருஷன் கிடைக்கட்டும். அவன் போரில் ஊத்தையடையாமல் நீண்ட நெடுநாள் வாழட்டும். நிறைய குழந்தைகள் உனக்குப் பிறக்கட்டும். நிலமும், நீச்சுமாய், மாடும் கன்றுமாய், நெல்லும், வரகுமாய் நீங்கள் வாழ நானும் பிரார்த்தனை செய்து கொள்கிறேன்."

அந்தக் குடகுப் பெண் சுருண்டு படுத்துக்கொள்ள, கிழவியும் தூணோரம் படுத்துக்கொண்டாள். வெளியே குடி வெறியில் பாடும் பாட்டும், அவ்வப்போது வெறியில் ஊதும் எக்காளமும் கேட்டன. கிராமம் தூங்கவேயில்லை என்பது தெரிந்தது. கிழவி புரண்டு படுத்தாள்.

கால் குடைச்சல் என்று மறுபடி எழுந்து கொண்டாள். கிழவியை அழுத்திப் பிடித்துத் தூங்க வைத்து அவள் கால்களை உமையாள் பிடித்துவிடத் துவங்கினாள்.

"நான் கைதி உமையாள்... என் காலை எதற்குப் பிடிக்கிறாய்?"

"அதனாலென்னா? நீங்கள் வாழ்ந்தவர். நன்கு வாழ்ந்து நல்ல பிள்ளை பெற்றவர். பாவப்பட்ட பெண்ணுக்குத் துணையாக நின்றவர். குடகோ, தொண்டை நாடோ, சோழமோ பெண்களுக்குப் பெண்கள்தாம் துணை. பெண்ணுக்குப் பெண் எதிரியானால், ஊரில் மழை பெய்யாது. பயிர் விளையாது. உறங்குங்கள்."

உமையாள் கால் பிடித்துவிட்ட சுகத்தில் கிழவி அயர்ந்துத் தூங்கினாள். கோவில் கர்ப்பக் கிரகத்தில் மட்டும் சிறிய விளக்கு எரிந்து கொண்டிருந்தது. விளக்கையே

பார்த்துக் கொண்டிருந்துவிட்டுக் கண் மூட, கண்ணுக்குள் விளக்கு தெரிந்தது. விளக்கு பெரியதாகி தீயெழுந்து அவள் வீட்டை எரித்தது. ஊர் முழுவதும் பரவியது.

அவள் தாத்தா உருவிய வாளோடு முன்னும், பின்னும் ஓடினார். கத்தியை வீசி நெருப்பை வெட்டினார். ஒரு பெரிய கத்தி காற்றில் வந்து அவர் தலையை வெட்டியது. தலை வேறு, முண்டம் வேறாகியது. அவள் வாய்விட்டுக் கத்தினாள். யாரோ ஆதரவாகப் பிடித்துக்கொண்டார்கள்.

"கவலைப்படாதே. உனக்கு நல்ல புருஷன் கிடைப்பான்" என்று தலை நரைத்த கிழவி அவள் காதிலே சொன்னாள். அவளை உதர, விழிப்பு வந்துவிட்டது.

கோவிற் பெருங்கதவைத் திறந்து தீப்பந்தங்கள் உள்ளே நுழைந்தன. விடியப் போவதை குளிர் காற்றும், குயில் கூவலும் அறிவித்தன.

"பெண்கள் எல்லோரும் எழுந்திருங்கள்" என்று கனத்தக் குரல் கட்டளையிட்டது. ராஜேந்திர சோழன் ஊர் எல்லை நோக்கி வந்து கொண்டிருக்கிறாராம். படைகள் புறப்பட்டு விட்டனவாம். மழையாக இருப்பதனால் கோவில் பகுதியில்தான் தங்க ஏற்பாடாம்.

பெண்களைப் பல பகுதிகளாகப் பிரித்து கிராமங்களிலுள்ள வீட்டிற்கு அனுப்பப் போகிறார்களாம்.

உமையாள் கிழவியையும், குடகுக்காரியையும் எழுப்பினாள். விவரம் சொன்னாள். கிழவி, தன் வயதொத்த பெண்டிரை சேர்த்துக்கொள்ள, பதினோரு பேர் அவள் தலைமையில் உமையாள் வீட்டுக்கு அனுப்பப்பட்டார்கள்.

வேலியும், திறந்த வெளித் தோட்டமும், நெல் உலர்த்தும் மண் தரையும் தாண்டி பெண்கள் வீட்டிற்குள் அடியெடுத்து வைத்தார்கள். இரண்டு பக்கத் திண்ணையுள்ள வீட்டிற்குள் நுழைந்தார்கள். இரண்டு கட்டு வீடைத் தாண்டி கொல்லைப்புரத்தில் போய் அமர்ந்து கொண்டார்கள். உமையாள் செப்புத் தவலையும், கயிறும் கொடுக்க, கிழவி குளிப்பதற்கு நீர் இறைக்கத் துவங்கினாள். பல் துலக்க வேப்பந்தழையை ஒரு பெண்மணி உடைக்க, அவர்கள் நீர்ச்சொம்போடு செடிகளுக்கு நடுவே போனார்கள். பருப்பும், அரிசியும் கலந்து பெரிய பானைகளில் உமையாள் கஞ்சி தயார் செய்தாள். மிளகு கலந்து துவரை அவித்தாள். கீரைகளைப் பறித்து சிறிது உப்பிட்டு வேகமாய் மசியலாக்கினாள்.

குளித்து வந்த பெண்களுக்கு புதிய மண் சட்டிகளில் கஞ்சியும், இலையில் துவரையும், கீரை மசியலையும் பறிமாறினாள்.

"உனக்குக் கோலமிடத் தெரியுமா?" ஒரு பெண்மணி கேட்க—

"தெரியும். ஆனால், நன்றாக வராது" என்று வெட்கத்துடன் உமையாள் பதில் சொன்னாள்.

அவள் வீட்டு முற்றத்தில் பெரிய இழைக் கோலம் போடப்பட்டது. தென்னம் ஓலையில் கீறி, மடித்து புது விதமாய் தோரணங்கள் கட்டப்பட்டது.

"இதை வாசலில் மாட்டு. இதை உங்கள் ராஜேந்திர சோழர் பார்த்துவிட்டுப் பரவசமாகட்டும். தான் கொள்ளையடித்த பண்டாரத்திலிருந்து உனக்குப் பரிசுகள் தரட்டும். அனுபவி போ..."

"உன் தலைவிதிக்கு இவளை ஏன் கோபித்துக்கொள்கிறாய்?" அந்தப் பெண்மணியை கிழவி அதட்டினாள்.

"வயிறார சோறு போட்டவளை நான் கோபித்துக் கொள்வேனா? என் கோபமெல்லாம் ஆண்கள் மீதுதான்."

வெளியே ராஜேந்திர சோழனின் வருகை அறிவிக்கப்பட்டது.

திருமன்னி வளர
இரு நில மடந்தையும்
போர் செயப்பாவையும்
சீர்தனி செல்வியும்
தன்பெரு தேவியாராகி...

என்று தொடங்கி, பல போர்களில் அவர் கொண்ட வெற்றியைப் பறை சாற்றியது.

அந்தப் பெண்கள் கொல்லைப் புறம் போய் அமர்ந்து கொண்டார்கள். உமையாள் வாசலை நோக்கி ஓடினாள். பெரிய எக்காளங்கள் முதலில் வந்தன. சோழர் கொடியைத் தாங்கி பல நூறு குதிரைகள் பின்னே வந்தன. முதலில் வலங்கை படையினரும், பிறகு இடங்கைப் படையும் வந்தார்கள். பிறகு தெரிஞ்ச கைக்கோளர் படை வந்தது. நூற்றுக் கணக்கில் யானைகள் நடத்திச் செல்லப்பட்டன. யானையிலிருந்து துணிகளையும், வினோதமான பாத்திர பண்டங்களையும், பொன், வெள்ளிக் காசுகளையும் கிராமத்துத் தெருக்களிலே இரைத்துக் கொண்டு போனார்கள்.

சில யானைகள் மீது நீல நிறக்கல்லில் சிற்ப வேலைப்பாடமைந்த தூண்கள் வந்தன. யானைகளுக்குப் பிறகு வேதியர் கூட்டம் அரசரைப் பார்த்தபடியே வந்தது.

நூற்றுக் கணக்கில் வேதியர்கள் தாண்ட, தனியே ஒரு யானை மீது ராஜ ராஜ சோழனுடைய திருக்குமாரர்,

சோழர் சாம்ராஜ்யத்தை விரிவுபடுத்திய வீரர், அகலமான மார்பை முத்துக்களும், நவரத்தினங்களும் அலங்கரிக்க வந்தார்.

குதிரைப் படை வீரன் ஒருவனால் உமையாளின் வீடு ராஜேந்திர தேவருக்கு காட்டப்பட்டது. தாத்தாவின் பெயர் கூறி அவர் எங்கே என்று விசாரிப்பு நடந்தது.

"ராஜேந்திர சோழத் தேவர் வாழ்க!" என்று தாத்தாவின் குரல் பிளிறலாய்க் கேட்டது. தாத்தா தன் முன் மெல்லிய மூங்கிலை நட்டு வைத்திருந்தார். நீண்ட முள் முடியை மூங்கிலின் நுனியில் இறுக்க முடிந்திருந்தார். நெற்றி முழுக்கத் திருநீரும், இடையில் புது ஆடையும் அணிந்திருந்தார். "எங்க ராஜா ராஜேந்திர சோழ தேவர் வட தேசத்துப் போரில் ஊத்தையடையாமல் வெற்றியோடு ஊர் திரும்பி வந்ததால் அப்படித் திரும்பி வர ஜம்புகேஸ்வரர் அருள் செய்ததால் நான் வேண்டிக் கொண்டபடி என் உயிரை ஜம்புகேஸ்வரருக்கு நரபலியாய்த் தருகிறேன். என் உடமையையும், உறவையும் ஜம்புகேஸ்வரர் காப்பாற்றட்டும். வாழ்க சோழ நாடு, வாழ்க ராஜேந்திரர், வாழ்க சோழ மன்னர் பரம்பரை, வளர்க சைவம்" என்று தாத்தா வெறிபிடித்தவர் போல் வாள் உயர்த்திக் கத்தினார். அவரைச் சுற்றி நின்ற கூட்டம் விலகிக் கொண்டது.

"அடேய், இரு" என்று மன்னர் கத்த, தாத்தா இடது முழங்கால் மடித்து தரையில் வைத்துக் கொண்டார்.

வலது பாகம் பூமியில் உறுதியாக நின்றது. அவர் உட்கார, மூங்கில் வளைந்து குடுமியை மேலே இழுத்தது.

"வீரனே, சற்று இரு" மாராயர்கள் கூச்சலிட்டார்கள்.

தாத்தா வாள் உயர்த்தி அரசரை வணங்கினார். வாளின் கைப்பிடி வளையத்தில் விரல் விட்டு வேகமாகச் சுழற்றினார். தலை குனிந்தார். சுழற்றிய வாளை ஓங்கி கழுத்தில் போட்டுக் கொண்டார். காலை வெய்யிலில் பளபளத்த அந்த வாள் விசுக்கென்று சத்தத்தோடு, அவர் கழுத்திலிறங்கியது. தலை துண்டாகியது. துண்டான தலையுடன் மூங்கில் நிமிர்ந்து ஆடியது. சுற்றியுள்ளவர்கள் மேலெல்லாம் ரத்தம் தெறித்தது. தலையில்லாத உடம்பு மட்டும் இரண்டு கைகளாலும் வாளை எடுத்து, மன்னர் முன்னே தரையில் வைத்தது. உடம்பிலிருந்து ரத்தம் பெருகி மண் முழுவதும் சேறாயிற்று. தாத்தாவின் உடல் தரையில் விழுந்தது. உடம்பு சரிந்தது.

மூங்கிலில் ஊசலாடும் தலையை யாரோ ஒருவன் பிடித்து நிறுத்தினான். கண்கள் நிலை குத்தி மன்னரையே பார்த்தன. உதடு இடைவிடாது, "வாழ்க ராஜேந்திரன்... வாழ்க ராஜேந்திரன்" என்று முணுமுணுத்தது. உடல் சரிந்ததும், உதடுகள் அசைவை நிறுத்தின. கண்கள் சொருகின. நீண்ட எக்காளத்தை யாரோ பலமாக ஊதினார்கள்.

"தாத்தா" என்று உமையாளிட்ட அலறல், அந்த எக்காள சத்தத்தில் மங்கிப் போயிற்று.

"போரில் மகன் பெற்ற பெருமைக்கு சிறிதளவு தானும் குறையக் கூடாது என்கிற எண்ணம் கிழவருக்கு. போருக்குத் தன்னை அழைத்துப் போக மாட்டார்கள் என்கிற வேதனை. அதனால்தான் இப்படி தன்னைப் பலி கொடுத்துக்கொண்டார்" ஊர் முணுமுணுத்தது.

அவர் உடம்பைக் கொண்டு வந்து வீட்டு வாசலில் போட்டார்கள். தலையை அங்கே பொருத்தி அசையாமலிருக்க கற்களை வைத்தார்கள். ராஜேந்திர சோழத் தேவர் யானையை விட்டுக் கீழிறங்கினார். உறவு யார் யார் என்று விசாரித்தார்.

உமையாளைக் கொண்டு வந்து நிறுத்த, அவளை நோக்கி கை கூப்பினார். இரண்டு படி பொற்காசு அவர் கைப்பட திண்ணையில் கொட்டினார். முத்து ஆரமும், தங்க ஒட்டியாணங்களும், அவர் சொல்ல வைக்கப்பட்டன. இறந்து போனவர்கள் குடும்பத்திற்கு, இறந்து போனவர்கள் மன ஆறுதலுக்காக தென் பெண்ணைக் கரையோரமிருக்கும் பத்து வேலி நன்செய் நிலம், ஒரு குழிக்கு ஒரு பொற்காசு வீதம் விலைக்கு வாங்கப்பட்டு அந்த நிலம் இறந்து போனவர்களுடைய சந்ததிகள் அனுபோகத்திற்கென்று தரப்படும். இந்த நிலத்திற்கு வரி விலக்கு உண்டு. வரி வசூலிக்கப்பட மாட்டாது என்று அறிவிக்கப்பட்டது.

துக்கத்தால் சுருண்டு கிடந்த உமையாளின் தாயார் பெயரில் இந்நிலம் பதிவு செய்யப்பட்டது.

அரசர், ஓடையில் குளித்துவிட்டு கோவிலுக்குப் போனார்.

தாத்தா இருந்த இடம் நீர் ஊற்றிச் சுத்தம் செய்யப்பட்டது. இறந்து போன தாத்தாவின் வயிற்றை வாளால் கீறி ஊருக்கு வெளியே எடுத்துப் போனார்கள். உயர சிதை அடுக்கி, அதில் தாத்தாவை வைத்துத் தகனம் செய்தார்கள். அரசர் உமையாளின் தாய்க்குக் கொடுத்த நிவந்தத்தை ஜம்புகேஸ்வரர் கோவிலின் உட்பிரகாரச் சுவரில் நிரந்தர சாசனமாய் செதுக்கும்படி கட்டளையிட்டார்.

சந்திர சூரியர் உள்ள வரையில் அவர் பரம்பரையினர் இந்தப் பத்து வேலி நிலத்தையும் அனுபவிப்பாரென்றும், இந்த அனுபோகத்திற்கு கெடுதல் விளைவிப்பவர்கள் கங்கைக் கரையில் காராம் பசுவைக் கொலை செய்த பாவத்திற்கு நிகரான பாவம் செய்தவர்கள் ஆவார்கள் என்று கல்வெட்டு பொறிக்கப்பட்டது.

"இன்னும் வேறெதுவாவது உமையாளுக்கு வேண்டுமா கேட்டு வா" என்று அரசர் மாராயர்களைத் தூண்ட, அவர்கள் வீட்டுக்குள் வந்து அழுது கொண்டிருந்த உமையாளைக் கேட்டார்கள்.

"அரசர் மனம் நெகிழ்ந்திருக்கிறார். உன் தகப்பனாரால், பாட்டனாரால் இந்த நரிப்பள்ளி கிராமத்துக்கே விடிவு வந்தது. தரிசு நிலங்களை நல்ல நிலங்களாக்க ஊர் முழுவதும் வாய்க்கால் வெட்டச் சொல்லியிருக்கிறார். ஜம்புநாதர் கோவில் குளம் தூரெடுக்கப்படும். கோவிலுக்கு

விளக்கெரிக்க ஆடுகளும், மாடுகளும் தந்திருக்கிறார். உன் கிராம சபை திக்கு முக்காடியிருக்கிறது. ஏரி வெட்டச் சொல்லி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதுதான் சரியான நேரமென்று பல வசதிகள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நீ அழுது கொண்டிருக்காதே. உன் தாய் வரமுடியா விட்டாலும், நீயாவது கோவில் வாசலுக்கு வா. என்ன வேண்டுமானாலும் அரசரிடம் கேள். அரசர் இப்போதிருக்கும் மனோ நிலையில் இந்த ஊர் முழுவதையும் உனக்கு எழுதித் தரும்படி கேட்டாலும் தருவார். எழுந்திரு உமையாள். வந்து அரசரிடம் பேசு."

கோவில் வாசலுக்கு உமையாள் வந்ததும் வணங்கினாள். அரசர் வெளியே வந்தார். மறுபடியும் வணங்கினாள்.

"என்ன வேண்டும் கேள் உமையாள்?"

தகப்பனைவிட வயது முதிர்ந்தவராயிருந்த ராஜேந்திர சோழனை நிமிர்ந்து பார்த்தாள்.

"எனக்கு தாயும், தந்தையும் நீங்களே..."

"உண்மை உமையாள்... அரசனே குடி மக்களின் தந்தை, தாய். நீ என்ன கேட்டாலும் தருவேன் கேள். உன் தந்தை செய்த போர் இன்னும் என் கண் முன்னே நிற்கிறது. சோழர்களின் வெற்றிக்கு அவர்கள் வீரச்செயலே காரணம். என் பொருட்டு தன்னுயிர் ஈந்தவன் குடும்பத்தை

இந்த ராஜேந்திரன் உயிர் உள்ளவரை மறவான். என்ன வேண்டுமானாலும் கேள்."

சேந்திர உமையாள் மெல்ல அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"என் வீட்டில் பதினோரு பெண்கள் தங்கியிருக்கிறார்கள்..."

"எந்தப் பெண்கள்?"

"நீங்கள் சாளுக்கிய தேசத்திலிருந்து கொண்டு வந்த அடிமைப் பெண்கள்."

"சரி, என்ன அவர்களுக்கு?"

"அவர்களுக்கு விடுதலை தரவேண்டும். அவர்கள் எங்கு போக விரும்பினாலும் அனுமதிக்க வேண்டும்..."

"என்ன...?"

"அவர்கள் எங்கு போக விருப்பமோ அங்கு போக அனுமதி வேண்டும்."

"ம்..."

உமையாள் தொடர்ந்தாள். "அவர்கள் புருஷர்கள் கைது செய்யப்பட்டிருந்தால், சோழ தேசத்தில்

சிறையிலடைக்கப் பட்டிருந்தால் அவர்களும் விடுதலை பெற வேண்டும். அவர்கள் விருப்பப்பட்ட இடத்தில் விருப்பப்படி வாழ சோழ மன்னர் உதவி செய்ய வேண்டும்."

"உமையாள்... என்ன பேச்சு இது? உனக்கு என்ன வேண்டுமோ அதைக்கேள். கைது செய்யப்பட்டவர்கள் மன்னரின் சொத்துக்கள். அதைக் கேட்க உனக்கு உரிமை இல்லை. உதவி என்னவென்று கேட்டால், மன்னரின் மகுடத்தையே கேட்பாயா? அரியணையில் உட்கார வேண்டுமென்பாயா...?" என்றார் ஒரு மாராயர்.

"சிறுமி என்பதால் உன்னை மன்னித்தேன்" வேறொரு மாராயர் சீறினார்.

"அப்படியானால், மன்னருக்கு பட்டமகிஷியாக வேண்டும் என்று கேட்டிருக்கலாமே... உமையாளுக்கு இன்னும் திருமணமாகவில்லையே..."

இன்னொருவர் பேச, ஊர் சிரித்தது. ராஜேந்திரர் சீறலாய் பார்க்க அமைதியாய் இருந்தது.

"கேட்பதற்கு எத்தனையோ இருக்க, இவர்களின் விடுதலையை ஏன் கேட்கிறாய் பெண்ணே?" ராஜேந்திரர் கவலையோடு பேசினார்.

"போரால் பெண்களுக்கு பாதிப்பு என்னவென்பது பெண்ணாகிய எனக்குத்தான் தெரியும். என் வீடு தந்தையும் இழந்து, பாட்டனையும் இழந்து பத்து வேலி நிலத்தைப் பரிசாகப் பெற்றிருக்கிறது. இதைப் பயிர் செய்யவோ, பாதுகாக்கவோ ஒரு பெண்ணால் முடியாது. இதற்கு ஆண் துணை அவசியம். ஆண் துணையில்லாத எங்கள் நிர்கதியை நீங்கள் பரிசளித்த போது புரிந்து கொண்டேன். ஊர் துணை நிற்கிற எனக்கே இத்தனை பயம். உடுத்த மாற்றுத் துணி கூட இல்லாத பெண்களைப் பற்றி யோசித்தேன். அவர்கள் குடும்பத்தோடு ஒன்றாகச் சேர்ந்தால் என் குடும்பம் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன். அவர்கள் நல்ல குலத்துப் பெண்கள். அவர்கள் பொது மகளிராகவோ, தேவரடியார்களாகவோ மாற்றப்படக் கூடாது. என் வீட்டு வாசலை மிதித்தவர்கள் இழிவுபடுத்தப்படாமல் நடத்தப்பட வேண்டும்."

ராஜேந்திரர் சற்று யோசித்தார்.

"தொண்டை நாட்டுப் பெண் அல்லவா. அதனால்தான் நிதானமாய் யோசித்திருக்கிறாய். தஞ்சையைவிட தொண்டை நாட்டில் படித்தவர்கள் அதிகம். அது உன்னையும் பாதித்திருக்கிறது. மகளே, நீ கேட்டவை இப்போதே தந்தேன். உன் வீட்டிலிருக்கிற பதினோரு பெண்களும் உன் உடைமைகள். சோழ தேசத்தில் அவர்களுக்கு விடுதலை உண்டு. அவர்கள் ஆளுக்கொரு ஆண் மகனை விடுதலை பெறச் செய்யும் உரிமையும் உண்டு. தனித்தனியே அவர்கள் பெயரெழுதி

அவர்களுக்கு ஓலை தரப்படும். என் முத்திரை பதித்த ஓலையை அவர்கள் காட்ட, எங்கு வேண்டுமானாலும் போகலாம். வேறென்ன வேண்டும் உமையாள்?" மன்னர் கனிவுடன் கேட்டார்.

"உமையாளுக்கு தெரிந்த முறைப் பையன் கைகோளர் படையிலிருக்கிறான். அவனைத் திருமணம் முடிந்த பிறகு தஞ்சைக்கு போகுமாறு உத்திரவிட வேண்டும்" என்றார் ஊர் பெரியவர் ஒருவர்.

"யாரது?" மன்னர் விசாரித்தார்.

நான்கு ஆண்டுகள் முன்பு வடக்கே போன மாமனை, அங்காடி பொன்தாமனைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

பொன் தாமன் அரசரை வணங்கினான்.

"இந்த ஊரா உனக்கு?"

"ஆம் அரசே..."

"இவள்தான் உன் முறைப்பெண்ணா...?"

"ஆமாம் அரசே..."

"இவளை மணந்து கொள்ளச் சம்மதமா...?"

"தங்கள் கட்டளை..."

"உனக்கு இவரைப் பிடித்திருக்கிறதா உமையாள்...?"

உமையாள் பேசாது தலை குனிந்தாள்.

"ஊர் கூடி நாள் நிச்சயித்து, இவளுக்குத் திருமணம் செய்து வைப்பது கிராம சபையின் பொறுப்பு. இவர்களது திருமணத்தை நமது வெற்றியாய் இந்த ஊர் கொண்டாடும். இதற்காக மூன்று படி காசு என் பரிசு. மணமக்கள் நீண்டு வாழட்டும்..."

இருவரும் வணங்க, அரசர் தன் மேல் துண்டையெடுத்து உமையாளிடம் வீசினார்.

"ஆனால் உமையாள், உனக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். நாம் வடக்கே சாளுக்கியரை நோக்கிப் போகாதிருப்பின் சாளுக்கியர்கள் தெற்கே நம்மை நோக்கி வந்திருப்பார்கள். நீயும், உன் தாயும் இந்த ஊர் பெண்டுகளும் சாளுக்கிய தேசத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டிருப்பீர்கள். இப்போது உன்னோடு இருப்பவர்கள் அப்போது எப்படி நடத்துவார்கள் என்பதை என்னால் கற்பனை செய்ய முடிகிறது. முடிந்தால் நீ கற்பனை செய்துபார். அல்லது கற்றறிந்தவர்களோடு பேசு. இந்த பூமி உள்ளளவும், போர் என்கிற விஷயம் இல்லாமல் போகாது. உனக்கு ஜம்புகேஸ்வரர் உயர்வான வாழ்க்கையைத் தரட்டும். நீங்கள் போகலாம்."

மன்னர் அன்று மாலையே தஞ்சை நோக்கிப் பயணித்தார். ஊர் வெறிச்சோடிப் போயிற்று. பாட்டனார் இறந்த ரத்தச் சேறான இடத்தில் யானைகள் நடந்து போன தடங்கள் மட்டுமே மிஞ்சியிருந்தன. குதிரைச் சாணங்களும், நசுங்கிய பூக்களும், காய்ந்து போன தோரணங்களுமே நடந்த கதையைக் கூறிக்கொண்டிருந்தன.

விடுதலை ஓலையைக் கையில் வாங்குகிறவரை கிழவிக்கு நம்பிக்கை வரவில்லை. வாங்கிய பிறகு, அந்த ஓலையைப் படிக்கத் தெரியவில்லை. மூன்று நான்கு பேர்கள் உரக்கப் படித்து, விளக்கம் சொன்னதும், நம்பிக்கையுற்றாள். சேந்தன் உமையாளின் காலைக் கட்டிக்கொண்டு அழுதாள்.

"கடவுளைப் பார்க்க வேண்டுமென்பது என் நெடுநாள் ஆசை. இதோ பார்த்துவிட்டேன்" என்று உமையாளின் முகத்தைக் கைகளில் தேக்கிக்கொண்டு விம்மினாள்.

"உன்னை விட்டு உடனே போகப் போவதில்லை. எனக்குத் தெரிந்த சமையல் வேலைகள் அத்தனையையும் கற்றுக் கொடுத்துவிட்டுத்தான் நான் போகப் போகிறேன். உன் திருமணத்தை பார்த்து விட்டுத்தான் போவேன்" என்று பேசினாள். அந்த பதினோரு பெண்களும் நன்றியில் திளைத்தார்கள். தங்கள் விடுதலையை நம்ப முடியாமல் தவித்தார்கள். விடியலிலிருந்து இரவுவரை அந்த வீட்டுக்கு உழைத்தார்கள். தோட்டம் துப்புரவு செய்து காய்கள் பயிரிட்டார்கள். அரிசியிலும், வரகிலும், சோளத்திலும்

பணியாரம் சுடக் கற்றுக்கொடுத்தார்கள். நெல் குத்திப் போட்டார்கள். எள்ளிலிருந்து எண்ணை பிரித்தார்கள். சுவரிலும், திண்ணையிலும் கோலம் வரைந்தார்கள். பலவிதமாக உடுக்கச் சொல்லிக் கொடுத்தார்கள். அணிகளைப் பூணக் கற்றுக்கொடுத்தார்கள். பல்வேறு விதமான பாட்டுக்களைப் பாடிக் காண்பித்தார்கள். உமையாளின் அம்மாவிடம் பேசி மனம் தேற்றினார்கள்.

உமையாளின் புருஷன் பொன்தாமனை வரச்சொல்லி, ரெண்டு கட்டு வீட்டை நாலு கட்டாக கட்ட வேண்டிய அவசியத்தைச் சொன்னார்கள். கட்டுமானம் எப்படியிருக்க வேண்டுமென்று படம் வரைந்து காட்டினார்கள். வாழ்ந்த பெண்கள் பல்வேறுவிதமாய் உதவினார்கள்.

உமையாள் பொன்தாமன் திருமணம் விமர்சிகையாய் நடந்தது. சுற்றுமுள்ள பதினெட்டு ஊர்களும் விருந்திற்கு வரவைக்கப்பட்டன. நான்கு நாட்கள் மூன்று வேளை விதவிதமாய் வந்தோருக்கு உணவிடப்பட்டது.

கிராமத்தின் தலைவரைவிட, அதிக பொருள் வளமும், செல்வாக்கும், மரியாதையும் கொண்ட வீடாய் உமையாள் வீடு மாறிற்று. அது சிலருக்கு வலித்தது. வெளியே சொல்ல முடியவில்லை. தன் தலையை அரசன் முன்பு கொய்து கொண்டிருந்தால் தன் குடும்பமும் மரியாதையாகியிருக்கும். கொய்து கொள்ள தைரியமுமில்லை. அதனால் மரியாதையுமில்லை. உமையாளுக்குத் திருமணமான பதினோராம் நாள் புதிதாய்க் கட்டிய பின் கட்டில் அவளைத் தனிக்குடித்தனம்

வைத்துவிட்டு அந்தக் கிழவி மற்ற பெண்களோடு கிளம்பினாள்.

கங்கைகொண்ட சோழபுரத்தில் சாளுக்கிய வீரர்கள் கல்தூக்கும் கூலிகளாய் அடிமைகளாய் இருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டு அங்கே பயணப்பட்டாள்.

கூடவே குடகுப் பெண்ணையும் அழைத்துப் போனாள். அதில் நாலு பெண்கள் சாளுக்கிய தேசம் திரும்பினார்கள்.

நரிப்பள்ளியைவிட, தஞ்சை நகரத்தில் வாழ்தல் எளிது என்பதால் மீதிப்பெண்கள் பயணப்பட்டார்கள் தஞ்சையை நோக்கி. போகும் போது, ஒவ்வொருவரும் உமையாள் போல ஒரு நல்ல மனைவி கிடைப்பது அரிது என்று பொன்தாமனிடம் சொல்லிவிட்டுப் போனார்கள்.

பண்பட்ட பெண்களின் பேச்சினால் பொன்தாமன் தெளிவு பெற்றான். மனைவியிடம் பேசப் பேச அவள் தெளிவு பார்த்து மயங்கினான். அவள் சமைக்கிற உணவையும், பிற வேலைகளிலுள்ள நேர்த்தியையும் பார்த்துப் பாராட்டினான். தன் போர் அனுபவங்களை வருத்தத்தோடு பரிமாறிக் கொண்டான். நல்ல வேளாளனாய் உழுது, பயிர் செய்து, ஊருக்குக் கொடுத்துத் தானும் உண்ணுதலே சிறப்பு என்று சொன்னான்.

புதிதாய் வந்த சொத்துக்கு கர்வப்படாது, தானே சேற்றில் நின்று உழவு செய்தான். உழைத்தவர்களுக்கு

நல்ல கூலி வழங்கினான். ஊர்ச் சபையில் கலந்து கொண்டு போரற்ற வாழ்க்கை பற்றிப் பேசினான். மனைவியின் கருத்தைக் கேட்ட பிறகே நியாயம் வழங்கினான்.

கேளிக்கையும், சல்லாபமுமாய் கொஞ்சலும் கிண்டலுமாய் வாழ்க்கை சுகமாய்ப் போயிற்று.

ராஜேந்திரர் போர் செய்து கொணர்ந்த செல்வங்கள் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. மாடுகளும், ஆடுகளும் இலவசமாய்க் கிடைத்தன.

மன்னர் கட்டளைப்படி, போர் வீரர்கள் வயல் வேலை செய்ய நீண்ட கால்வாய்கள் தஞ்சையிலும், தஞ்சையைச் சுற்றிய ஊர்களிலும் வெட்டப்பட்டன. நீர் பரவ மரங்கள் செழித்தன. மரங்கள் அதிகமாக மழை கனமாக இறங்கிற்று. கீறி விதைத்தால் போதும். நாற்று எழுந்தது. பறித்து நட்டு மாளாது நாற்றங்கால்களில் எருமைகளையும், பசுக்களையும் மேயவிட்டார்கள். பாலும், தயிரும், வெண்ணையும், இறைச்சியும் எல்லோருக்கும் கிடைத்தன. மக்கள் பகலெல்லாம் உழைத்தார்கள். இரவில் பயமின்றித் தூங்கினார்கள். கூத்தும், பாட்டும் இடைவிடாது நடந்தன.

உமையாளுக்கு இரண்டாவது வருடத்தில் மகன் பிறந்தான். வீரன் என்று அவனுக்கு அந்தப் புலவர் பெயரிட்டார். அவன் பரம்பரை வீரத்தைப் பாட்டாகப் பாடினார்.

அடுத்த யுத்தம் வரை வாழ்க்கையில் ஆனந்தம் ததும்பியது. ஆனால், மறுபடியும் யுத்தம் வந்தது.

ஆனால் இந்த முறை போர் நடந்தால், ராஜேந்திரர் போருக்குப் போக மாட்டார். அவரது மகனான ராஜாதி ராஜனும், ராஜேந்திர தேவனும், வீரராஜேந்திரரும் போருக்குப் போவார்கள்.

முதுமையாலும், இளவரசர்கள் போருக்குத் தயாராக வேண்டும் என்பதாலும் அரசர் பின்தங்கி விட்டார். அரசர் கங்கைகொண்ட சோழபுரத்தில் இருப்பதால், எதிரிகள் சோழ தேசத்திற்குள் வராமலிருக்க எல்லா கிராமங்களிலும் சரியான கட்டுக்காவல் செய்த பிறகே போருக்காக ஆட்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பெண்டிரும், பண்டாரமும் கிடைக்கும் என்பதற்காக ராஜாதி ராஜர் படையில் அதிகமான ஆட்கள் சேர்ந்தார்கள். குறிப்பாய் நரிப்பள்ளியில் ஆட்களே இல்லை என்ற அளவுக்கு ஆண்கள் போர்ப்படையில் சேர்ந்து கொண்டார்கள். படையில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்பதற்காக ஒருவரை ஒருவர் காயப்படுத்திக்கொண்டு பயிற்சி செய்தார்கள்.

சேந்தன் உமையாள் புருஷன் பொன்தாமனும் போரில் கலந்துகொள்ள விரும்பினான். அவளிடம் அனுமதி கேட்டான்.

"நீங்கள் கலந்துகொள்ள விரும்பினால், நான் தடை சொல்லவில்லை. ஆனால், உங்களை நிச்சயம் கலந்துகொள்ள விடமாட்டார்கள் என்று எனக்குத் தோன்றுகிறது. அதுவும் தவிர, ஊரிலுள்ள ஆண்களெல்லாம் போருக்குப் போய்விட்டால் ஏர் பிடித்து வயலில் உழுவது யார்? நாற்று நடுவதும், களை பறிப்பதும் யார்? ஆடு, மாடுகளைப் பராமரிப்பது யார்? படைகளுக்கு உணவு இங்கிருந்துதானே அனுப்பப்பட வேண்டும். அதனால் எது செய்தாலும் யோசித்துச் செய்யுங்கள்" என்றாள்.

பொன்தாமன் குழம்பினான். எனினும், தன் வீரத்துக்கு மாசு வரலாகாது என்று ஊர் சபையில் தான் போருக்குப் போக உத்தரவு வேண்டுமென்று கேட்டான். அதுவரை அடங்கியிருந்த ஊர் பொறாமை அவன்முன் அவிழ்த்துக் கொட்டப்பட்டது.

"ஆத்தங்கரை ஓரம் பத்து வேலி பரிசு வாங்கிட்டியருல்ல. நாங்க சிந்தி சிந்தி வரி கொடுக்கிறோம். நீங்க சீமானாட்டம் அனுபவிக்கீங்கள்ல. அடுத்தவங்க போய் ஜெயிச்சிட்டு வர வாய்ப்புக் கொடுங்கய்யா. எல்லாத்திலும் நீரே முதல்ல நிக்கணுமாக்கும். மத்தவங்க போகட்டும். போய்ப் பரிசு வாங்கி வரட்டும். நீங்க சும்மா இருங்க" ஊர்ச்சபை அதட்டியது.

"என் வீரத்தைக் காட்ட சந்தர்ப்பம் வேண்டாமா? நான் போர்க்களம் பார்க்காதவனா? போர் பார்த்துப் பழகிய என்னை அழைத்துப் போகாமல் என்ன பயன்?"

"புதிதானவர்கள் போர்ப் பழகுவதுதான் பயன். அப்படி உமக்கு வீரம் காட்ட வேண்டுமென்றால், நாங்கள் ஜெயித்து திரும்பி வரும் போது ஊர் எல்லையில் மண்டி போட்டு கழுத்தை அறுத்துக்கொள்ளும். உமது முன்னோன் செய்ததை நீரும் செய்யும்."

ஊர்ப் பேச்சில் காரமும், கேலியும் கலந்திருந்தன. "ராஜேந்திர சோழர் மகனான ராஜாதி ராஜன் ஊத்தையடையாமல் திரும்பினால், இவ்வூர் எல்லையில் என் முன்னோரைப் போல மூங்கில் நட்டு, அதன் நுனியில் குடுமி தைத்து என் சிரமறுப்பேன். என் ரத்தத்தால் இந்தப் பூமி நனைப்பேன்" பொன்தாமன் எரிச்சலோடு கத்தினான்.

ஊர் மிரண்டு போய் அவனைச் சமாதானப்படுத்தியது. மற்ற இளைஞர்கள் போருக்குப் போக ஆசைப்படுவதால் விட்டுக்கொடுக்குமாறும், போருக்குப் போவது எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் ஊர்க்காவலும், விவசாயமும் என்று அமைதிபடுத்தியது.

அவன் சபதம் சொன்னதைக் கேள்விப்பட்டு உமையாள் ஜம்புநாதர் கோவிலுக்கு ஓடினாள். தன் புருஷனுக்கு எந்தவிதக் கேடும் வரக்கூடாது என்று வேண்டினாள். தான் விதவையாகாமல் இருக்க வேண்டுமென்று இறைஞ்சினாள். அதற்காக தினந்தோறும் அருண்மொழி என்ற உழக்கால் நெய் விளக்கு ஏற்றுவதாக வேண்டிக்கொண்டாள். கர்ப்பக்கிரகத்திற்கு எதிரே பெரிய இரும்பு வட்டிலில் நெய் ஊற்றி, தாமரைத் தண்டு நூல்

முக்கி விளக்கேற்றினாள். நல்லது சொல், நல்லது சொல் என்று விளக்கை வேண்டினாள். சகுணம் கேட்டாள். மண்டியிட்டு விளக்கையே பார்த்துக்கொண்டிருந்தாள். பெருங்காற்று வீசியது. ஒரு தென்னை ஓலை சடேரென்று விழுந்தது. ஓலை விழுந்த சத்தத்தில் கோவில் பிரஹாரத்தில் மேய்ந்து கொண்டிருந்த மாடுகள் மிரண்டு ஓடின. காளைக் கன்றின் காலில் கோயில் மணியின் கயிறு சிக்கி இழுக்க, கோயில் மணி டணேரென்று அடித்தது. நல்ல சகுணம் என்று மணி ஒலியைக் காதில் வாங்கி உமையாள் பரவசமானாள்.

ராஜேந்திர வளநாட்டு நரிப்பள்ளி கிராமத்திலிருந்து படைகள் கிளம்பின. அவள் குடியிருக்கும் கூகுர்பாடியே சுற்றியுள்ள எல்லா கிராமங்களுக்கும் தலைமையேற்றது. பொன்தாமன் தற்காலிக கிராம அதிகாரியானான்.

பெண்களும், குழந்தைகளும் தள்ளாடிய வயோதிகர்களையும் தவிர, கடந்த போரில் காலும், கையும் இழந்தவர்கள் தவிர மற்ற எல்லா எல்லா ஆண்களும் தஞ்சையை நோக்கிக் கிளம்பினார்கள். தொண்டை நாட்டில் எல்லாப் பகுதிகளிலிருந்தும் படை வீரர்கள் அவர்கள் ஊர் வழியே கடந்து போனார்கள்.

20

போர் வெறி ஏற்றிக்கொள்வதற்கு கள் வேண்டுமென்று கேட்டார்கள். கள் குடித்தார்கள். இறைச்சியும், சோறும் கலந்து உண்டார்கள். உட்கார்ந்தால் சோர்வு வந்துவிடுமென்று ஆடிக் கொண்டும், பாடிக்கொண்டும் போனார்கள். கத்திகளைக் கூர்ப்பார்க்க

வாழைகளையும், சிறு மரங்களையும் வழியெல்லாம் வெட்டிக்கொண்டு போனார்கள். பன்றிகளை மிரள வைத்துத் துரத்தி அவைகளை ஒரே வீச்சில் வேல் எறிந்து கொன்றார்கள். அவர்கள் ஈழம் நோக்கிப் போகப் போகிறார்கள் என்பதை உமையாள் கேள்விப்பட்டாள். ராஜேந்திரரிடம் அடங்காத ஈழத்து அரசன் மகிபாலனை அவர் மகன் ராஜாதி ராஜர் கொன்று போடுவதாய் சபதம் செய்திருக்கிறாராம்.

கங்கைகொண்ட சோழபுரத்தில் கடல் போல ஏரியை ஏற்படுத்தி, அதில் ஜலஸ்தம்பம் நாட்டி, ராஜேந்திரர் தன் வெற்றியைக் கொண்டாடிய போது ராஜாதி ராஜர் இவ்வாறு சூளுரைத்தாராம். அடிக்கடி கலவரம் செய்யும் பாண்டியர்களை அடக்கப் படைகள் அனுப்பப்பட்டிருக்கின்றனவாம். மேலைச் சாளுக்கியர் தாக்காதிருக்க, கீழைச் சாளுக்கியர் உடன்பாடாம். சோழ சாம்ராஜ்யத்தை எவர் எதிர்த்துப் பேசினாலும், சோழ அரசனுக்கு எதிராக எவர் வாய் திறந்தாலும் மரணம்தான் தண்டனையாம். எல்லா திசைகளிலும் படையெடுப்பு நடக்கும். ஓய்வு ஒழிச்சலில்லாது சோழ வீரர்கள் போர் செய்ய வேண்டும். எதிரிகளைப் பூண்டோடு அழிக்கும் வரை தஞ்சைக்கு ராஜாதி ராஜர் திரும்ப மாட்டார். வெற்றி பெற்று எதிரியின் நகரத்திலே சோழப்படை புகுந்தால் சோழ வீரர்கள் சூறையாடலாம். பொருட்களைக் கொள்ளையடிக்கலாம். எதிர்ப்பட்ட பெண்டிரைக் கைது செய்து தமக்கே உரிமை கொள்ளலாம். வீரர்கள் வெறியரானார்கள். கலவரம் செய்த பாண்டியரை எளிதில் அடக்கி விட்டு ஈழம் நோக்கிப் போனார்கள்.

கூகுர்பாடிக்கு வெற்றிச் செய்திகள் வந்துகொண்டே இருந்தன. தன் புருஷனை போருக்கு அனுப்பாமல் தன்னோடு ஊரிலேயே நிறுத்தி வைத்ததற்காக உமையாள் தினந்தோறும் ஜம்புநாதரைத் தொழுதாள். வயல்களில் மற்ற பெண்டிரோடு அயராது பாடுபட்டாள். சிறுவர்கள் ஏர் பிடித்தார்கள். ஊர் மாடுகளை மடக்கி இரவு வயல்களில் தங்க வைத்தார்கள். பசும்புல் தின்ற மாடுகள் சாணம் போட, நீர் பாய்ச்சி மண் புரட்டி எருவாக்கினார்கள். ஊர்ப் பெண்கள் நாற்று நட அந்த முறையும் மழை பெய்தது. பால் பிடித்துக் கதிர்கள் எழுந்தன.

ஈழத்தில் பல மன்னர்களின் மணிமுடி பறித்ததாகச் செய்திகள் வந்தன. அதன் வட திசையில் சோழர் ஆட்சி பலப்பட்டது. சோழப் படைகளில் பாதி சேர தேசத்து வழியே வடக்கு நோக்கிப் போவதாகச் செய்தி வந்தது.

கதிர் அறுத்தறுத்து முதுகு வலித்தது. நெல் குத்திக்குத்தி தோட்கள் நொந்தன. கொள்ளையடித்த பொன்னும், மணியும் படை வீரர்கள் மூலம் பண்டமாற்றாய் சோழ தேசமெங்கும் பரவின. நிறைய பொன் கொடுத்து அரசாங்க அதிகாரிகள் நெல் வாங்கினார்கள். கூடை கூடையாய் போர் நடக்கும் இடத்திற்கு எடுத்துப் போனார்கள். ஒரு குளிர் காலத்தில் ராஜேந்திரர் மரணமடைந்தார் என்ற செய்தி வந்தது. விருந்து கேளிக்கைகள் தள்ளி வைக்கப்பட்டன. எல்லாக் கோவில்களிலும் மோட்ச தீபம் ஏற்றப்பட்டது. தந்தையின் மரணத்தால் ராஜாதி ராஜனுக்குப் போர் வெறி அதிகமாயிற்று.

மன்னரின் மறைவால் மனம் வருந்திய புருஷனை உமையாள் தேற்றினாள். அவனுக்கு அருகே படுத்துக்கொண்டு அவன் தலையைத் தடவிக் கொஞ்சினாள். அவன் மனசு மாற்ற உடம்பு தழுவிச் சந்தோஷப்படுத்தினாள். போருக்குப் போகாத புருஷன் ஊருக்குத் தலைமையேற்ற கம்பீரத்தை, ஆளுமையை அவனிடம் நாட்டினாள்.

"தினமும் ஜம்புநாதருக்கு விளக்குப் போடுகிறாயாமே...?"

"ஆமாம். நெய் விளக்கு. உங்களுக்காகப் போடுகிறேன்."

"எனக்காகவா, வேண்டுதல். நான் நன்றாகத்தானே இருக்கிறேன். நோய்ப்பட்டவர்களுக்காக வேண்டுவார்கள். எனக்கு எந்த நோயும் இல்லையே..."

"உங்களுக்கும் நோய் இருக்கிறது. மனநோய்..."

"உன் மீது பித்தாக இருப்பதை நோய் என்று சொல்கிறாயா?" பொன்தாமன் மனைவியை இறுக்க அணைத்துக்கொண்டான். மார்பில் முட்டி கொஞ்சினான்.

"பொண்டாட்டியிடம் ஆசையாக இருப்பது மனநோயா... அன்பை நோய் என்று சொல்லலாமா? ஆத்திரம்தான் நோய். ஆவேசம்தான் ஜுரம்."

"எனக்கென்ன ஆத்திரம். யார் மீது ஆவேசம்..."

"ஊர்சபை தூண்டிவிட, உங்களைப் பலியிட்டுக் கொள்வேன் என்று ஆத்திரப்படவில்லையா? ஆவேசமாய் சபதம் செய்யவில்லையா...?"

"அடியே... அது வீரம். வீரம் மனிதர்களைக் குருடாக்குமா?"

"என்னைப் பற்றிய நினைப்பு மனசிற்குள்ளிருந்தால் இப்படி சபதம் செய்யத் தோன்றுமா?"

"போருக்குப் போக முடியவில்லையே என்ற கோபம்..."

"நீங்கள் போருக்குப் போகக் கூடாது என்பதுதான் என் வேண்டுதல். ஒவ்வொரு ஆணாக இந்த வீடு இழந்து கொண்டிருக்கிறது. உங்களையும் இழக்க நான் தயாராக இல்லை."

உமையாள் புருஷனை இழுத்து இறுக்கிக்கொண்டாள். பொன்தாமன் அவளை விலக்கினான். தோளைப்பிடித்து எதிரே அமர்த்திக் கொண்டான்.

"என்ன பேசுகிறாய் உமையாள். போரற்ற வாழ்க்கை என்று ஒன்று உண்டா. போர் மனிதனின் இயல்பல்லவா? போர் என்பது ஆண், ஆணை வெட்டிச்

சாய்த்தல் மட்டுமா? வயல் வெளியோடும்; மாடு கன்றுகளோடும்; குடும்பத்தோடும் ஒரு ஆள் போர் செய்துதானே ஆகவேண்டும். பாண்டியரோடும், சாளுக்கியரோடும், ஈழத்தாரோடும் நாம் போர் செய்யாவிட்டால் அவர்கள் நம்மீது படையெடுத்து வந்து விடுவார்கள் இல்லையா?"

"அவர்களும் வரக்கூடாது. நாமும் போகக் கூடாது. இதுதான் என் ஆசை."

"நீ இயற்கைக்கு மாறாய் பேசுகிறாய்." புருஷன் முகம் திருப்பிக்கொண்டான்.

"எது இயற்கை, எது இயல்பு? ஊரைச் சூறையாடுதலும், ஆண்களைக் கொன்று போடுதலும், பெண்களை விலங்கிட்டு அழைத்து வருதலுமா இயல்பு? முசங்கியிலிருந்து அடிமைப் பெண்களைக் கொண்டு போனார்களே, பிறர் மனைவிகளைக் கவர்ந்து போனார்களே, கவர்ந்து போய் என்ன செய்தார்கள்? அவர்களைத் தனியே தங்க வைத்து விருப்பப்பட்ட பெண்களை அனுபவிக்கலாம் என்று வெறியாட்டம் ஆடினார்களே, இதுவா இயல்பு, இதுவா வீரம்? இந்த நிலையை அப்படியேப் புரட்டிப் பாருங்கள். சாளுக்கியர் இங்கே வந்து உங்கள் தாயை, தமக்கையை, என்னை தலை முடி பற்றி இழுத்து முசங்கியிலோ, கல்யாணியிலோ தனியே வேளம் அமைத்து பொது மகளாகச் செய்தால் உங்கள் மனம் என்ன பாடுபடும்? நம் குழந்தையின் கதி என்ன ஆகும்?"

"வெற்றி அல்லது வீரமரணம்" பொன்தாமன் இடக்காய் கூறினான். "ஈழத்து மன்னரொருவன் சோழர் படைகளைச் ஜெயிக்க முடியவில்லையே என்று கழுத்தைக் கத்தியால் அறுத்துக்கொண்டு செத்தானாம். அது மரணம்."

"மரணத்தைப் பற்றி மட்டுமே சிந்திக்கிறீர்களே தவிர, வாழ்வதைப் பற்றி சிந்திக்கிறீர்களா? வயலோடு போர் என்று சொன்னீர்களே, அது நம் சோழ வீரர்களுக்கு ஞாபகம் இருக்குமா? ஆடு, மாடுகளை ஓட்டிச் செல்லவோ, மருந்து கொடுப்பதோ மறக்காமலிருக்குமா? மனைவியின் பெயரையோ, குழந்தைகளின் பெயரையோ ஞாபகம் வைத்திருப்பார்களா? இல்லை, மாறி மாறி அடிமைப் பெண்களை அனுபவித்ததில் மறந்து போயிருக்குமா? போர் என்பது ஆணின் திமிர். வெறும் தசைச் திமிர். ஓர் ஆணை அவமானப்படுத்த இன்னொரு ஆண் தசைத்திமிரால் அவன் பெண்டுகளைக் கவர்ந்து வருகிறான். இதில் பெண் செய்த பாவமென்ன? ஆணுக்கு வாழ்க்கைப்பட்டதுதானா?"

"என்ன சமண, பௌத்தர்கள் போல் பேசுகிறாய்?"

"பௌத்தம் சரியோ என்று தோன்றுகிறது. உயிர்க் கொலை தவறு என்று தோன்றுகிறது. உண்பதற்காகவும் கொல்லுதல் கூடாது என்று தோன்றுகிறது. கீறினால் நெல் விளையும் பூமி. நட்டால் கிழங்கு தரும் மண். எந்நேரமும் பூத்தலும், காய்த்தலுமாயிருக்கும் சுகமான இடம். உணவுக்குப் பஞ்சமே இல்லாத தேசம். எந்நேரமும் கூடல் நடக்கும் பூமி. பனியால் உறைந்தோ,

வெப்பத்தால் கருகியோ போகாத நாடு. மண்ணும், நீரும் புணர்ந்து செடி, இலையும், ஒளியும் கலந்து பூ, பூவும், வண்டும் கலந்து காய். காய்களும், வெப்பமும் கலந்து கனிகள். பஞ்சமேயில்லாத பூமி இது. இடைவிடாது கூடல் நடக்கும் இடம் இது. இங்கு இருக்கும் ஒவ்வொரு தாவரத்தின் விளைவும் கூடல்தான். இப்போது நீங்களும், நானும் பேசுவது கூடக் கூடல்தான். என் எண்ணம் உங்கள் எண்ணத்தோடு கூடல் செய்து இன்னொரு எண்ணம் பிறக்கிறது. அதனால்தான் தத்துவச் செழிப்புடன் நிற்கிறது. உடுத்தலிலும், உண்பதிலும், குடித்தனம் செய்வதிலும் நாகரீகம் வந்திருக்கிறது. மனிதனோடு மனிதன் புத்தி கூடியதால்தான் கவிதையும், காப்பியங்களும், ஓவியங்களும், சிற்பங்களும் இந்த தேசத்தில் நிறைய இருக்கின்றன. வாழ்க்கை என்பது போராட்டம்தான். இயற்கையோடு நடக்கும் போராட்டம்தான். மண்ணோடும், காற்றோடும், நீரோடும், நெருப்போடும் போர் செய்யாமல் நம்மை நாமே வெட்டிக் கொண்டிருப்பதில் லாபமென்ன?

உலகத்தின் எந்த தேசத்தில் இவ்வளவு உயரமான கற்கோவில்கள் உண்டு. ராஜராஜேஸ்வரம் ஆலயத்தை செய்த கையே போருக்குப் போய் ஒருவன் தலையையும் கொய்யுமா? அத்தனை உயரம் எப்படிக் கல் ஏற்றினார்கள் என்று கற்பனை கூடச் செய்ய முடியவில்லை. அதற்கு உண்டான கணிதமே போருக்கும் உதவுமா? தன் தேசத்தில் ஏரி வெட்டியவன் இன்னொரு தேசத்தில் எரியூட்டுகிறானே என்ன நியாயம்? ஒரு ஊரை அழித்துத்தான் இன்னொரு ஊரைக் கட்ட முடியுமா?

சோழ தேசம் மிகக் கேவலமாகத் திரும்பிக் கொண்டிருப்பதை நீங்கள் உணரவில்லையா?

இந்த தேசத்திற்கு மிகப்பெரிய கெடுதலைத் தரும் என்று நீங்கள் உணரவில்லையா? போர் முடிந்து இந்த வீரர்கள் நம் தேசத்திற்கு திரும்பினால் பேசாதிருப்பார்களா? வாள் பிடித்த கை. வேல் பிடித்த கை. ரத்தச் சேறு பார்த்த புத்தி அமைதியாக இருக்குமா? நம்மை வெட்ட சாளுக்கியன் வரவேண்டாம். பாண்டியரோ, சேரரோ படையெடுக்க வேண்டாம். நம்மை நாமே கொன்று கொல்வோம். நம்மை நாமே துன்புறுத்துவோம். இப்படித்தான் சோழ தேசம் முடியும். வெளியே வீரம் காட்டிய ஆண், வீட்டுக்குள்ளும் வேகப்படுவான். மனைவியை வேதனைப்படுத்துவான். வேறு வேறு பெண்ணை ருசித்த விதமாய் மனைவியையும் மரியாதையின்றி நடத்துவான். பெண்ணை போகமாக்குவதே வீரமெனில், வீரம் கெடும். உயிருக்கு உயிர் வதை செய்வதே வாழ்க்கையெனில் வாழ்க்கை சீரழியும். நமது நாகரீகத்தை இருள் சூழும். சோழ தேசத்தின் மாட மாளிகைகள் சரியும். ஒரு கல்லும், நிற்க ஒட்டாமல் சரிக்கப்படும். ஜெயஸ்தம்பங்கள் மண்ணில் புதைக்கப்படும்." மனைவியின் சீற்றம் பார்த்து பொன்தாமன் திகைத்தான். சுவரில் முதுகைச் சாய்த்து விட்டம் பார்த்தான். சோழ தேசம் சரிவதை, எரியூட்டப்படுவதைக் கற்பனை செய்தான். தலையை உலுக்கிக்கொண்டான்.

"நம் ஜம்புநாதேஸ்வரர் கோவிலும் அழியுமோ உமையாள்?"

"கோவில்கள் பிழைத்துவிடும் என்று நினைக்கிறேன். பாண்டியரோ, சேரரோ, ஏன் சாளுக்கியர்கள் வந்தால் கூட கோவில்கள் அழிக்கப்பட மாட்டாது. அவர்களும் சைவர்கள் அல்லவா? கோவில்களை உடைக்க மாட்டார்கள். ஒரு வேளை ஈழத்தவர்கள் கை ஓங்கினால் நமது கோவில்கள் பௌத்தப் பள்ளிகளாக மாறலாம். ஆனால், சோழ தேசத்தைக் கைக்கொள்ளும் அளவுக்கு ஈழம் வலிமையானதா என்று தெரியவில்லை."

"இல்லை. ஈழம் வலிமையானது அல்ல. தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவே சிங்களருக்குத் தெரியாது."

புருஷனும், மனைவியும் காலம் தாண்டிய கற்பனைகளில் மூழ்கினார்கள்.

"பௌத்தம் பற்றிப் பேசுகிறாயே, புத்த மதம் பரவினால் போரில்லாத வாழ்க்கை வந்துவிடும் என்று நினைக்கிறாயா?"

"வரலாம்!"

"இல்லை உமையாள். புத்த பிட்சுக்களே உண்மையில் சிங்களத்தை ஆளுகிறார்கள். சிங்கள அரசர்களைப் போருக்குத் தூண்டுகிறார்கள். புத்த மதம்

வேறு புத்த பிட்சுக்களின் அரசியல் வேறு. போரை மதமோ, நாகரீகமோ தடுத்துவிடாது. போர், அமைதி, அமைதி, போர் என்றுதான் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும். வடக்கே சென்ற மாமன்னர் ராஜாதி ராஜன் என்ன ஆனாரென்று தெரியவில்லை. கெள்ளிப் பாகையை எரியூட்டிவிட்டு வேங்கியை நோக்கித் திரும்பியிருக்கிறாராம். அவர் ஊத்தையடையாமல் தஞ்சைக்குத் திரும்ப வேண்டும்."

"நீங்கள் மரணமடையக் கூடாது என்று நான் வேண்டிக் கொண்டிருக்கிறேன்..."

"புரியவில்லை உமையாள்."

"உங்கள் சபதம் நிறைவேறக் கூடாது என்று நெய் விளக்குப் போடுகிறேன்."

"அதாவது ராஜாதி ராஜர் வெற்றியடையக் கூடாது என்று வேண்டுகிறாயா?"

"ராஜாதி ராஜர் வெற்றி பெறட்டும். நீங்கள் மரணமடையக் கூடாது. நான் விதவையாகக் கூடாது. வருடக் கணக்காய் நான் செய்யும் வேண்டுதல் வீண் போகாது."

"என்ன பேசுகிறாய்? ராஜாதி ராஜர் வெற்றி பெற்று இந்த ஊர் வழியே வந்தால்..."

உமையாள் புருஷனின் வாயைப் பொத்தினாள்.

"வரமாட்டார்" என்றாள்.

"வெற்றி பெற்றவர் இவ்வழியே வராமல் வேறெப்படி தஞ்சைக்குப் போக முடியும். அப்படி வேறு வழி போனால், நான் தஞ்சைக்குச் சென்று என் சிரமறுத்துச் சபதம் முடிப்பேனே தவிர..."

உமையாள் ஆவேசத்துடன் தரையறைந்தாள். "வரமாட்டார்" என்று கூவினாள்.

"என்ன சொல்கிறாய் உமையாள்...?"

"மன்னர் போரில் மரணமடைவார். வெற்றியும் பெருவார்..."

"சீ... என்ன இது? மன்னரின் சாவுக்காகவா வேண்டுதல். தினந்தோறும் நெய் விளக்கு."

"இல்லை... என் புருஷனின் வாழ்வுக்காக வேண்டுதல். அதற்காகவே நெய் விளக்கு."

"உன் வேண்டுதல் பலிக்க வேண்டுமென்றால் மன்னர் சாக வேண்டும்."

"என் வேண்டுதல் பலமுள்ளதாயின் அப்படித்தான் நடக்கும்..."

"இந்த நினைப்பே ராஜதுரோகம்."

"இருக்கலாம். போரை வெறுக்கின்ற ஒரு பெண்ணின் அழுகை இது. என் வாழ்க்கையைக் குலைத்துவிடாதே என்ற வேண்டுதல் இது."

பொன்தாமன் விலுக்கென்று எழுந்தான்.

"மனிதருக்கு மரணம் எப்படியும் நேரும் உமையாள். நான் மாடு முட்டியோ, மரம் முறிந்தோ செத்துப் போகலாம்."

"இல்லை. நான் உயிரோடு இருக்கும் வரை உங்களுக்கு மரணமில்லை. நான் விதவையாகக் கூடாது என்பதே என் வேண்டுதல். என் ஜம்புநாதர் என் வேண்டுகோளை மனமுவந்து கேட்டார். நல்ல சொல் கொடு, நல்ல சகுணம் கொடு என்று கேட்டேன். கேட்ட சில நொடிகளிலே கொடுத்தார்."

"என்ன சொல்கிறாய்? என்ன நடந்தது? இறைவன் நேரே வந்து பேசினாரா?"

"இல்லை. காற்று அடித்தது. தென்னோலை விழுந்தது. மாடுகள் மிரண்டன. காளைக் கன்றின் காலில் கயிறு சுற்றி காண்டாமணி அசைந்து ஒலி எழுப்பியது. ஓம் என்று உடம்பு முழுவதும் ரீங்கரித்தது."

"இது வெறும் கற்பனை. உன் பேதமையான நினைப்பு." பொன்தாமன் சிரித்தான்.

"உங்களை நம்பும்படி நான் வற்புறுத்தவில்லை. ஆனால், என் வேண்டுதல் பலிக்கும்."

"ராஜாதி ராஜர் இறந்து விடுவார் என்கிறாயா?"

"அவர் இறந்து போக வேண்டுமென்பதல்ல என் கோரிக்கை. அதுவல்ல என் வேண்டுதல்..."

எனக்கு மனம் ஒப்பவில்லை உமையாள். வேளாளர் குலத்தில் இப்படியொரு கோழையான பெண் இருப்பது நம் குலத்துக்கே அவமானம். புறநானூறு பாடல் உனக்குப் புரியவில்லை. அஞ்சி ஓளியும் ஆண்களைத் தமிழ்ப் பெண்கள் நேசிப்பதில்லை. வாளெடுக்காத வீரனை மானங்காக்கத் தெரியாதவன் என்றுதான் கேலி பேசியிருக்கிறார்கள். தற்கொலை செய்து கொண்டவனையும், தடுக்கி விழுந்து இறந்தவனையும், வாளால் வெட்டி நெஞ்சுக் கூட்டை அறுத்து இவன் வீரமரணம் எய்தினான் என்றுதான் எழுதியிருக்கிறார்கள். தேசம் வலுவாக இருந்தால்தான் வீடு அமைதியாக இருக்கும். அரசன் வீரனாக இருந்தால்தான் ஆண்களும் வீரனாக இருப்பார்கள். உமையாள் மன்னனுக்கு எதிராக நீ செய்து கொண்ட வேண்டுதல் பலிக்காது. மன்னர் வெற்றி பெற்று வந்தால், இந்தப் பொன்தாமன் தன் தலையை வெட்டி பலி கொடுப்பான். மன்னர் போரிலே இறந்து போனால் இந்தப் பொன்தாமன் வீடு துறப்பான். வீடோடு

இருக்கும் ஆண் சுகமென்று நினைக்கிறாய் உமையாள். இப்படி யோசிப்பதன் மூலம் ஈழக்காடுகளில், வேங்கி மலைநாட்டில், கோதாவிரி வெய்யிலில் செயலாற்றிக் கொண்டிருக்கும் சோழ வீர ஆண்களைக் கேலி செய்கிறாய். நீ சுமங்கலியா, விதவையா என்பதை ஜம்புநாதரின் தீர்ப்புக்கே விடுகிறேன். போர் மனிதனின் பிறவிக் குணம். இந்த சோழ தேசம் என்று ஒன்று இருப்பதற்கே பல்லாயிரக் கணக்கான வீரர்கள் தான் காரணம். இந்த பூமியையும், இந்த பூமியில் வாழும் வீரர்களின் குணத்தையும் வெறுக்கின்ற உன்னை என்னால் நேசிக்க முடியாது. பௌத்தமோ, சமணமோ அமைதியைத் தராது. சந்திர, சூரியர் உள்ளவரை பூமி என்று ஒன்று உள்ளவரை எதன் பொருட்டாவது, எவரோடாவது போர் நடந்து கொண்டேயிருக்கும். போரால் அமைதியும், அமைதியால் நாகரீகமும் வளரும். வளரும் நாகரீகம் புதிய புதிய கருவிகளைக் கண்டு பிடிக்கும். புதிதாக கண்டுபிடித்த எதுவும் போர் முனையில்தான் பயன்படுத்தப்படும்."

உமையாள் நானொரு சித்தரோடு பேசிக்கொண்டிருந்தேன். தொங்குகின்ற விளக்கும், குதிரைகளில்லாமல் தானே ஓடும் தேரும், ராவணன் உபயோகப்படுத்திய பறவைகள் போன்ற விமானமும், மனித குலம் உற்பத்தி செய்யுமாம். அப்படியொரு கனவு கண்டாராம். மனிதன் எதற்குப் பிறக்க வேண்டுமென்று கேட்டேன். பறந்து பறந்து போர் செய்வான். வேறு எதற்கு என்று சித்தர் சிரிக்கிறார்.

உலகம் இப்படித்தான் இயங்கும் உமையாள். போருக்காக யானைகளைத் தயார் செய்வார்கள். போரில்லாத போது, அந்த யானைகளையே கல் தூக்கி வரச் செய்வார்கள். கல் தூக்கி வந்து கட்டடம் கட்டுவார்கள். போர் வீரர்களுக்கான மருந்து கண்டுபிடிப்பார்கள். நம் குழந்தை சறுக்கி விழுந்தாலும் அந்த மருந்தை உபயோகப்படுத்துவார்கள். நாகரீகத்தால் போர். போரால் நாகரீகம். இப்படித்தான் மனித வாழ்க்கை வளர்ந்து கொண்டிருக்கிறது. இனியும் இப்படித்தான் வளரும். ராஜராஜேஸ்வரம் போர் தந்த கட்டிடம். நீ உன் புருஷன், உன் குடும்பம் என்று யோசிக்காதே. எவராலும் சிறிய வட்டத்தில் வாழ்ந்துவிட முடியாது. ஒருவேளை ராஜாதி ராஜர் மரணமடைந்தால் அதற்கு உன் வேண்டுதலே காரணம் என்று நான் எடுத்துக்கொள்வேன். அப்படி நேரிட்டால் உன்னை விட்டுப் பிரிவேன். ஒரு அரசனின் வீழ்ச்சிக்கு என் மனைவி காரணமாக இருந்ததை என்னால் தாங்கிக்கொள்ள முடியாது. இனி நம்மிடையே கூடல் இல்லை. இது ஜம்புநாதேஸ்வரர் மீது ஆணை..."

புருஷன் வெளியேறினான். உமையாள் தலை குனிந்து, தரை பார்த்து உட்கார்ந்திருந்தாள்.

குளிர் காலம் போய் வேம்பு பூத்தது. வேம்பு பழுத்து தரையெங்கும் உதிர்ந்தது. வெக்கை வீசியது. வெப்பம் மழை மேகங்கள் கொண்டு வந்தது. மழையால் பூமி குளிர்ந்தது.

அவர்கள் புருஷன் மனைவியாக இருந்தார்கள். அதிகம் பேசிக்கொள்ளவில்லை. தனித்தனியே படுத்தார்கள். கூடல் என்பதே இல்லை. போரும் முடிவதாக இல்லை. இரட்டமண்டலம் நோக்கி ராஜாதி ராஜன் திரும்பினான். தன் தம்பி ராஜேந்திர தேவனோடு பல இடங்களில் ஜெயித்தான். இரட்டமண்டலத்தின் அதிபதியான ஆகவமல்லன் பெரிய ஆறுக்கு அருகேயுள்ள கொப்பம் என்கிற ஊரில் ராஜாதி ராஜனைக் கடுமையாகத் தாக்கினான். சாளுக்கிய அரசன் ஆகவமல்லனின் படைகள் ராஜாதி ராஜன் யானையைச் சூழ்ந்து கொண்டன. இடைவிடாது சரங்களால் யானையையும், மன்னனையும் தாக்கின. சோழப் படைகள் நாற்புறமும் எதிரிகளால் தாக்கப்பட்ட நேரத்தில் ராஜாதி ராஜனின் தம்பி ராஜேந்திரத் தேவன் தன் படையுடன் அண்ணனுக்குத் துணை வந்தான். அண்ணன் படுகாயமடைந்ததைக் கண்டு வெறியோடு ஆகவமல்லனைத் தாக்கினான். புலிக்கேசி, தாசபன்மன், நன்னிநுளம்பன், வன்னியத் தேவன், துட்டன், குண்டமாயன் என்ற சிற்றரசர்களைக் கொன்றான்.

எதிரிகளின் சரங்களால் தாக்கப்பட்ட ராஜாதி ராஜன் ரத்தப் பெருக்கினால் யானை மீதிருந்தபடியே இறந்தான். அண்ணனின் மரணம் ராஜேந்திரத் தேவனை வெறியாக்கியது. ஆகவமல்லனின் மனைவியரான சத்யவ்வை, சாஸ்கப்பை என்ற இரு மனைவியரையும் சிறைப் பிடித்தான். பகைவர்களது அம்புகள் தைத்த புண்கள் ஆறும் முன்பே, அந்தப் போர்க்களத்திலேயே சோழ மன்னனாக முடிசூட்டிக்கொண்டான். பின்னர், கொல்லாபுரத்துக்குப் போய், அங்கு வெற்றித் தூண் நிறுவி

பெரும் பெண்டீர் கூட்டத்தையும், சாளுக்கிய மன்னர்களின் திரண்ட பொன்னாபரணங்களையும், யானைகளையும், குதிரைகளையும், ஒட்டகங்களையும் கைப்பற்றி கங்கைகொண்ட சோழபுரம் நோக்கித் திரும்பினான்.

மன்னர் இறந்து, மன்னரின் தம்பி ராஜேந்திர சோழர் முடிசூட்டிக்கொண்டதைக் கேள்விப்பட்டு, சோழ மக்கள் சந்தோஷப்படுவதா, துக்கப்படுவதா என்று தெரியாமல் தவித்தார்கள்.

ஊரில் அசாதரணமாய் ஒரு வெறுப்பு நிலவியது. சோழப்படையின் ஒரு பகுதி ஆரவாரமின்றி நரிப்பள்ளம் தாண்டிச் சென்றது. நரிப்பள்ளம் கிராமத்தினர் தங்கள் வீட்டிலிருந்து சென்றவர்களை வெற்றித் திலகமிட்டு வரவேற்றார்கள். வீரர்கள் கையிலிருந்த பொற்காசுகள் இரையப்பட்டன. ஊர் காத்த பொன்தாமனுக்குப் புகழ் குறைந்து, படையெடுத்து திரும்பிய வீரர்களுக்கு மரியாதை அதிகமாயிற்று. பொன்தாமன் ஒரு நாள் விடியலில் தன் மனைவியை விட்டுப் பிரிந்து தெற்கு நோக்கிப் போனான். எங்கே பயணம் என்று ஊரில் ஒருவன் கேட்ட போது தெரியவில்லை என்று சொல்லிவிட்டுப் போனான்.

"என்னம்மா நடந்தது?" புலவர் உமையாளை ஆதுரத்துடன் கேட்டார். உமையாள் தட்டுத்தடுமாறி எல்லா விவரமும் சொன்னாள். "என் யோசிப்பு தவறா, புலவரே" என்று அழுதாள்.

"உன் யோசிப்பு தவறில்லை உமையாள். போரில்லாத உலகம் வேண்டுமென்று யோசிப்பது எப்படித் தவறாகும். உன் யோசிப்பை புரிந்து கொள்ள உன் புருஷனால் முடியவில்லை. அப்படி யோசிக்க அவனுக்குக் கற்றுத்தரவில்லை. அவன் வளர்ந்த விதம் வேறு. அவனை மட்டும் குறை சொல்வானேன். ஆண்களின் சிந்தனையே வேறு. அவர்களால் அமைதியாக இருக்க முடியாது. அமைதிதான் போரைவிட ஆண்களைக் கலவரப்படுத்தும் விஷயம். ஆண்கள் போரிலிருந்து ஊர் திரும்பி விட்டார்கள். ஊர் அமைதியாக இருந்து விடுமா? ஆகாது. இதுநாள் வரை இருந்த அமைதி குலையும். அமைதி குலைப்பதே போரிலிருந்து திரும்பிய ஆண்களின் வேலையாக இருக்கும். ஒரு மொந்தை ஒரு காசுக்கு விற்ற கள், இப்போது மூன்று காசு. ஊரிலே பொற்காசுக்கு மதிப்பில்லை. எதை வங்குவதென்று வீரர்களுக்குத் தெரியவில்லை. எல்லாவற்றையும் வாங்கிவிட முடியும் என்று நினைக்கிறார்கள். காசுகொடுத்து பெண்களை வாங்குகிறார்கள். அடிமைகளையும், தாதிகளையும் வாங்குகிறார்கள். அடுத்த ஊரில் அறுவடைக்கு ஆள் இல்லை. இறந்து போனவர்கள் தவிர, மீதியிருப்பவர்கள் வயல் வேலைக்கு வரமாட்டேன் என்கிறார்கள். அவன் ரத்தச்சேறில் உழுதவனாம். தலைகளை அறுக்க மட்டுமே தெரிந்தவனாம். நீர்ச்சேற்றில் இறங்கவோ, கதிர் அறுக்கவோ வரமாட்டானாம். இப்படியும் சில வருடங்கள் போகும். போர் வெறிக்காகக் குடிந்த கள் பழக்கம் இப்பொழுது தவிர்க்க முடியாத விஷயமாகப் போய்விட்டது. மிகமிகச் சிறிய விஷயத்திற்கெல்லாம் அடிதடி நடக்கிறது.

தூதுவர்களை அடிக்கிறார்களம்மா. ஆகவமல்லன் ஓடி ஒளிந்துகொண்டு சமரசத்திற்கு இரண்டு பேரைத் தூது அனுப்பினான். அவர்களுக்கு ஐந்து குடுமி வைத்து, ஆகவமல்லன் போல் வேடம் போட வைத்து, இன்னொரு தூதுவனுக்கு ஆகவமல்லி என்று பெயரிட்டு அவனைப் புடவை அணியச் செய்து அடித்துத் துன்புறுத்துகிறார்கள். அவன் முதுகில் கத்தியால் கீறி, வீரசாசனம் எழுதுகிறார்கள். மன்னனே வீரனை இப்படி நடத்தினால், வீரன் வேறு என்னதான் செய்ய மாட்டான்? இவர்கள் பல்லவர்களிடம் கைகூப்பி நின்றது மறந்து போய்விட்டது. எவருக்குமே இனி தலை குனிய மாட்டேன் என்கிற இறுமாப்பு வந்துவிட்டது. பொற்காசுக்கு மதிப்பில்லை. அதனால் பண்டங்களின் மதிப்பு அதிகமாகிவிட்டது. நூறு கலன் விளைந்தால் நாற்பது கலன் வரி கட்ட வேண்டும். அதையும் பொன்னாகக் கொடுக்கக் கூடாது. நெல்லாகக் கொடுக்கவேண்டும். கூலிகளின் விலையோ மிக அதிகம். அறுபது கலத்தில் கூலி போக எதைச் சாப்பிடுவாய், எதை விற்பாய். யார் கேட்பது இதை. வெற்றி வெற்றி என்று முழக்கமிடுகிறார்கள். எது வெற்றி என்பது புரியவில்லை. பொன்தாமன் திரும்பி வருவான். கவலைப்படாதே. அவன் வெறுமே போருக்குப் போய் வந்தவன். இவர்களின் வெறியாட்டத்தை ஒரு முறை கண்ணால் பார்த்தால் மனம் நொந்து உன் பக்கம் திரும்புவான். அவரவர் தேசத்தை அவரவர் ஆண்டு எல்லோரும் நட்பாய், இளகிய மனமாய், எந்த உயிருக்கும் தீங்கு செய்யாதவராய் மனிதர்கள் ஒரு நாள் மாறுவார்கள். ஆனால், அது இப்போதைக்கில்லை. ஆயிரக்கணக்கான வருடங்களாகும். இந்த பூமி அழிவதற்குள், பனியால் மூடி உறைந்து

போவதற்குள், பிரளயம் ஏற்பட்டு நீராய் மாறுவதற்குள் அந்த நிலை வரும். வரவேண்டும். கவலைப்படாதே. உன் புருஷன் திரும்புவான்..."

ஆனால் திரும்பவில்லை. ஆண்டுகள் பலவாகியும் பொன்தாமன் எங்கு போனான் என்று தெரியவில்லை. குழந்தை வீரன் வளர்ந்தான். வாலிபனானான். அவனை சைவ மடத்திலே சேர்த்து பதிகங்கள் பாடக் கற்றுக்கொடுத்தாள். ஓலைகள் படிக்கவும், எழுதவும் அவன் தெரிந்து கொண்டான். ஒரு சேனாதிபதிக்கு ஓலை வாசிப்பவனாக ஓலை எழுதிக் கொடுப்பவனாகப் பெறுபேற்று அவர் போகுமிடமெல்லாம் அவனும் போனான். உமையாளை விட்டு அகலாமல் ஐம்புநாதரும், தென்பெண்ணை ஆறும், ஆறு ஒட்டிய பத்துவேலி நிலமும்தான் இருந்தன.

பத்து வேலி நிலத்தில் பாதிகொடுத்தால் பொன் கொட்டிக் கொடுப்பதாகப் போருக்குப் போய் வந்த வீரர்கள் சொன்னார்கள். மண்ணை வைத்து வயிறு வளர்க்கலாம். பொன்னை வைத்து என்ன செய்வது? உமையாள் மறுத்துவிட்டாள். அதிகமாக பங்கு நெல் கொடுத்து கூலிக்கு ஆட்களை அமர்த்திக்கொண்டாள். இடைவிடாது இரண்டு போகம் பயிர் செய்தாள். வேனிற் காலத்தில் மூன்றாவது போகமும் செய்ய முடியும். பெண்ணையில் ஊற்றெடுத்து, ஏற்றம் போட்டு, நீரிறைக்க வசதி உண்டு. ஆனால், ஊர் கூடாது என்று சொல்லிவிட்டது. அவள் வயல்தாண்டித் தானே நீர் வரவேண்டும். ஊரின் மற்ற நிலங்களுக்கு நீர்

வர, அவள் வயலில் ஏற்றம் போட்டு முறை போட்டு நீர் இறைத்தது. பயிர் செய்ய மழைக்காகக் காத்திருந்தது.

உமையாளின் நல்ல மனசோ, அல்லது தென் பெண்ணையாற்றின் வண்டல் மண்ணோ, உமையாளின் பத்து வேலி மட்டும் அமோகமாய் விளைந்தது. போருக்குப் போய் வந்த வீரர்கள் வயிறெரிந்தார்கள். அந்த நிலத்திற்கு வரியுமில்லை என்கிற போது, ஆத்திரப்பட்டார்கள். மற்றவர் நிலங்களில் கடுமையாய் வரி கொள்முதல் செய்யப்பட்டது. விளைச்சல் இல்லை என்று ஊரார் வரி கொடுக்க மறுத்தார்கள். ராஜேந்திர தேவரின் மந்திரி ஏதோ ஒரு மாராயர் சிறிய படையை வரி வசூலிக்க அனுப்பி வைத்தார். படை கிராம சபை முன்பு வந்து சவுக்குச் சொடுக்கியது. நீரில் முக்கியும், வெய்யிலில் புரட்டியும் மக்களிடம் வரி வசூல் செய்யப்பட்டது. உமையாள் மட்டும் பாதிக்கப்படாமல் இருந்தாள்.

02

ஒருநாள் விடியலில் தடும் தடுமென்று பறையோசை கேட்டது. எக்காளங்கள் முழங்கின.

அது மன்னருக்கான பறையோசை.

"ராஜேந்திர தேவரா, போரிலேயே முடிசூட்டிக் கொண்ட பெருமானா, அண்ணன் இறந்ததற்காக வெஞ்சினம் கொண்டு சாளுக்கியரை ஓட ஓட விரட்டியவரா" கிராம மக்கள் ஊர் எல்லையிலுள்ள பெரிய ஆலமரம் நோக்கி

ஓடினார்கள். வந்தது மன்னரில்லை. அவரின் ஸ்ரீமுகம். அவர் எழுதிய ஓலை. கிராம மக்களுக்கு அவர் எழுதிய கட்டளை. நரிப்பள்ளம் கிராம மக்களுக்கு வந்திருக்கிறது. அவருடைய ஸ்ரீமுகத்தை சிறிய பெட்டியில் வைத்து அவர் கட்டளையை செயல்படுத்தும் மாராயர் வந்திருக்கிறார்.



மன்னர் வந்தாலென்ன, மன்னரின் ஸ்ரீமுகம் வந்தாலென்ன. இரண்டும் ஒன்றே அல்லவா. ஊர்சபை அந்தச் சிறிய பெட்டியை விழுந்து வணங்கியது. தலைமேல் வைத்துக்கொண்டது. பிறகு ஊர்ப்பறைகளும், திருமுரசும் பிடாரி கோவில் உடுக்கையும் முழங்க, மன்னரின் எக்காளத்தோடு ஊர்வலமாய் ஜம்புநாதர் கோவிலை நோக்கிப் போனது. ஓலையில் என்ன விஷயமென்று மாராயர் சொல்லவில்லை. மக்களும் கேட்கவில்லை. கேட்க பயந்தார்கள். ஆனால் கவலைப்பட்டார்கள். கூடுதல் வரி விதிப்பா? இல்லை, கிராமத்தில் ஏதேனும் குறையா? இல்லை மறுபடியும் போருக்கு ஆள் திரட்டித் தரும்படி கட்டளை வருகிறதா?

மாராயர் கூடவே வரும் கல்தச்சரையும், ஓலை வாசிப்பவனையும் மக்கள் இனம் கொண்டார்கள்.

கல்தச்சர் எதற்கு வருகிறார்? சாசனம் ஏதோ எழுதப் போகிறார்கள் போலிருக்கிறது. நமது கோவிலுக்கு நிவந்தங்கள் ஏதேனும் தரலாம். ஜம்புநாதருக்கு பொற்கவசமும், விளக்குகளும் கேட்டிருந்தோமல்லவா? அவைகளைச் செய்வதற்காக பொற்காசுகள் கொண்டு வந்து தரலாம். "நூற்றுக்கு நாற்பது வரி தருகிறோம். இதற்கு மேல் வரி விதிப்பு இருக்காது" ஒரு கிழவர் உற்சாகமாகப் பேசினார்.

"அது இல்லை கிழவனே. எல்லா ஊரிலும் போர் வீரர்களுக்குத் தகுந்த மரியாதை செய்யப்படுகிறது. இந்த நரிப்பள்ளியில்தான் மதிப்பும், மரியாதையும் இல்லை. இதற்காக ஒரு விண்ணப்பமும் அனுப்பியிருந்தோம். அந்த விண்ணப்பம் படித்து, நிலங்கள் விநியோகிக்க வந்திருக்கிறார்கள். அந்த விண்ணப்பத்தில் உமையாள் நிலம் போல ஆற்றோர நிலம் வேண்டுமென்று கேட்டிருந்தேன். ஒருவேளை ஆற்றோர நிலம் தரலாம். அல்லது உமையாள் நிலத்தையே கூட எனக்குத் தரலாம்" ஒரு வீரன் உரக்கப் பேசினான்.

ஊர் மக்கள் அவனைத் திருப்பிப் பார்த்தார்கள். அவன் பெயர் பழுங்கூரன் குன்றன். கூகுர்பாடிக்கு அருகில் இருக்கும் நரிப்பள்ளி எல்லையிலிருந்து விலகியிருக்கும் மேலூரைச் சேர்ந்தவன். மேலூர் மேட்டுப் பாங்கான நிலம். வறண்ட பூமி. மழை பெய்தால்தான் விளைச்சலைப் பார்க்க முடியும். மழை பெய்யாத நேரத்தில் விவசாயிகள் மலையமான் காட்டுக்குப் போய் மரம் வெட்டி துண்டுகளாக்கி நரிப்பள்ளி சந்தையில் விற்பார்கள். காட்டு மரங்களுக்கு மதிப்பு அதிகம். அதைத்தவிர, கிராமத்திலிருக்கும் மரங்களை வெட்ட ஊர் மக்களுக்கு மனது வராது. கழுதைகளிலும், மாட்டு வண்டிகளிலும் மரம் இறங்க ஒரு வண்டி விறகு, இரண்டு பொற்காசுகளுக்குத் தரப்படும்.

அவ்விதம் விறகு வெட்டி வாழ்ந்து வந்த பழுங்கூரன்குன்றன் மாடுகள் வாங்க ஆரம்பித்தான். ராஜேந்திரர் காலத்திற்குப் பிறகு பகை நாட்டிலிருந்து பிடித்து

வந்த ஆடுகளும், மாடுகளும் அதிகம் கிடைத்தன. மிகக் குறைந்த விலைக்கு ஆடுகள் கிடைத்தன. மலைப் பகுதியில் மரம் வெட்டிக் கொண்டிருப்பதைவிட, அடர்ந்த காடுகளில் ஆடு ஓட்டிச் செல்வதைவிட, நரிப்பள்ளி போன்ற சமவெளியில் ஆடுகள் மேய்ப்பது எளிது. பழுங்கூரன்குன்றன் கூகுர்பாடி எல்லையிலேயே குடிசை போட்டுத் தங்கினான். ஆற்றங்கரை வயல்களில் நீர் பாய்ந்து வரப்புகளில் வளர்ந்திருக்கும் புற்களில் தன் ஆடுகளை மேய விடுவான்.

ராஜாதி ராஜன் வடக்கே போகப் படைகள் திரட்டிய போது, தன் ஆடுகளையும், மாடுகளையும் அரசருக்கே விற்றுவிட்டு, வலங்கைப்படையில் சேர்ந்து கொண்டான். ராஜதி ராஜன் யானை மீது இறந்ததைக் கண்ணால் பார்த்ததாகச் சொன்னான். அவர் தம்பி ராஜேந்திரத் தேவரின் உடம்பில் அம்புப் படமாலிருக்க அம்பாரிக்கு அருகே உட்கார்ந்து கொண்டதாகச் சொன்னான்.

ஆனால், மற்ற வீரர்கள் அதை மறுத்தார்கள்.

"இவன் அங்கே ஆடு வெட்டி படையினருக்குக் கறி சமைத்துப் போட்டவனல்லவா. இவன் எங்கே போருக்கு வந்தான்?"

"இவன் அம்பாரியில் பின் பக்கம் உட்கார்ந்துகொண்டு பெருங் கூச்சல் போட்டது உண்மை. ஆனால், போர் முடிந்து ஊருக்குள் போன போதுதான் இவன் ஏறினான். மற்றபடி போரில் இவன் யாரையும்

வெட்டியதாகத் தெரியவில்லை. இறந்து போன நம் வீரர்களின் சிதையில் வைக்கும் முன் நெஞ்சு பிளக்க இவனுக்கு கட்டளை இருந்தது. அதையும் இவன் சரியாகச் செய்யவில்லை. ஒரு முறை ஒரு வீரன் முகத்தில் வெட்டி விட்டான். மாராயர்கள் சீற இறந்த வீரனின் காலைத் தொட்டு மன்னிப்புக் கேட்டு மறுபடி நெஞ்சு வெட்டினானாம். ஆனால், அந்தப் பழங்கூரனிடம் ஒரு தந்திரமிருந்தது. காடு வெட்டிகளுக்கே உண்டான தந்திரம். காதுகளைக் கூர்மையாக வைத்திருக்கும் சூட்சுமம். செடி அசைவுகளைக் கொண்டு கடந்து போகும் மிருகத்தைச் சரியாகச் சொல்வதைப் போல, மனிதனின் அசைவுகளைக் கவனிக்கும் வித்தை. எப்போது பேசலாம், எப்போது பேசக் கூடாது என்று தெரிந்த பாங்கு. எவரோடு உரக்கப் பேசலாம் என்கிற விவரம்.

காட்டில் நிற்கும் போது நரிகள் சூழ்ந்து கொண்டால், கண்டபடி பேச வேண்டும். உதவிக்கு பல ஆட்கள் இருப்பது போல நாலு திக்கிலும் பார்த்துக் கத்த வேண்டுமாம். "அடேய் காரி, பொன்னான் ஓடிவா" என்று பல்வேறு திசை பார்த்து ஆட்களைக் கூப்பிட, நரிகள் அவன் கூவின திசையையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருக்குமாம். அப்படித் திரும்பிப் பார்த்துக் கொண்டிருக்கும் நரியைத் தாக்கிவிட்டால் மற்ற நரிகள் ஓடிவிடுமாம். புலி எதிர்ப்பட்டால் மரம் ஏறிவிடவேண்டுமாம். கரடி எதிர்பட்டால் உடம்பு முழுவதும் துணி போர்த்தி அசையாது உட்கார்ந்துவிட வேண்டுமாம். யானை எதிர்பட்டால் வளைந்து வளைந்து ஓடிவிட வேண்டுமாம். அல்லது பள்ளத்தில் குதித்துவிட

வேண்டுமாம். மலையமான் காட்டில் கழுதைப்புலிகள் அதிகம். அதை ஏமாற்ற வேறு தந்திரம். கழுதைப்புலிகள் உயரம் கண்டு அஞ்சும். உயரமாய் அசையும் எந்தப் பிராணியைக் கண்டாலும் நடுங்கும். பழங்கூரன் குள்ளமானவன். நாலைந்து கழுதைப்புலிகள் ஒரு நாள் துரத்தியதும், வேட்டியை அவிழ்த்து அதைக் குச்சியில் சொருகி தன் தலைக்கு மேல் பிடித்துக் கொண்டான். ஒரு குதிரையின் முதுகு உயரத்திலுள்ள பழங்கூரன் ஒரு சிற்றானை உயரத்திற்கு ஆனான். இடுப்பில் துணியில்லாமல் வீடு வரையில் ஓடி வந்தானாம். தொடர்ந்து கழுதைப்புலிகள் ஒரு இடைவெளிவிட்டு ஓடிவந்தனவாம். அவன் நின்றால், அவைகளும் நிற்குமாம். துரத்தினால் சற்று பின்னடையுமாம். அவன் ஓடினால் பின்னாலேயே ஓடி வருமாம். கிராமத்திற்குள்ளும் கழுதைப்புலிகள் நுழைந்துவிடப் போகிறதே என்று இடுப்பில் துணியில்லாமல், குச்சியில் வேட்டி பிடித்து இருட்டும் நேரத்தில் ஓடி வருபவனைப் பார்த்து, கிராமத்துப் பெண்கள் பயந்து போய்க் கல்லெறிந்தார்களாம். அவன் லபோ லபோ என்று கத்த, ஒரு பெண் பெரிய ஈட்டி எரிந்தாளாம். அந்த ஈட்டி, ஒரு கழுதைப் புலியைக் கொல்ல; மற்றவைகள் ஓடிவிட்டனவாம். அவன் பயத்திலும், சோர்விலும் அப்படியே படுத்துவிட, ஊர்ப் பெரியவர்கள் வந்து வேட்டி கட்டினார்கள். உதைத்து எழுப்பிக் கூட்டிப் போனார்கள்.

ஆனால், பழங்கூரன்குன்றன் கெட்டிக்காரன், தந்திரசாலி, மிருகங்களைத் தெரிந்தவன். அந்தக் கழுதைப்புலியைப் பாடம் செய்து அரண்மனைக்கு

எடுத்துப்போய், தான் போராடிக் கொன்ற மிருகம் என்று சொல்லி, அவருக்குக் காணிக்கையாகக் கொடுத்தான்.

புலியைக் கொடியாகக் கொண்ட சோழ வம்சத்தினர் கழுதைப்புலி என்றதும் கலவரமடைந்தார்கள். அதைப்பற்றி சோழ இளவரசிகள் கேள்வி கேட்டார்கள். மன்னனுக்கு முன்னேயும் கழுதைப்புலி எப்படித் தாக்கும், எப்படித் தொடரும், எப்படி நிற்கும், அதை எப்படி ஏமாற்ற வேண்டும் என்று பழங்கூரன்குன்றன் நடித்துக்கட்ட, சோழ அரச சபை வாய்விட்டுச் சிரித்தது. கழுதைப்புலியைவிட அவன் கோமாளித்தனம் சுவையாக இருந்தது. அந்த நடிப்புக்காக அவன் உழக்கு பொற்காசும், துணிகளும், சில முத்து மாலைகளும், சமையல் பாத்திரங்களும் வாங்கி வந்தான். அத்தனையும் வாங்கிக் கொண்ட பிறகு, பாடம் செய்து கொடுத்த கழுதைப்புலிக்கு ஏதாவது விலை போட்டுத் தரக்கூடாதா என்று கேட்டானாம்.

"காணிக்கை என்று சொல்லிவிட்டு, விலை கேட்கிறாயே..." என்று அரசர் புருவம் சுருக்க, தவறு தவறு" என்று கன்னத்தில் போட்டுக் கொண்டானாம்.

"மேற்கொண்டு வேறு ஏதேனும் தேவையிருப்பின், நமது மாராயரிடம் கேட்டுக்கொள்."

அவன் மாராயரையே பின்தொடர்ந்து போனானாம். அவர் நிற்க, இவனும் நின்றானாம். அவர் தொடர, இவனும் தொடர்ந்தானாம்.

"பழங்கூரன் குன்றன் வேறு, கழுதைப்புலி வேறு அல்ல. நீ மலையமான் காட்டு மேலூர் பழங்கூரன் குன்றன் அல்ல, வெறும் கழுதைப்புலி பழங்கூரன் குன்றன்" என்று மாராயர் கேலி செய்தாராம்.

அதற்கு பழங்கூரன் குன்றன் வினோதமாய்க் குரல் கொடுத்துச் சிரித்தானாம்.

"என்ன கேலி செய்கிறாயா?" என்று மாரயர் சீறினாராம்.

"கழுதைப்புலி அப்படித்தான் மனிதர்களைப் போல சிரிக்கும்" என்று மறுபடியும் சிரித்துக் காட்டினானாம். மாராயரும் அவன் சிரித்தது போலவே பலமுறை சிரித்துப் பார்த்தாராம். அவனைத் தன் மாளிகைக்கு அழைத்துப் போய் சோறு போட்டாராம்.

இன்னும் என்ன வேண்டும் என்று மாராயர் கேட்ட போது, தென்பெண்ணை ஆற்றங்கரையின் அருகேயுள்ள ராஜேந்திர வளநாட்டு நரிப்பள்ளம் கிராமம் பற்றிச் சொன்னானாம். ஆறுமாதம் ஓடுகின்ற நதி. வற்றாத கிணறுகள். நீர் ததும்பியிருக்கும் குளம். ஒரு முறை உழுது புரட்டினாலே நெல் விளையும் பூமி. மூன்று போகம் பயிர் செய்யக்கூடிய வசதி. துவரை, பயிறு என்று ஏதாவது போட்டுக்கொண்டேயிருக்கக் கூடிய நிலவளம். அடர்த்தியான தென்னை மரங்கள் இருக்கும் நீண்ட தோப்புகள். புதர் புதராய் வரும் மல்லிகைச் செடிகள். அகத்திக் கீரைக்கும், முருங்கை மரங்களுக்கும் நடுவே

வளரும் வெற்றிலைக் கொடிகள் என்று ஊர்வளம் அடுக்கி, அதில் ஒரு வேலி நஞ்சை நிலம் வேண்டுமென்று அவன் கேட்க, மாராயர் தீவிரமாய் யோசித்தாராம்.

"பழுங்கூரா கவலைப்படாதே. நான் ஆள் அனுப்புகிறேன். அல்லது நேரே வருகிறேன்" என்று அருண்மொழி உழக்கால் ஓர் உழக்கு பொற்காசு கொடுத்தாராம்.

பழுங்கூரன் இங்கே வந்து சோழ அரசபையையே தன் சுட்டு விரலுக்குள் என்பதாய் பேசினான். எந்த மாராயரும் அவனைக் கண்டால் கட்டித் தழுவிக் கொள்வார்கள் என்று கதையளந்தான். புலவர்தான் அவன் பேச்சுக்குச் சரியான பதிலடி கொடுத்தார்.

"காட்டு மிருகங்களைப் பற்றிச் சொல் பழுங்கூரா. நாங்கள் கேட்டுக் கொள்கிறோம். அவை பற்றி உனக்குத் தெரியும் என்று நம்புகிறோம். ஆனால், அரச குடும்பத்தைப் பற்றியோ, அவர்களின் அமைச்சர்களான மாராயர்கள் பற்றியோ, உனக்கு அதிகம் தெரிந்ததாய் தயவு செய்து பேசாதே. மிருகங்கள் இதுதான் செய்யும் என்று கண்டுபிடித்து விடலாம். அரசு அதிகாரிகள் என்னதான் செய்வார்களென்று யாராலும் கண்டுபிடிக்க முடியாது. அவர்கள் காட்டு மிருகங்களை விட கேவலமானவர்கள் என்பது உனக்கு தெரியாது. நீ சொல்லியிருந்த மாராயன் பத்து கழுதைப்புலிகளை ஒரே உருவத்தில் கண்டது போலக் கெட்டிக்காரன். உருமாறி சாளுக்கிய தேசத்தில் ஒரு ஆண்டு காலம் வேதியன் போல் வாழ்ந்தவன்.

நரிப்பள்ளம் பற்றி நீ அவனிடம் அதிகம் பேசிவிட்டாய் என்பதுதான் என் கருத்து. இது நல்லதில்லை. உன்னால் இந்த கிராமத்திற்கு கெடுதலும், இழுக்கும் வருமென்று நினைக்கிறேன்."

புலவரின் பேச்சு, பழுங்கூரனுக்குப் பிடிக்கவில்லை. தன்னோடு பின்னால் வந்த கழுதைப்புலிகள் கிராமத்தை நோட்டம் பார்த்துவிட்டன. நடு இரவே கூகுர்பாடி தெருவிலும், சுற்றுமுள்ள கிராமங்களிலும் அலைகின்றன என்று கதை விட்டான். நடுநிசியில் புலவரின் வீட்டு வாசலுக்குப் போய் கழுதைப்புலி போல் சிரித்தான். புலவருக்கு பயத்தில் காய்ச்சல் வந்துவிட்டது.

மற்றவர்களால் விவரம் தெரியவர, கிராம சபையில் பழுங்கூரானைப் பற்றி புகார் செய்தார். கிராம சபை பழுங்கூரானை கண்டபடி பேசி, "அடுத்த முறை இவ்விதம் நடந்தால், கசையடி தருவோம்" என்று கடுமையாய் எச்சரித்தது.

"நடுநிசியில் தெரு வழியே உலாவரக் காரணம் என்ன?" என்று இவனிடம் கேட்டது.

"தெற்கே காடுகள் அழித்து கிராமங்கள் உருவாவதால் மிருகங்கள் நடமாட்டம் கிராமத்திலிருப்பதாகவும், அதிலும் நரி, செந்நாய், கழுதைப்புலி போன்ற சிறு மிருகங்கள் ஆடு மாடுகளைச் சேதப்படுத்த வருவதாகவும், அதன் பொருட்டே அவன் ஊர் சுற்றி வருவதாகவும் சொன்னான். அதிலும்

குறிப்பாய் நரியின் தடயங்களைத் தான் கண்டதாகவும் கூறினான்.

ஆடு, மாடுகளுக்கு ஆபத்து என்றதும், கிராம சபை மிரண்டது. தெற்கு எல்லையில் அவன் காவல் செய்ய அனுமதி கொடுத்தது. புலவரைப் பற்றித் தனக்கு ஒரு புகார் இருப்பதாகப் பழங்கூரன் கூறினான்.

"என்ன?" என்று கிராம சபை கேட்டது.

கணவனில்லாத உமையாளோடு புலவர் நெருங்கிப் பழகுகிறார் என்று நடு சபையில் பேசினான். ஒரு கிராம அதிகாரி நடு இருக்கையை விட்டுக் கீழே இறங்கி அவன் கன்னத்தில் ஓங்கி அறைந்தான்.

"உமையாளைப் பற்றி எங்களுக்குத் தெரியும். அவள் நெருப்பு. இன்றளவும் கோவிலுக்கு உழக்கு நெய் வார்த்துக் கொண்டிருக்கிற குத்து விளக்கு. நெருப்பை அசுத்தமென்று எந்த நாயும் சொல்ல முடியாது" என்று கூச்சலிட்டார். சபை அனுமதியின்றி அவன் நரிப்பள்ளத்துக்கு நுழையக் கூடாது என்று கட்டளையிட்டார்.

அன்றிலிருந்து உமையாளைப் பார்க்க புலவர் வரவேயில்லை. உமையாளும் எவரோடும் பேசுவதில்லை.

அவளுடைய மகன் வீரன் மட்டும் பணமோ, மிளகோ, ஏலமோ, அல்லது மாடுகளோ பிறர் மூலம்

அனுப்பி வந்தான். "கங்கைகொண்ட சோழபுரத்தில் நீ செய்த கூத்தால் நரிப்பள்ளம் கிராமத்திற்கு இழுக்கு ஏற்பட்டிருக்கிறது. கழுதைப்புலி ஊரா என்று அதைக் கேட்கிறார்கள். உன்னால் ஊருக்கு நன்மை செய்ய முடியாவிட்டாலும் தீமையாவது செய்யாமலிரு. உழக்கு பொற்காசுக்காக ஊரை அடகு வைக்காதே. இன்னொரு முறை என் தாய் பற்றித் தவறாக ஏதேனும் சொன்னால் உன் தலை உன் உடம்பிலிருக்காது. என்னுடைய கௌரவம், என் மதிப்பு உனக்குத் தெரிய வேண்டுமெனில் தஞ்சை ராஜராஜேஸ்வரர் கோவிலுக்கு வா" என்று சொல்லியிருந்தான். பழங்கூரன்குன்றன் அதற்குப் பிறகு வாலாட்டவில்லை. தஞ்சைக்கும் போகவில்லை.

உமையாள் மட்டும் பெரிய வில் வண்டியில் ஊர்ப் பெண்கள் சிலரோடு தஞ்சை போய் வந்தாள்.

ராஜராஜேஸ்வரம் கோவில் பார்த்துவிட்டு மூர்ச்சையானாள். அகண்ட கோட்டைத் தளத்துக்குள் விமானமே சிவலிங்கம் போல் காட்சியளித்தது. வாயில் தாண்டி உள்ளே போனதுமே, கோவிலின் உயரம் இனம் புரியாத இறை உணர்வைக் கொடுத்தது. இறைவன் என்ற சக்திக்கு முன்னால் மனிதர்கள் தூசு என்கிற எண்ணம் வந்தது. அரசர்களும், அமைச்சர்களும், ஊர்ப் பெரியவர்களும், வணிகர்களும் கோவிலுக்கு இடைவிடாது தானங்கள் அளித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அளித்த தானத்தை ஓலையில் எழுதி, ஓலையில் எழுதப்பட்டதையே கருங்கல் சுவரில் சாசனமாக்கும் வேலை

வீரனுக்கு. கல்தச்சர்கள் எழுதிய சாஸ்திரம் சரியா என்று பார்க்கும் பொறுப்பு அவனுக்கு.

தஞ்சையில் உறுதியான ஓட்டு வீடு அவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. மாதமொன்றுக்கு பத்து கலம் நெல்லும், ஒரு கழஞ்சி பொன்னும் அவனுக்குக் கூலியாகக் கொடுக்கப்பட்டது. இளம் வயதிலேயே மிகப் பெரிய வருவாய் அது. அதைத்தவிர அவனுக்கு தஞ்சையில் மிகப்பெரிய மதிப்பு இருந்தது. அவன் வருகைக்காக மாராயர்கள் காத்துக்கொண்டிருந்தார்கள். பிழையே இல்லாது எழுதுபவன் என்று அவன் பெயர் பெற்றிருந்தான். தமிழில் தேர்ச்சியும், வடமொழியில் பயிற்சியும் பெற்றிருந்தான். அரசர் அளித்திருந்த நிவந்தங்களை தன் தாய்க்கு வீரன் படித்துக் காட்டினான். குந்தவைப் பிராட்டியாரிட்ட நிவந்தங்களையும், கிருஷ்ணன் தேவனான பிரம்மராயர் எடுப்பித்த மதிற்சுவரையும் காட்டினான்.

"நீ போருக்குப் போக வேண்டியதிருக்காதே வீரா..." என்று கவலையுடன் உமையாள் கேட்டாள்.

"உன் கவலை எனக்குப் புரிகிறதம்மா. நம் தந்தையைப் போலவோ, பாட்டனைப் போலவோ, நாம் போருக்குப் போக வேண்டிய அவசியமில்லை. நான் நிர்வாக அதிகாரி. வெகு சீக்கிரத்தில் நான் ஓலை நாயகமாகப் பதவி உயர்த்தப்படுவேன். தஞ்சையிலோ, பழையாறையிலோ, அல்லது கங்கைகொண்ட சோழபுரத்திலோ தங்கியிருப்பேன். அப்போது என்னுடன் வந்து தங்கிவிடு."

"வயல் வயலாக சுற்றிக் கருத்துக் கிடக்கிறாய். என்னோடு என் வீட்டின் நிழலில் அமர்ந்துகொள். இரவு தினமும் ஒரு கூத்தும், வில்லுப்பாட்டும் இங்கு கேட்டுக் கொண்டிருக்கும். உன்னை முதல் வரிசையில் உட்கார வைக்கிறேன். கூகுர்பாடி விட்டு இங்கு வந்துவிடு. இங்கு வேலைக்கு ஆட்கள் உண்டு. கோவில் தளிகையில் எனக்குப் பங்கு உண்டு. இங்கு குடிபெயர்ந்து வந்து விடு" என்று கேட்டான்.

"இது சரியாக இராது. நமது வயல்கள் கவனிப்பாரற்றுப் போய்விடும். இதைத் தவிர, என்னோடு பிணக்குக் கொண்டு வீட்டை விட்டுப் போன உன் தகப்பனார் வீடு வந்தால் அவரை நான் வரவேற்க வேண்டாமா? அவருக்காக நான் தினமும் ஏற்றுகின்ற நெய் விளக்கு ஏற்ற முடியாமல் போகுமே. நான் தஞ்சையிலிருக்க முடியாது வீரா."

"இப்போது நீ தஞ்சையில் தானே இருக்கிறாய். யார் விளக்கேற்றுவார்கள்?"

"கூட விலை கொடுத்து நாற்பது உழக்கு நெய் அளந்து கொடுத்துவிட்டு வந்திருக்கிறேன். கோவில் அதிகாரியிடம் நிச்சயம் ஏற்றுவதாய் சத்தியம் வாங்கியிருக்கிறேன். ஒவ்வொரு நாள் மாலையும் அங்கே விளக்கேற்ற வேண்டுமே என்ற கவலை எனக்கு வராமல் போவதில்லை. நரிப்பள்ளம் கூகுர்பாடிதான் என் இதயம். என் மரணம் அங்கேதான் ஏற்படும்."

"உனக்கென்ன வயதாகிவிட்டது... மரணம் பற்றிப் பேசுகிறாய்" பிள்ளை சீறினான்.

"என் வயது பற்றி சரியாகத் தெரியவில்லை வீரா. ஆனால், நாற்பது ஆண்டுகள் ஆகிவிட்டன. முன்பு போல வெகுதூரம் நடக்க முடியவில்லை. வில் வண்டி அனுப்பியதால் வந்தேன். அதிலும் தூங்கிக்கொண்டுதான் வந்தேன். உனது திருமணம் பற்றிப் பேசவும் வந்தேன்."

"அம்மா நான் திருமணம் செய்து கொள்வதாக இல்லை..."

"ஏன்? தேவரடியாள்கள் எவரோடாவது உறவு வைத்துக் கொண்டிருக்கிறாயா?"

"ஆமாம்."

"யாரது?"

"உனக்கு நன்கு தெரிந்தவரின் மகள்."

"இது திருமணமாகாதே..."

"இது அங்கீகரிக்கப்படாவிட்டால் கவலையில்லை. அமைதியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ வேண்டுமென்பதே என் விருப்பம். உன்னைப் போல் சகல திறமையுள்ள பெண்ணை புத்திசாலியானவளை நான் நேசிக்கிறேன். என் அதிர்ஷ்டமோ துரதிர்ஷ்டமோ அவள் தேவரடியாளாக

இருந்தாள். அரசரின் அனுமதி பெற்று அவள் எனக்கு வாழ்க்கைப்பட்டாள். நானே சகலமும் என்று தீர்மானித்துவிட்டாள். ஆடுவதை விட்டுவிட்டு பதிகங்கள் மட்டுமே பாடுகிறாள். அம்மா உனக்கு இதில் வருத்தமா..."

உமையாள் கண்மூடி யோசித்தாள்.

"எனக்கு தெரிந்தவரென்றாயே யாரது...?" என்றாள்.

மாலையில் வீட்டுக்குள் நுழைந்த பெண்ணைப் பார்த்து திகைப்பில் வாய் புதைத்தாள். ஓடிப்போய் தழுவிக் கொண்டாள். குடகுப்பெண். குடகில் வளர்ந்து சாளுக்கியரால் கவரப்பட்டு, பிறகு சோழர்களால் முசங்கியிலிருந்து கொண்டு வரப்பட்ட பெண். ஒரு சாளுக்கியனுக்கு வாழ்க்கைப்பட்டு அவனால் தொடப்படாது அவள் வீட்டிலேயே தங்கிய பெண். அவளுக்கு வர்ணக்கோலம் கற்றுக்கொடுத்தவள். அவள் கையால் கஞ்சி குடித்தவள். உமையாளை சமையலில் தேர்ச்சி பெற வைத்தவள்.

"அந்தக் கிழவி எங்கே...?" உமையாள் பரபரப்பாகக் கேட்டாள். வந்த பெண்டீர் கூட்டம் மௌனம் சாதித்தது.

போன ஆண்டுதான் காவிரி வெள்ளத்தில் இறங்கி தன்னை மாய்த்துக் கொண்டாளாம்.

"தற்கொலையா? ஏன்? என்ன காரணம்?"

"உமையாளின் வீட்டை விட்டுக் கிளம்பியதுமே கங்கைகொண்ட சோழ புரத்திற்குப் போனார்களாம். புருஷனைப் பற்றி விசாரித்தார்களாம். அந்த சாளுக்கிய சேனாதிபதி தஞ்சை கோவிலில் அடிமையாக இருப்பதை தெரிந்து கொண்டாளாம். உடனே தஞ்சைக்குப் போனார்களாம். அங்கே புருஷனைப் பார்த்து காலில் விழுந்து அழுதாளாம். புருஷன் ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டானாம்.

"என்னை அடிமையாக்கி என் மனைவியையும் சிறைப்பிடித்து வந்திருக்கிற சோழர்களிடையே, இந்த சோழ பூமியில் நான் குடித்தனம் செய்ய முடியாது. குடும்பம் நடத்த முடியாது" என்று சொல்லிவிட்டானாம்.

"உன்னை அடிமைத் தலையிலிருந்து விடுவிக்க எனக்கு அனுமதியிருக்கிறது. அவ்வாறு ஓலையெழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. விடுதலை பெற்று சாளுக்கிய தேசம் போகலாம்" என்று கேட்ட போது மறுத்து விட்டானாம்.

"போரில் அடிமைப்பட்ட நான் பெண்டாட்டியால் விடுதலை பெற விரும்பவில்லை" என்று சொல்லி விட்டானாம்.

"எனக்கும் சிவபெருமான்தான் தெய்வம். இந்த சோழர்களுக்கும் சிவன்தான் தெய்வம். சோழர்களுக்கு வெற்றியும், சாளுக்கியர்களுக்குத் தோல்வியும் இந்த சிவன் கொடுத்தாரென்றால், நான் இங்கு அடிமையாக இருப்பது

இறைவனின் கட்டளை. அந்தப்புரத்திலோ, அரண்மனையிலோ அடிமையாக இல்லாமல், இதோ எதிரேயிருக்கிற சிவனுக்கு நான் அடிமையாக இருக்கிறேன். அதில் எனக்கு பரம சந்தோஷம். உயிருள்ளவரை சிவபெருமானுக்கு அடிமையாய் இருப்பேன். இறந்த பிறகு மறுபடியும் சாளுக்கியனாகப் பிறப்பேன். க்ஷத்ரியனாய்ப் பிறப்பேன். அப்படிப் பிறந்து இந்த சோழ சாம்ராஜ்யத்தை நிர்மூலமாக்குவேன். சோழ அரச குலப் பெண்களை சிறைப்பிடித்து வந்து என் அரண்மனையில் தாதிகளாக்குவேன். அதற்காகவே இந்த அடிமைத்தவம். இந்த அடிமைத் தவத்திலிருக்கும் எனக்கு வேறெந்த சுகமும் தேவையில்லை. இது சிவன் ஆணை" என்று மறுத்து விட்டானாம்.

அந்தக் குடகுப் பெண்ணைப் பார்த்து, நீ எனக்கு மனைவியே அல்ல. உன்னை மனைவியாக நான் ஒருபோதும் நினைக்கவில்லை. உனக்கு சாளுக்கியர்களிடமிருந்து ஆபத்து நேரக்கூடாது என்பதற்காகத்தான் என் மனைவி இழுத்து வந்தாள். நீ பொது மகளாகிவிடக் கூடாது என்பதற்காகத்தான் உன்னைக் காப்பாற்றினாள். என் மகள் வயதொத்த உன்னை மனைவியாக நான் நினைக்கவில்லை. உன்னைக் காப்பாற்றிய புண்ணியம்தான் என் மனைவிக்கு அடிமை நிலையிலிருந்து விடுதலை கிடைத்திருக்கிறது. உன்னை நான் தொடாமல் விலகி நின்ற ஒழுக்கம்தான் என்னை இன்னும் உயிரோடு வைத்து இறைபணி செய்யச் சொன்னது. ஆனால், திருவெற்றியூரிலிருந்து இவளைக் கதறக் கதறப் பிடித்து வந்தேனே, என் காமக் கிழத்தியாக,

இவளை வைத்துக் கொண்டேனே அதற்கான தண்டனை இது, எனக்குக் கொடுக்கப்பட்டு விட்டது."

மேலே போர்த்தியிருந்த துணியை இறக்கி முதுகு காட்டினானாம். முதுகு முழுவதும் சவுக்கால் அடித்த தழும்புகளாம்.

"சாளுக்கிய சேனாதிபதியாக இருந்த என்னைச் சவுக்கால் அடித்து அடித்து சாதாரண மனிதனாக்கி விட்டார்கள். இந்தச் சவுக்கடிக்கு பதிலடி தராமல் போவேனா? அடுத்த பிறவியில் தருவேன். இது சிவன் ஆணை..." என்று சூளுரைத்தானாம்.

குடகுக்காரி கையிலும் விடுதலை ஓலையிருந்ததால் வேளத்துக்குக் கொண்டு போகப்படாமல், பொது மகளாக்காமல் கோவில் வேலைக்குப் போகச் சொல்லி விட்டார்களாம். குடகுக்காரி சூல இலச்சினையிட்டுக் கொண்டு, அப்பை என்கிற தன் பெயரை பொன்னாச்சி என்று மாற்றிக்கொண்டு தேவரடியாளாகி விட்டாளாம். பிரம்மராயரின் உறவுக்காரரான ஒரு அந்தணப் போர் வீரனுக்கு அனுக்கியானாளாம். அவளுக்கும், அவருக்கும் பிறந்த குழந்தைதான் எச்சுமி என்ற பெண்ணாம். அந்த எச்சுமியைத்தான் வீரன் திருமணம் செய்து கொண்டிருக்கிறானாம்.

எச்சுமியை அழைத்து வந்தார்கள். அவள் குனிந்து உமையாளை நமஸ்கரித்தாள். அவள் முதுகிலும்,

தேவரடியார்களுக்கான குல இலச்சினை இருந்தது. எச்சுமி சூலுற்றிருந்தாள்.

வேளாளர் குல வம்சா வழி அறுந்து போயிற்று. எச்சுமிக்குப் பிறந்தவளை வேளாளனாகக் கொள்ள முடியாது. வீரமும், விவசாயமுமாக இருந்த குலம், வீரனோடு நின்று போயிற்று. எச்சுமி ஏழு மாத கர்பிணியாய் இருந்தாள். உடம்பு மெலிந்திருந்தது. முகத்தில் சோகையிருந்தது. வயிற்றில் ஆண் குழந்தை இருந்தால்தான் இப்படி சோகை வரும்.

நிர்வாக அதிகாரிக்கும் தேவரடியாளுக்கும் மகனாக சோழ தேசத்தில் பிறந்தவன் என்னவாக வளருவான். பதிகம் பாடுவானா? இல்லை, ஓலை எழுதுவானா? எதுவாயினும் சரி. அவன் போருக்குப் போக மாட்டான். பிறர் தலை கொய்ய மாட்டான். தன் தலை கொய்து கொள்ள மாட்டான். உமையாளுக்கு வருத்தமாகவும் இருந்தது. சந்தோஷமாகவும் இருந்தது.

"அம்மா, எச்சுமி பதிகம் பாடுவதில் வல்லவள். ஒரு பாட்டு கேட்கிறாயா...?

எச்சுமி மரத்தூண் ஓரம் உட்கார்ந்து பாடினாள்.

தோடுடைய செவியன்
விடை ஏறி ஓர்
தூவெண்மதிச் சூடி
காடுடைய சுடலை

பொடி பூசி என்
உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான்
முனைநாள் பணிந்தேத்த
அருள் செய்த பீடுடைய பிரமா
புரமேவிய பெம்மான்
இவனன்றே...

பண்ணும், கவிதையும் நெஞ்சைக் கவ்வின. ஞானசம்பந்தர் பெருமான் பற்றி எச்சுமி கதைப் பாட்டாய் சொன்னாள். பல பதிகங்கள் பாடினாள். உமையாள் எச்சுமியை அருகே வரவைத்து தலையைத் தடவினாள். தன் கழுத்தில் அணிந்த காரையையும், காசு மாலையையும், புஜத்தில் அணிந்திருந்த வங்கிகளையும், குரங்குச்செரி என்கிற நகையையும், கால் தண்டையையும், கைவிரல் மோதிரங்களையும் அவிழ்த்து உமையாள் எச்சுமிக்குப் பூட்டினாள்.

"குழந்தாய்! உன்னை நான் ஏற்றுக்கொண்டேன். என் ஊர் ஏற்குமா என்று தெரியாது. உன் குழந்தைகளுக்கு போரற்ற வாழ்க்கையைப் பற்றிச் சொல்லிக் கொடு. இது கலிகாலம். குலப்பெருமைகள் பேசுவதில் இனிப்பயனில்லை. ஜாதி சண்டைகள் தேவையில்லை. ஒழுக்கத்தோடு உன் புருஷனைப் போற்றிப் பாதுகாத்து வா. பதிகம் பாடி எல்லோர் மனதிலும் இறை உணர்வு ஏற்று. இன்னும் ஒரு பாட்டு பாடு..."

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைவகலும்

எண்ணி நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலன்
கண்ணி நல்ல ஊறும் கழுமல வளர்நகர்
பெண்ணில் நல்லாளோடு பெருந்தமை இருந்ததே.
மற்றொரு பற்றிலை நெஞ்சமே மறைபல
கற்ற நல் வேதியர் கழுமல வளர் நகர்
சிற்றிடை பேசல்குல் அருந்திழை அவளொடும்
பெற்றெனை ஆளுடை நெருந்தகை இருந்ததே.

உமையாளுக்கு நெஞ்சு விட்டுப் போயிற்று. பாடப்பாட பல பதிகங்கள் மனனமாயின.

"சரி, கிழவி ஏன் செத்துப் போனாள்?"

"புருஷன் கோவிலுக்கு அடிமையெனில் தானும் கோவிலுக்கு அடிமையென்று கிழவியும் சிவத்தொண்டு செய்தாளாம். மாலை கட்டியும், கோவில் பிரகாரம் துடைத்தும் வேலை செய்தாளாம். அதற்காகக் கூலி வாங்கிக்கொள்ள மறுத்தாளாம். குடகுப் பெண் வீட்டில் மட்டும் ஒரு வேளை உணவு எடுப்பாளாம். துடைத்த இடத்தில் எண்ணெய் சிந்தியிருக்க, யாரோ ஒரு சோழ வீரன் வழுக்கி விழ, சுற்றியுள்ள பெண்கள் சிரித்து விட்டார்களாம். யார் துடைத்தது என்று சோழ வீரன் கேட்க, எல்லோரும் கிழவியைக் காட்டினார்களாம். சோழ வீரன் அவளை எட்டி எட்டி பலமுறை உதைத்தானாம். தலை மயிரைப் பிடித்து எண்ணெய்யில் புரட்டி இழுத்தானாம். அவள் புருஷன் சாளுக்கிய சேனாதிபதி இதைக் கை கட்டிப் பார்த்துக்கொண்டே இருந்தானாம். அவனை நோக்கி கை கூப்பி கிழவி அழுதாளாம். 'நான்

அடிமை. எதுவும் செய்வதற்கில்லை' என்று அவன் சொல்லி விட்டானாம்.

மூன்று நாட்கள் நந்தி மண்டபத்திலேயே நீர் அருந்தாமல் உபவாசமிருந்தாளாம். நான்காம் நாள் கோவிலை வலம் வந்துவிட்டு, புருஷனை வணங்கிவிட்டு, திருவையாறு நோக்கி நடந்து, அங்கே படித்துறையில் ஒரு நாள் முழுவதும் அமர்ந்துவிட்டு, விடியலில் நீரில் இறங்கி ஆற்றோடு போய் விட்டாளாம். உமையாள் கொடுத்த ஓலையை முடிந்தால் அவளுக்கே திருப்பியனுப்பும்படி சொல்லி விட்டாளாம். அந்த ஓலை மீது பொன் பூசி பத்திரமாக வைத்திருக்கிறாளாம்.

பெட்டியிலிருந்து சுருட்டப்பட்ட ஒரு பொன் ஓலையை உமையாளிடம் குடகுப் பெண் கொடுத்தாள். காதிலிருந்து தொங்கு தோடுகளைக் கழற்றி உமையாள் குடகுக்காரியிடம் கொடுத்தாள்.

"இது பத்து கழஞ்சி இருக்கும். இதை விற்று நந்தி மண்டபத்திற்கு அருகே நெய் விளக்குப் போடு. தற்கொலை செய்து கொண்ட கிழவியின் மனம் சாந்தியடையட்டும். அவள் மனக்கேதம் இந்த நெய் விளக்கால் தீரட்டும்..."

"அம்மா, உங்களிடம் வேறு நகையே இல்லை" பிள்ளை கவலையோடு கேட்டான்.

"இது போதும்" தங்க ஓலையை கிழவி காது தொன்னையில் மாட்டிக் கொண்டாள். மறு நாளே நரிப்பள்ளம் கிராமம் நோக்கி வில் வண்டியில் பயணமானாள். அன்றிலிருந்தே வாழ்க்கை விசித்திரமாகப் போய்விட்டது.

வீசும் காற்றையும், எரியும் நெருப்பையும், ஓடும் நீரையும், விரிந்து கிடக்கும் பூமியையும், வானத்தையும் பார்ப்பதே வழக்கமாகி விட்டது.

கிழவியின் மரணம் அவளை உலுக்கி விட்டது. கிழவியின் மரணத்தைவிட அவள் புருஷனான சாளுக்கிய சேனாதிபதியின் மரணம்தான் இன்னும் மோசமாக இருந்தது. ராஜராஜேஸ்வரத்தின் விமானங்களின் மேலேயுள்ள பொற் கலசங்களைத் துடைக்கச் சொல்லி அவனை அனுப்பினார்களாம். அழுத்தி அழுத்தி பளபளப்பாகத் துடைத்தானாம். ஒரு நாள் முழுவதும் அங்கிருந்தபடியே சுற்றி சுற்றிப் பார்த்தானாம்.

"இருட்டி விட்டது. கீழிறங்கி வா" என்று கத்தினார்களாம்.

"இல்லை போகிறேன்" என்று பதிலுக்குக் குரல் கொடுத்தானாம். தலைக்கு மேல் கரம் கூப்பி தரை நோக்கிப் பாய்ந்து விட்டானாம். மோதிச் சிதறி மதில் சுவரில் ரத்தம் தெறித்ததாம். கடைசி வரை அந்தக் கோவிலை ராஜராஜேஸ்வரம் என்று அவன் கூப்பிடவேயில்லையாம். பெரிய கோவில் என்றே

அழைத்தானாம். "சாளுக்கிய தேசம் வாழ்க! பெரிய கோவில் சிவனார் வாழ்க!" என்று கத்திய பிறகே தரை பாய்ந்தானாம்.

குடகுக்காரியும், எச்சுமியும், தஞ்சையை விட்டு வேறு ஊர் போய்விடலாம் என்றுதான் சொல்லிக் கொண்டிருக்கிறார்களாம். வீரனும், திருவையாறுக்கு அல்லது திரிபுவனத்திற்கு ஓலை நாயகமாகப் போக விண்ணப்பித்திருக்கிறானாம். தஞ்சையில் வாழ அவனுக்குப் பிடிக்கவில்லையாம். ஊர் மாறினால் தகவல் அனுப்புகிறேன் என்றார்கள். மாறின தகவல் வரவேயில்லை. ஒரு வேளை மாறவில்லையோ என்னவோ.

ஆனால், புருஷனைப் பற்றி ஒரு நாள் தகவல் வந்தது. ஒரு உரியில் மண்சட்டி வைத்து, பொன்தாமன் என்று பெயர் எழுதி அவள் வீட்டு வாசலில் வைக்கப்பட்டது. தஞ்சையிலிருந்து சாதாரண வீரனொருவன் அதைத் தூக்கிக்கொண்டு வந்திருந்தான்.

03

ராஜராஜேந்திரன் ஈழத்து அரசர்களை அடக்கப் படையெடுத்த போது, அந்தப் போரில் கலந்து கொண்ட பொன்தாமன், படுகாயப்பட்டானாம். எடுத்துக் கொண்டு வந்து சோழர்கள் கைப்பற்றிய பௌத்த விகாரத்திலேயே வைத்து புத்த பிட்சுக்களுக்கு கட்டளையிட்டு மருத்துவம் பார்க்கச் சொன்னார்களாம். நினைவிழந்த நிலையிலிருந்த பொன்தாமன் உட்கார்ந்து பேசுகின்ற விதமாய்த் தேறி வந்தானாம். ஒரு நாள் படுக்கையில் "பொன்தாமன்

இறந்து போனான்" என்று அவன் கையெழுத்திட்ட ஓலையிருந்ததாம். நாலா திசைகளிலும் தேடினார்களாம். கடற்கரை ஓரமாய் ஒரு பிணம் எரிந்து கிடந்ததாம். அதுதான் பொன்தாமன் என்று அடையாளம் கண்டு, எலும்புகளைத் திரட்டிப் பானையில் வைத்து இங்கே அனுப்பியிருக்கிறார்களாம்.

உமையாளால் நம்ப முடியவில்லை. ஜம்புநாதர் கோவிலுக்கு ஓடினாள். நல்ல சொல் தந்துவிட்டு, இப்போது கெட்ட சொல் கேட்க வைத்திருக்கிறாய். உனை நம்பி அவருக்காக விளக்கேற்றினேனே. இது முறையா, நீ இறையா என்று கூவினாள்.

உழக்கு நெய் காசு கொடுத்து கோவிலில் வாங்கினாள். அவர் உயிரோடிருந்தால் இந்த தீபம் எரியும். இல்லையெனில் உடனே அணையும். காற்றே, வெளியே, நீரே, நெருப்பே, என் பூமியே எனக்கு செய்தி சொல்லுங்கள். எனக்கு தோழர் நீங்களே. எனக்கு உண்மையைச் சொல்லுங்கள். என் புருஷன் இருக்கிறானா, இறந்தானா என்று சொல்லுங்கள். கோவில் விளக்கிலிருந்து நெருப்பெடுத்து தன் விளக்கு ஏற்றினாள். காற்று அசையாமலிருந்தது. தீபம் சுடர் விட்டு எரிந்தது. மறுநாள் கலை வரை விளக்கினடியிலேயே உமையாள் சுருண்டு படுத்திருந்தாள். அடுத்த நாள் வரை அந்தத் தீபம் அசையாமலிருந்தது. அதை ஊர் ஜனங்களும் பார்த்தார்கள்.

அஸ்திக் கலசத்தை உறியோடு எடுத்து வந்து, இது என் புருஷனில்லை என்று கிராம சபை முன்பு வைத்துவிட்டாள். கிராமம் திகைத்தது. இந்தச் செய்தி உறுதிப்படும் வரை உமையாள் விதவையில்லை என்று தீர்ப்புக் கூறியது. அந்த அஸ்திக் கலசத்தைத் தனியே புதைத்து, பெயர் தெரியாத சோழ வீரன் என்று நடுக்கல் இட்டது. இந்தச் கூச்சல் நடந்த சில நாட்களில்தான் அரசரின் ஸ்ரீமுகம் வந்தது. கோவிலில் ஸ்ரீமுகத்தை பிரித்துப் படித்தார்கள்.

ராஜேந்திரன் மகனும், ஆனை மேல் இறந்த ராஜாதி ராஜனின் தம்பியும் இன்றைய சோழ அரசனுமான ராஜேந்திர தேவர் உத்தரவுப்படி ராஜேந்திர வளநாட்டு நரிப்பள்ளி கிராமம் முழுவதும் சோழ அரசரின் மாராயர் மிளாடுடையார் மூவேந்த வேளார் அவருக்கு, அவர் போரில் புரிந்த உதவிகளைப் பாராட்டி தானமாகக் கொடுக்கப்பட்டது. இனி, அந்த நிலம் முழுமைக்கும் அவரே உரிமைதாரர். அந்த நிலங்கள் இப்போது அனுபவித்துக் கொண்டிருப்பவர்களுக்கே உரிமையானாலும், அதன் மீது இதுவரை சுமத்தியிருக்கப்பட்டிருக்கும் வரியை அரசருக்குக் கொடுக்காது, மூவேந்த வேளாளருக்குக் கொடுக்க வேண்டும். நான்காவது வருணத்தினர் நிலம், சுடுகாடு, கோவில் நிலங்கள் போன்ற வரி விலக்கு அளிக்கப்பட்ட நிலங்கள் தவிர மற்ற நிலங்களின் வரிகள் அனைத்தும் மூவேந்த வேளாளரையே சாரும். அதே சமயம் மூவேந்த வேளாளரிடமிருந்து வரி வசூலிக்க சோழ மன்னர் பரம்பரைக்கு அனுமதியில்லை. சந்திர சூரியர் உள்ளவரையில் மூவேந்த வேளாளர் பரம்பரை இதை

அனுபவித்துக் கொள்ளுமாறு காணிக்கையாக இந்த ஸ்ரீமுகம் கொடுக்கப்பட்டது. இதற்கு அதமம் பண்ணியவர்கள் கங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற குற்றத்திற்கு ஆளாவார்கள். பரமேஸ்வரர் ரட்சை. இந்த ஓலையின் வாசகங்களை கல்லிலே வெட்டிக் கொள்ளும் உரிமையையும் கொடுத்தோம். இவை என் எழுத்து என்று ராஜேந்திர தேவரின் கையெழுத்தும், சோழ இலச்சினையும் பொறிக்கப்பட்டிருந்தன.

ஊர் திகைத்தது. அரசர் ஆணை என்பதால் வேறு வழியின்றி ஏற்றுக் கொண்டது.

மாராயர் மூவேந்த வேளாளர் தொண்டையைச் செருமி எழுந்து நின்றார்.

"இது உங்களுக்கு நல்லது என்று புரிந்து கொள்ளுங்கள். எப்போது வரி விதிக்கும் அதிகாரம் எனக்கு இருக்கிறதோ, அப்போது உங்களைப் பாதுகாக்கின்ற கடமையும் எனக்கு வந்துவிட்டது. வரிக்கொள்முதல் அங்கங்கே நடக்கின்ற அத்து மீறல்களை நீங்கள் கேட்டிருப்பீர்கள். ஊர் நிலவரம் தெரியாமல், விளைச்சல் பற்றி அறியாமல் நூற்றுக்கு நாற்பது கலம் நெல் கொள்முதல் செய்கின்ற கட்டாயங்களை நீங்களும் அனுபவித்திருக்கிறீர்கள். அப்படி நடக்கக் கூடாது என்பதற்காகவே இப்படி பெரிய கிராமங்களை சோழ மன்னர் பிரித்து ஆளுமை செய்ய விட்டிருக்கிறார். இங்கே வரி இன்றிலிருந்து நூற்றுக்கு முப்பது கலமாகக் குறைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்..."

கூட்டம் எழுந்து ஆரவாரம் செய்தது. வரிக்குறைப்பை மிகுந்த சந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டது.

"இது மட்டுமில்லை. இங்குள்ள காடுகளைத் திருத்தி பெரிய வாய்க்கால்கள் வெட்டி ஊரின் ஒவ்வொரு மூலைக்கும் நீர் பாய்ச்சச் செய்வது என் பொறுப்பு. மேடான இடங்களில் குளமோ, கிணறோ வெட்டியும், அங்கேயும் சாகுபடிக்கு ஏற்பாடு செய்வதும் என் வேலை. அதையும் தவிர, இங்கு பெரிய பாடசாலைகள் ஏற்படுத்த வேண்டும். சுற்றியுள்ள பதினெட்டு கிராம பிள்ளைகளும் அந்தப் பாட சாலைக்கு வந்து போகும்படி பாதைகள் ஏற்படுத்த வேண்டும் என்பதும் என் விருப்பம். உங்கள் உடைமைகள் எதிலும் கை வைக்க எனக்கு உரிமை இல்லை. அரசருக்குச் செலுத்த வேண்டிய வரியை எனக்குச் செலுத்தினால் போதும். இங்கே நான் தங்குவதற்காக ஒரு மாளிகை எழுப்பப் போகிறேன். அரசுப் பணிகளுக்காக அவ்வப்போது கங்கைகொண்ட சோழபுரம் போய் வருவேன். உங்கள் குறை எதுவாயினும் என்னிடம் சொல்லலாம்..."

"விலங்குகள் தொந்தரவு இருக்கிறதையா?" கூட்டத்தில் ஒருவர் கூறினார்.

"கழுதைப்புலி தொந்தரவு" இன்னொருவர் பதில் சொன்னார்.

"கழுதைப்புலி தொந்தரவா... இவனா தொந்தரவு செய்கிறான்?" மாராயர் பழங்கூரன்குன்றனைக் காட்டினார். ஊர் வாய்விட்டுச் சிரித்தது. கூட்டத்திலிருந்து புலவர் மட்டும் சிரிக்கவில்லை.

"இவனைத்தான் கழுதைப்புலி என்று தலைநகரில் சொல்கிறார்கள். அரசரை சிரிக்க வைத்து ஏகமாய் பரிசுகள் வாங்கிவிட்டானே..."

கூட்டம் மறுபடியும் சிரித்தது. பழங்கூரன்குன்றன் கழுதைப்புலி போல் சிரித்தான். மாராயர் அவனை சைகையால் அமர்த்தினார்.

"ஐயா, ஒரு சந்தேகம்" புலவர் எழுந்தார்.

"கேளுங்கள்."

"வரி குறைப்புக்கு நன்றி. நீங்கள் சொல்லும் திட்டங்கள் நிறைவேற இறைவன் அருள் செய்யட்டும். ஆனால், நரிப்பள்ளத்திலேயே நீங்கள் சதாகாலமும் இருக்க முடியாது என்பது எங்களுக்குத் தெரியும். இந்த ஊரில் உங்களுக்கு உரிமையிருந்தாலும், உங்களுடைய உடமைகளிலிருந்தாலும், கங்காபுரியிலேயே நீங்கள் தங்க வேண்டிய அவசியம் உங்களுக்கு உண்டு. அப்படி இருப்பின், உங்கள் சார்பாய் இங்கு வரி வசூலிக்க இங்கு யாருக்கு அதிகாரம் உண்டு என்பதை நீங்கள் தெளிவாகச் சொல்ல வேண்டும். இது பொறுப்புள்ள பணி. பொறுமையாகச் செய்ய வேண்டிய காரியம்.

கண்டவருக்கு அதிகாரம் கொடுத்து விடக்கூடாது. அப்படி பொறுப்பானவர் போரின் பொருட்டோ, வேறு வேலைக்காகவோ நீண்ட நெடு நாட்கள் ஊர் விட்டுப் போகக்கூடாது. நீங்கள் செய்யப் போகும் நீர்ப்பாசன வேலைகளை நின்று மேற்பார்வை செய்யும் திறனுடையவராய் இருந்தல் வேண்டும். பாதைகளைப் போடுதலும், பள்ளிக்கூடம் எழுப்புதலும், எளிதான வேலையல்ல. அதன் செலவினத்தில் கையாடல் செய்வதற்கோ, கருத்தில்லாமல் அழிப்பதற்கோ வகைகள் உண்டு. இந்த ஊருக்கு உடையவரான நீங்கள் இவ்வேலைகளுக்காய், இவ்வூர் ஆட்களையே நியமிக்க வேண்டும்.

"நல்ல சொல்... நல்ல சொல்..." ஊர் குரல் கொடுத்தது.

மூவேந்த வேளாளர் யோசித்தார்.

"புலவரே, உங்களை சிறு வயது முதல் நான் அறிவேன். நரிப்பள்ளி கிராமத்திற்கு அருகேயிருக்கும் வாளையூர் நகரத்தார்கள் என் பொருட்டு வரி வசூலிக்கும் பணியை மேற்கொள்வார்கள். ஒருவரைக் குறியிட்டுச் சொல்வதைவிட, வாளையூர் நகரத்தார்கள் அனைவரும் எனக்கு கணக்கு ஒப்பிவிக்க வேண்டுமென்றும், அந்தக் கணக்கை பதினெட்டு கிராம சபையும் ஒப்பிட்டுக் கையெழுத்திட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். ஆனால், பாதையமைப்பதையும், வாய்க்கால் வெட்டுவதையும் ஒரு கூட்டத்தினரிடம் விட்டால்

சரியாகாது. புலவரே, பல்வேறு திறமையுள்ள நீங்கள் இப்பணி எடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் மீது எனக்கு மிகுந்த நம்பிக்கையுண்டு. நீங்கள் அதற்கு என்ன செலவு என்று சொல்கிறீர்களோ அதனை மறுப்பின்றி ஏற்க நான் சித்தமாக இருக்கிறேன். இதற்கு முன் பணமாய் மூவாயிரம் பொற்காசுகள் உங்களிடம் தருகிறேன்."

பல்லக்கு போன்ற பணப்பெட்டி புலவர் முன்பு வைக்கப்பட்டது. புலவர் அதிர்ந்து தரையில் உட்கார்ந்தார். ஊர் அவரை ஏற்கும்படி நிர்பந்தித்தது.

அரசரின் இந்த ஸ்ரீமுகத்தை ஜம்புநாதர் கோவில் வெளி மதில் சுவற்றில் வெட்டினார்கள். அங்கங்கே வசூலித்து முன்வரியாக நூறு கலம் நெல்லை கூடை வண்டியில் ஏற்றி மாராயருக்குக் கொடுத்தார்கள். போகும் வழியில் மாராயர் உமையாள் நிலத்தை இறங்கிப் பார்த்தார். அவள் வயலை ஊடறுத்துப் போகும் வாய்க்காலை ஆழப்படுத்தி அந்த வாய்க்காலுக்கு கருங்கல் பாவச் சொல்லி, கட்டை மதகுகள் போடச் சொன்னார். மூன்று நாட்களில் அந்த வேலை முடிந்தது. அவளுடைய வயலில் நீரிழுத்துக் கொள்ளாது, கற்பாறைகளில் ஓடி ஊர் வாய்க்கால்களில் திபுதிபு என்று பரவியது.

அவர் போனதும் வரியைப் பற்றி அறுவடை நாளில் நினைவுபடுத்தும் வேலை பழங்கூரன் குன்றனுக்குக் கொடுக்கப்பட்டது. மூவேந்த வேளாளருக்கு இந்தக் கிராமத்தை தானமாகக் கேளுங்கள் என்று சொல்லிக்

கொடுத்ததே தான்தான் என்று பழங்கூரன் குன்றன் பெருமையடித்துக் கொண்டான்.

"அரசர் இன்னும் என்னை நினைவு வைத்திருக்கிறாராமே, ஆச்சரியமாக இல்லை" என்று அலட்டிக்கொண்டான். ஊருக்கு நீர் பாய்ந்த பிறகுதான் உமையாள் வயலுக்குப் பாய வேண்டும் என்று தானாகக் கட்டளையிட்டான். போருக்குப் போய்த் திரும்பி உழவு வேலை செய்ய விருப்பமில்லாத வெளியூர் ஆட்களைக் கூட வைத்துக்கொண்டு ஊர்க்காவல் அதிகாரி என்று வளைய வந்தான். கழுதைப்புலி போல் கத்துவதையே தன் சிரிப்பாக்கிக் கொண்டான்.

"மனிதன் சிரிப்பது போலிருந்தாலும், அது கழுதைப்புலியின் சிரிப்பு அல்ல, காமவெறி. பெண் துணையை அழைப்பதற்காக ஆண் மிருகம் போடும் கூச்சல். எனவே இனியும் அதைச் செய்யாதே" என்று புலவர் கோபித்துக்கொண்டார்.

"புலிக்குக் காமம் வந்தால் சிரிக்கும். புலவருக்குக் காமம் வந்தால் பெண்டாட்டியை நினைத்து பெண்களுக்கு நடுவே நின்று கவிதை பாடுவார்" என்று குன்றன் கூற, புலவர் அவனை அறைந்து கீழே தள்ளினார். ஊர் அவர்களை விலக்கியது.

"போக்கிரியிடம் பேச்சு எதற்கு?" என்று புலவரைச் சமாதானப்படுத்தியது.

ஒரு நாள் திறக்கப்பட வேண்டிய நேரத்தில் மதகு திறக்கப்படவில்லை. உமையாளுடைய நெற் கதிர் ஒரு நாள் முழுவதும் நீரின்றி வாடியது. உமையாள் புலவரிடம் போய் முறையிட்டாள். புலவர் பூட்டப்பட்ட மதகை உடைத்து பலகையைத் தூக்கிவிட்டார். இரவு முழுவதும் நீர் பாய்ந்ததும், விடியலில் மூடும்படி உமையாளைக் கேட்டுக்கொண்டார். மதகு திறந்தால் போதுமா, மடை புரட்ட வேண்டாமா? இருட்டில் யாரைக் கூப்பிடுவது. புலவர் ஆட்களை அழைத்து வருகிறேன் என்று போனார். கடும் இருளில் கால் தடம் மட்டுமே உணர்ந்து ஒவ்வொரு வயலாய் உமையாள் மடை புரட்டி விட்டாள்.

நடுநிசி தாண்டியும் ஆட்களும் வரவில்லை. புலவரும் வரவில்லை. எங்கோ கழுதைப்புலி கத்துகின்ற சிரிப்பொலி மட்டும் கேட்டது. சேலையை இறுக்கி போர்த்திக்கொண்டு சேறாகாமல் கீழ்பாய்ச்சி விட்டுக்கொண்டு, முழங்கால் சேற்றில் மெல்ல மெல்ல நடந்தபடி மடை திறந்து மூடியும், தனித்த பெண்ணாய் உமையாள் வேலை செய்தாள். கழுதைப்புலியின் குரல் வெகு அருகே கேட்டது. மண் வெட்டியை இறுகப்பிடித்து சுற்று முற்றும் பார்த்தாள். ஒரு தலை நகர்வது தெரிந்தது. காலில் மிதிப்பட்ட களிமண் கட்டியை எடுத்து முழு பலத்துடன் நகரும் உருவம் நோக்கி வீசினாள். அந்த உருவம், "அம்மா" என்று கத்தியது. குன்றன் அருகே வந்து, மறுபடியும் கழுதைப்புலி போல் கத்தினான். "பயந்துவிட்டாயா?" என்றான்.

"வெட்டிக் கொன்று விடுவேன். எதற்கடா கத்துகிறாய்? உமையாள் சீறினாள்.

"கழுதைப்புலிக்கு காமவெறி" குன்றன் மறுபடியும் மிருகமாய்ச் சிரித்தான். "பதிலுக்குப் பெண் கழுதைப்புலியும் சிரிக்கும். நீயும் சிரியேன்" அருகில் வந்து பல் காட்டினான்.

"என்னிடம் அடிபட்டு சாகப் போகிறாய். விலகிப் போ..."

"ஏன்...? புலவனுக்கு மட்டும்தான் விருந்து வைப்பாயா?"

"சீ... கிழவியடா நான். மானம் கெட்டவனே..."

"அதனாலென்ன, ஒரு ஆணை எந்த வயசிலும் பெண் சந்தோஷப்படுத்த முடியுமே. மகிழ மரத்தடிக்கு வா. சந்தோஷப்படுத்து" என்று அவள் கைகளைப் பிடித்து இழுத்தான். ஓங்கின மண் வெட்டியை இடது கையால் பிடித்து, வளைத்து சேற்றில் வீசினான். அவளை இறுக தழுவிக் கொண்டான். கள் வீச்சம் தாங்காமல் உமையாள் தவித்தாள். அவன் நெஞ்சில் அடித்தாள். சட்டென்று விலகி எங்கோ மறைந்து கொண்டான்.

உமையாள் தடுமாறி எழுந்தாள். சேறு விட்டு வரப்பில் நடந்து, வயலுக்கு நடுவேயிருந்த மகிழ மரத்தடி மண் தரையினருகே அமர்ந்துகொண்டாள். மரத்தின்

மீதிருந்த குன்றன் கீழே குதித்தான். அவள் பின்புறமாய் இறுக்கித் தழுவிக்கொண்டான். அவள் அப்படியே புரண்டு அவனைச் சேற்றில் அழுத்தினாள். முதுகோடு கட்டிக் கொண்டவன் முழங்கால் சேற்றில் மூச்சுத் திணறினான். அவளை உதறிவிட்டுக் கரையேறினான். தொண்டையில் சிக்கிய சேறால் கழுதைப் புலி இருமிற்று.

"உன்னை அனுபவிப்பது முக்கியமில்லையடி. உன்னை அனுபவித்தால் உன் நிலத்தையும் அனுபவிக்கலாமென்றுதான் முயற்சி செய்தேன். உணர்ச்சி கெட்ட முண்டமே. உன் நிலத்தை என் வசம் கொள்ளாமல் நான் ஓயமாட்டேன்" கத்திவிட்டுப் போனான்.

உடம்பு தலையெல்லாம் சேறாக உமையாள் கரையிலமர்ந்து மார்பிலடித்துக் கொண்டு அழுதாள்.

"என்னை இந்த கதிக்கு ஆளாக்கிவிட்டு எங்கேயோ போய்விட்டீரே" என்று புருஷனை நொந்தாள். விடியல் வேளையில் மண்வெட்டியை எடுத்துக்கொண்டு ஊர் திரும்பினாள். குளித்துவிட்டு புலவரின் வீட்டுக்குப் போய் விவரம் சொன்னாள்.

புலவர் கண்மூடி அவள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

"சரி, இதை வெளியில் சொல்ல வேண்டாம். இனி சிறிய சண்டை நடந்தாலும் குன்றனை நான் கொன்று விடுகிறேன்" என்றார்.

"இல்லை ஐயா. என் பொருட்டு எவரையும் கொல்ல வேண்டாம். கதிர் நன்கு பால்பிடித்து விட்டது. நாளைதான் கடைசி நீர் பாய்ச்சு. கதிர் முற்றியதும் அறுவடை செய்து கூலி போக பாதியை பாடசாலைக்குக் கொடுத்துவிடுகிறேன். பாதி நெல்லை நீங்கள் வாங்கிக்கொள்ளுங்கள். நான் நிலத்தைப் பள்ளிக்கு எழுதி வைத்துவிட்டு என் பிள்ளை இருக்குமிடம் நோக்கிப் போய் விடுகிறேன்."

"இந்த ஊரிலிருப்பது ஆபத்து என்று போகிறாயா?"

"இல்லை ஐயா. நிலம் முக்கியம் என்று எனக்குத் தோன்றிவிட்டது. என் நிலத்தை அடையவே என்னைக் கெடுக்க முயன்றிருக்கிறான். புருஷனில்லாத பெண் இருட்டில் பார்த்துக் கட்டிப் பிடித்து விட்டால் இணங்கி விடுவாள் என்று யோசித்திருக்கிறான். நான் இணங்கிவிட்டால் நிலத்தைக் கைக்கொள்ளலாமென்று கணக்குப் போட்டிருக்கிறான். பெண்ணாசையை விட மண்ணாசை மிகக் கேவலமானது. நிலத்தை பதிகங்கள் கற்றுக்கொள்ளும் மாணவர்களின் படிப்புக்காக என்று எழுதிவிடப் போகிறேன்.

"உன் முடிவு சரியானது உமையாள். ஆனாலும், இதைச் செய்ய இப்படியொரு நிகழ்ச்சி நடந்திருக்க வேண்டாம். யார் என்ன சொன்னாலும் சரி, அறுவடை முடியும்வரை உனக்குக் காவலாய் நானும் வருகிறேன்.

இன்று இரவும் அந்தக் கழுதைப்புலி வந்தால் வெட்டிக்கொன்று விடுகிறேன்."

"புலவரே, உங்களுக்கு ஆயிரம் பொறுப்புகள். பகல் முழுவதும் பல இடங்களில் அலைந்து திரிகிறீர்கள். இரவும் வேலையென்றால், உங்கள் உடல் நிலை என்ன ஆகும்?"

"பதினைந்து தினங்களில் அறுவடையாகி விடாதா? அதுவரை காவலிருக்கிறேன். நான் காவலுக்கு வருவதை நீ ஊருக்குச் செல்ல வேண்டாம்.

"ஐயா, இது தவறாகுமே..."

"ஆகாது. உன் மீது ஒரு பழிச்சொல்லும் வராது பார்த்துக் கொள்ள எனக்குத் தெரியும். தைரியமாகப் போய் வா..."

மாலையில் கஞ்சிக்கலயமும், துவையல் சட்டியுமாய் உமையாள் வயல் பக்கம் போனாள். மாலையில் தானே மடை திறந்து, இருட்டும் வரை மடை புரட்டிவிட்டு பரணில் உட்கார்ந்து கொண்டாள். இருட்டிய பிறகு கை விளக்கோடு புலவர் வயல் நோக்கிப் போவதை குன்றன் பார்த்தான். சிரித்தான். மதகுக்கு மறுபடியும் பெரிய பூட்டாய்ப் பூட்டினான். தினமும் குடித்துவிட்டு உடைக்கும் மண் சட்டியை உடைக்காமல் தன் வீட்டுக்குப் பின்புறம் அடுக்கி வைத்தான்.

மண் இருகியது. வெயில் காய கதிர் தலை சாய்ந்தது. உமையாள் அறுவடைக்கு கூலி பேசி ஆள் இறக்கினாள். அறுத்த கதிரை மாடுகள் விட்டுப் போரடித்தாள். கூலிப் பெண்களை அழைத்து வந்து தூசும், தும்பும் அகற்றினாள்.

நல்ல நிலவு வெளிச்சத்திலும் அறுவடை நடந்தது. கூடை கூடையாக நெல் அவள் வீட்டு முற்றத்தில் கொட்டப்பட்டது. தரமுள்ள நெல், வகையான அறுவடை என்று ஊர் வியந்தது.

புலவர் பாடசாலைக் கட்டிடத்திற்கு மரம் அறுக்க மலையமான் காட்டுக்கு ஆட்களோடு போனார். கூடவே, தச்சர்களையும் அழைத்துக் கொண்டார். மரமாய் சுமந்து வருவதைவிட, காட்டிலேயே அமர்ந்து தூணும், உத்தரமும் ஊருக்கு அனுப்பத் திட்டமிட்டார்.



04

அறுவடை மொத்தமும் முடிந்து ஆண்களுக்கும், பெண்களுக்கும் கூலி அளந்து கொடுத்துவிட்டு உமையாள் நெல்லைக் காலால் தள்ளித் தள்ளி உலர்த்திக் கொண்டிருந்த நேரம், வீட்டு வாசலுக்கு குன்றன் வந்தான். கைக்கோலால் தரையைத் தட்டினான்.

"நூறு கலத்திற்கு முப்பது கலம் மூவேந்த வேளாளருக்கு வரி தரவேண்டும் எடுத்து வை" என்று கத்தினான்.

"வரியா? நானா? பைத்தியமா பிடித்திருக்கிறது உனக்கு? வீட்டில் ஆணில்லாத பெண்களிடம் வம்பு செய்யவே அலைகிறாயா? போ வெளியே" உமையாள் சீறினாள்.

"நீயா ஆணில்லாத பெண். புலவனுக்குக் கள்ளக் காதலியென்று ஊருக்குத் தெரியுமே. நீ வரிகட்ட வேண்டாமென்பது பழைய கதை. இந்த வருடம் முதல் புதுக்கதை."

"இது இறையிலி நிலம். தெரியாதா உனக்கு. இறை இல்லை என்று தானமாகக் கொடுக்கப்பட்ட நிலம்."

"தானம் உனக்கா கொடுக்கப்பட்டது? உன் தாய்க்குக் கொடுக்கப்பட்டது."

"இது பரம்பரை அனுபோகம்" உமையாள் கத்தினாள்.

"ஊர் ஆட்சி மாறிவிட்டது. இந்த ஊரே மூவேந்த வேளாளருக்கு தானமாகத் தரப்பட்டது. அவரிட்டதே கட்டளை."

"அவர் என்னிடம் வரி வசூலிக்கச் சொல்லி உனக்குக் கட்டளையிட்டாரா?"

"நான்காம் வருணத்தவன் நிலம், சுடுகாடு, கோவில் போன்ற தானமாய்க் கொடுக்கப்பட்ட நிலங்கள் தவிர மற்றவைக்கு வரி உண்டு."

"இது தானமாகக் கொடுக்கப்பட்ட நிலம். என் தகப்பனுக்குக் கொடுத்த சன்மானம். என் பாட்டனுக்குக் கிடைத்த வெகுமதி."

"கோவில் போன்றவைகளுக்கு தானமாகக் கொடுக்கப்பட்ட நிலத்திற்கு என்றுதான் சாசனம் இருக்கிறதே தவிர, உன் நிலத்திற்கு என்று சொல்லப்படவில்லை. உன் நிலம் சுடுகாடோ, கோவில் நிலமோ இல்லை. நூறு கலத்திற்கு முப்பது கலமாய் இரண்டாயிரம் கலம் நெல்லுக்கு அறுநூறு கலம் நெல் நான் எடுத்துக் கொள்கிறேன்" குன்றன் நெல் மீது கால் வைத்தான். உமையாள் ஈட்டியெடுத்து வந்தாள்.

"குத்திக் கொல்லுவேன். போ வெளியே" என்று கத்தினாள்.

"புலவனோடு பரணையில் கட்டிப் புரண்டு படுக்கிறாய். என்னிடம் மட்டும் ஏன் ஈட்டி எடுத்துக் கொண்டு வருகிறாய்?" குன்றன் கழுதைப்புலி போல் சிரித்தான்.

"இனி ஒரு பேச்சுப் பேசினாலும் குத்திக் கொல்வேன்."

"நான் கழுதைப்புலியை அடித்துக் கொன்றவனடி. கள்ளக் காதலியைக் கண்டு பயந்து ஓடுவேனா?" தொடை தட்டினான். "வா... அருகில் வா. குத்துகிறாயா? குத்தப்படுகிறாயா என்று பார்..."

ஆத்திரத்தோடு உமையாள் ஈட்டியெறிந்தாள். குன்றன் நகர்ந்து கொண்டான். ஈட்டித் தரை குத்தியது. முறத்தை எடுத்து அவனை அடிக்க வந்தாள். குன்றன் அவளை மடக்கி நெற் குவியலில் தள்ளினான். மேற் புடவையை இழுத்தான். உமையாள் முலைகள் வானம் பார்த்தன. குன்றன் அவள் நெஞ்சில் கால் வைத்தான். நெற்குவியலில் அழுத்தினான். உமையாள் திணறினாள். நெல் சரிந்து அவள் முகம் மூடிக்கொண்டது. கூச்சலிட முடியாமல் மூக்கிலும், வாயிலும் நெல் புகுந்தது.

"சம்மதம் என்று ஒரு வார்த்தை சொல். வரி இல்லையென்று சொல்லி விடுகிறேன். மறுத்தால் வரி வசூலோடு மட்டும் போகாது. உன் கள்ளக் காதல் விவகாரமும் தெருவுக்கு வரும்."

உமையாள் மூச்சடக்கி முழு பலமும் சேர்த்து 'தூ' என்று வாய் நெல் முழுவதையும் அவன் மீது துப்பினாள். குன்றன், இடுப்புச் சேலையைப் பற்றி இழுத்தான். சொடுக்கு நேரத்தில் சேந்தன் உமையாள் நிர்வாணமானாள். தன் நிர்வாணத்தைப் பார்த்து பெருத்த கூச்சலிட்டாள். குன்றன் அவள் மீது சேலையை எறிந்துவிட்டு வாசலுக்குப் போய் நின்றான்.

"என்னையா அடிக்கிறாய்?" என்று உரக்கக் கத்தினான். அவள் ஈட்டியால் தன் கன்னத்தைக் கீறிக் கொண்டான்.

உமையாள் புடவை சுற்றிக்கொண்டாள். வீட்டுக் கூரையில் சொருகியிருந்த அரிவாளை எடுத்துக் கொண்டு குன்றனை நோக்கி ஓடி வந்தாள். ஓட முடியவில்லை. குன்றனைத் துரத்த முடியவில்லை. மூக்கிலே புகுந்த நெல் தொண்டைக் குழிக்குள் தாறுமாறாய் இறங்கி இரும வைத்தது. அவள் கூச்சல் கேட்டு அண்டை வீடுகள் கதவு திறந்து வெளியே ஓடி வந்தன. உமையாள் அரிவாளை குன்றன் மேல் வீசினாள். குன்றன் அதை ஈட்டியால் தடுத்தான்.

இடுப்பில் மட்டும் புடவை சுற்றி, அதை இடது கையால் இறுகப் பற்றி, விரிந்த தலையும், அலையும் மார்பகங்களோடும், உடம்பெல்லாம் வியர்வையும் தூசுமாய் நிற்கின்ற, வெறிபிடித்தது போல் அலைகின்ற உமையாளைப் பார்த்தார்கள். தொடர்ந்த இருமலால் தவித்தாள்.

பெண்கள் அவளைச் சுற்றிக்கொண்டு ஆசுவாசப் படுத்தினார்கள். புடவை கட்டி விட்டார்கள். உமையாள் அவர்களை விலக்கிக்கொண்டு ஜம்புநாதேஸ்வரர் கோவிலுக்குப் போனாள். கோவில் மணியை ஆவேசமாய் அடித்தாள். பதினெட்டு கிராமங்களிலும் மணியோசை கேட்டு ஜனங்கள் நரிப்பள்ளம் நோக்கி ஓடி வந்தார்கள். கூகுர்பாடியில் கூடினார்கள்.

"என் நிலத்திற்கு வரி உண்டா? என் நிலத்திற்கு இறை உண்டா? என்னிடம் வரிகேட்டு இவனை அனுப்பியது யார்? எந்த அதிகாரி? எந்த மாராயர்? வரி கொடுக்கமாட்டேன் என்பதற்கு புடவை பற்றி இழுக்கிறானே, என்னை நிர்வாணமாக்கிப் பார்த்தானே... இந்தப் பாவியை கேட்பார் இல்லையா? இதுதான் சோழ ஆட்சியா? இதுதான் சோழ நாகரீகமா? குலப்பெண்களையும் சிறைப்பிடித்த பெண்களாக நடத்துவதுதான் நரிப்பள்ளி ஆண்களின் வீரமா? ராஜேந்திர வளநாட்டின் வழக்கமாக எனக்கு நீதி கிடைக்கிற வரை, இவனுக்குத் தண்டனை கிடைக்கிறவரை, நான் உண்ண மாட்டேன், ஒரு மிடறு நீர் கூடக் குடிக்க மாட்டேன். சோழ சாம்ராஜ்யத்தின் முக்கிய அதிகாரியாய் என் மகன் இருக்க, எனக்கே இந்த நிலைமையெனில், மற்ற பெண்களின் நிலை என்ன?" சேந்தன் உமையாள் வீறிட்டாள். ஊர்ச்சபை குன்றனை விசாரித்தது.

"கிராமமே தானமான பிறகு உமையாள் நிலத்தைத் தானம் என்று சொல்ல மூவேந்த வேளாளர்தான் வரவேண்டும். கோவில் நிலங்கள் மட்டும்தான்

இறையிலியாக்கப்பட்டிருக்கிறதே தவிர, உமையாள் நிலம் பற்றி எதுவும் சொல்லப்படவில்லை. நான் வரிகேட்டதில் பிசகில்லை. நான் வரி கேட்ட போது, உமையாள் புடவையை அவிழ்த்து சம்போகத்திற்கு வரச்சொன்னாள். நான் மறுத்த போது ஈட்டியால் முகம் கீறினாள். நீயும் ஒரு ஆண் மகனா என்று சீறினாள். நான் பயந்து ஓடி வந்து விட்டேன். தொடர்ந்து அரிவாளால் தாக்கினாள். அதை ஊர் ஜனங்கள் பார்த்தார்கள். இதுதான் நடந்தது" என்று சொன்னான். பொய்யும், பொருந்தும்படிச் சொன்னான்.

"உமையாளை நல்லவள் என்று மட்டும் நினைக்காதீர்கள். கடந்த பதினைந்து நாட்களும் உமையாள் புலவரோடு கள் குடித்துவிட்டு, வயல் பரணையில் படுத்துக் கொண்டிருந்ததை வெளியூர் ஆட்கள் பார்த்திருக்கிறார்கள். அங்கங்கே கள் குடித்த பானைகள் உடைக்கப்பட்டிருப்பதை இப்போதும் போய் பார்க்கலாம்.

ஊர் அதிர்ந்தது. ஆட்களை அனுப்பிப் பார்த்து வரச் செய்தது. அங்கே புதிய கள் பானைகள் உடைந்திருப்பதாக ஆட்கள் வந்து சொன்னார்கள். உமையாளை கள் குடித்தாயா என்று கேட்டார்கள்.

"இப்படியொரு கேள்வி என்னை நோக்கிக் கேட்பதே இழிவு. உங்களுக்காக உழைக்கின்ற புலவரை இதைவிட வேறு எவ்விதமாகவும் அவமானப்படுத்த முடியாது. முந்நூறு கலமல்ல, மொத்த நெல்லும் எடுத்துக் கொள்ளட்டும். இந்த நிலங்கள் இந்த நொடியிலிருந்து

எனக்குச் சொந்தமானவை அல்ல. நான் இறந்தால் அந்த நிலத்தில் என்னைப் புதைக்க வேண்டாம். எரியூட்ட வேண்டாம். தென்பெண்ணை ஆற்று வெள்ளத்தில் என்னைத் தூக்கிப் போட்டு விடுங்கள். நிலத்தில் வாழும் உங்களால், உங்கள் கண்களால் தீண்டப்படுவதைவிட, நீரிலுள்ள மீன்களால் தீண்டப்படுவதே உத்தமம்" உமையாள் கோவிலை விட்டு வேகமாகப் போனாள். தென்பெண்ணை ஆற்றங்கரையிலுள்ள அரளிச் செடிகளிலிருந்து முற்றின காய்களை பறித்தாள். ஊர் அவளை பின் தொடராது, தலையில் கை வைத்துக்கொண்டு என்ன செய்வதென்று யோசித்தது. "உமையாள் நிலத்துக்கு வரி உண்டா இல்லையா என்பதை மூவேந்த வேளாளர்தான் சொல்ல வேண்டும். அவருக்கு ஆள் அனுப்பு" என்று கட்டளையிட, ஆள் தூது போயிற்று.

அரசன் தானமாகக் கொடுத்த நிலம் தன் எல்லையிலிருந்தாலும், அரசன் விதித்த கட்டளைக்கு எதிராக வரி வசூலிக்க முடியாதென்றும், அப்படி வரி வசூலித்தல் ராஜதுரோகமென்றும், வரி கேட்டவனைத் தண்டிக்கலாமென்றும், தனக்கு வேலைகள் பல இருப்பதால் நேரில் வர இயலாதென்றும் சொல்லியனுப்பினார் மூவேந்த வேளாளர். வரி கேட்டவன் கொடுமைப் படுத்தியிருந்தால் அவனுக்கு தக்க தண்டனையை கிராம சபையினரே தரலாம் என்றும் சொல்லியனுப்பினார். அந்த ஆள் வந்த பிறகு, உமையாளை ஊர் தேடியது. காட்டுக்குள் மரம் வெட்டிக்கொண்டிருந்த புலவரும், வெளியூர் சென்றிருந்த வாளையூர் நகரத்தார்களும் செய்தி கேட்டு ஊர்

திரும்பினார்கள். தென்பெண்ணைக் கரையோரமாய் உமையாளைக் கூவிக் கூவித் தேடினார்கள்.

05

ஒரு புதர் நடுவே முகம் கறுத்து, வாய் நுனியில் நுரை கறை படிந்து அரளியின் நஞ்சு குடித்து இறந்து போன உமையாளின் உடலை அழுகிய நிலையிலே கண்டுபிடித்தார்கள். தொட்டுத் தூக்கினாலும் பிய்ந்து போகிற நிலையில் உடல் இருந்தது. துர்வாசனை மூக்கைத் துளைத்தது. மேற்கில் மழை பெய்து தென்பெண்ணையில் வெள்ளம் கரைபுரண்டு ஓடிக்கொண்டிருந்தது. புலவர் தன் மேல் துணியை விரித்து அதில் உமையாளின் உடம்பைப் புரட்டிப் போட்டார். முனைகளை இழுத்து மடித்து மூட்டை போல் கட்டினார். தலையில் வைத்து ஆற்றில் மார்பு உயரம் இறங்கி வீசிப் போட்டார். மூட்டை சிறிது தூரம் மிதந்து போனது. பிறகு, மெல்ல மூழ்கத் துவங்கியது.

குன்றனை விலங்கிட்டு சபை முன் அழைத்து வந்தார்கள். மறுபடியும் உமையாளுக்கு புலவரோடு சம்பந்தமுண்டு என்று குன்றன் கத்தினான். புலவர் வாளையூர் நகரத்தார்களைப் பார்த்தார். வாளையூர் நகரத்தார்கள் மூன்று பேர் எழுந்தார்கள். தங்களிடம் புலவர் ரகசியமாய் சொல்லிவிட்டு உமையாள் நிலத்தைக் காவல் காக்கப் போகிறேன் என்பதாய்ப் போனார் என்பதாய்ச் சொன்னார்கள். கள்ளுச் சட்டிகளை ஊர் எடுத்து வந்து, கள் இறக்குபவனிடம் காட்ட, அந்தச் சட்டிகளில் தன் குறியிருப்பதும், இந்தச் சட்டிகளை

தினத்திற்கு ஒன்றாய் குன்றனிடம் கள்ளோடு விற்றதாகவும் அவன் அடையாளம் காட்டினான்.

புலவர் உமையாளை குன்றன் கற்பழிக்க முயன்றதையும், இதை நகரத்தாரிடம் விளக்கிய பிறகே தான் காவலுக்குப் போனதாகவும் சொன்னார். இதை ஊருக்குப் போய் சொன்னால் உமையாளுக்கு இழுக்காகும் என்பதால் சொல்லவில்லை என்றும் சொன்னார். ஊர்ச்சபை குன்றனை தாறுமாறாக மிரட்டியது. அவன் குற்றம் ஒப்புக்கொண்டான். "அவனுகு மரண தண்டனை கொடுக்க வேண்டும்" என்று ஊர் கோஷமிட்டது.

புலவர் எழுந்தார்.

"சேந்தன் உமையாள் கொலையையோ, தற்கொலையையோ விரும்பாதவள். போர்த் தொழிலையே வெறுப்பவள். அவள் நினைத்திருந்தால் சுலபமாக குன்றனைக் கொன்றிருக்க முடியும். ஆனால், அவள் செய்யவில்லை. கொலை விரும்பாத உமையாளின் பெயரால் ஒரு கொலை நடக்க வேண்டாம். வேறு ஏதேனும் ஒரு தண்டனை கொடுங்கள். வாரிசற்ற இந்த நிலம் உமையாளின் விருப்பப்படி பாடசாலையின் சொத்தாகப் பாவிக்கப்படட்டும். பதிகம் பயிலும் மாணவர்களுக்கு பயன்படட்டும். அடுத்த தலைமுறையாவது பதிகங்களால் இறையுணர்வு பெற்று, வன்முறையில்லாத தலைமுறையாக வளரட்டும். சேந்தன் உமையாள் நிலத்தில் விளைந்த நெல் முழுவதும் பாடசாலைக்கே போகும். இது இறந்தவளின் ஆசை என்பதை ஜம்புநாதர் சத்தியமாய் சொல்கிறேன்."

பதினெட்டு ஊர் பெரியவர்களும் கூடிப் பேசினார்கள். குன்றனுடைய சொத்து முழுவதும் கைப்பற்றி விற்றார்கள். முப்பத்திரண்டு காசுக்கு அவன் ஆடு, மாடுகளும், உடைமைகளும் விலை போயின. இடுப்புக் கோவணம் தவிர, எல்லாம் பறித்துக் கொண்டார்கள். அந்த முப்பத்திரண்டு காசை வாளையூர் நகரத்தாரிடம் கொடுத்தார்கள். வாளையூர் நகரத்தார் அருண்மொழி உழக்கால் தினமும் ஒரு உழக்கு எண்ணெய் ஜம்புநாதேஸ்வரருக்கு கொடுத்து உமையாளின் மனக்கேதம் தீர்க்கும் வண்ணமாய் நந்தா விளக்கு எரிக்கச் சொன்னார்கள். சந்திர, சூரியர் உள்ளவரை முப்பத்திரண்டு காசுக்கு கிடைக்கும் வட்டியால் அந்த விளக்கை தினமும் எரிக்க வேண்டும் என்று கட்டளையிட்டார்கள்.

தாய் இறந்த செய்தி கேட்டு பிள்ளை ஓடி வந்தான். முதல் முதலாக நந்தா விளக்கு ஏற்றி முகம் பொத்தி அழுதான். அவன் முதுகை யாரோ தொட்டுத் திருப்பினார்கள். மழித்த தலையும், காவி உடையுமாய் ஒரு புத்த பிட்சு அங்கே நின்றிருந்தார். வீரன் எழுந்து பார்த்தான்.

"போன பிறவியில் உனக்கு நான் தகப்பன். என் பெயர் பொன்தாமன்" புத்த பிட்சு மெல்ல பேசினார்.

"எது போன பிறவி அப்பா? நீங்கள் வீட்டை விட்டு வெளியேறிவிட்டால் புதுப் பிறவியா? நீங்கள்

அம்மாவோடு இருந்திருந்தால் இது நடந்திருக்குமா?" பிள்ளை கதறினான்.

"போரற்ற வாழ்வு இல்லையென்றுதான் போனேன். போய் ஈழத்தவரோடு போர் செய்தேன். போரில் வெட்டுப்பட்ட எனக்கு புத்த பிட்சுக்கள் உதவி செய்தார்கள். உயிர் கொலை எவ்வளவு கேவலம் என்பதை எடுத்துச் சொன்னார்கள். நான் துறவியானேன். துறவியாவதும், மறுபிறவி எடுப்பதும் ஒன்றே. உன் தாய் சொன்னது எனக்கு அப்போது புரியவில்லை. என் உயிர் துடிக்கும் நேரத்தில் புரிந்தது. புத்தமதம் பற்றி இன்னும் அறிந்து கொள்ள நான் கயை நோக்கிப் போகிறேன். சந்திர, சூரியர் உள்ளவரை நந்தா விளக்கு எரியுமா? எனக்கு தெரியாது. ஆனால் உன் தாயான சேந்தன் உமையாளின் பெயர் இருக்கும். போரே வேண்டாம் என்று சொன்ன அந்தப் பெண்ணின் கதை இருக்கும். உன் தாயின் கதை பாட்டாகப் பாடப்படும். கதையாக எழுதப்படும். அந்தப் பாட்டும், கதையும் சந்திர சூரியர் உள்ளவரை இருக்கும். எங்கெல்லாம் போர் நிகழ்கிறதோ, அங்கெல்லாம் அவள் கதை சொல்லப்படும். எங்கெல்லாம் வன்முறை தூண்டப்படுகிறதோ, அந்த வன்முறையைத் தடுக்க எவர் நெஞ்சிலாவது ஒரு விளக்கெரியும். வன்முறை வேண்டாமென்று மக்களை சமனப்படுத்தும். திறன் வெளிப்படும். உண்மையிலே வன்முறைக்கு எதிரான வாக்கியங்கள்தான் அழியாத விளக்கு. இடைவிடாது எரியும் நந்தா விளக்கு. என்றோ புத்தர் ஏற்றி வைத்த விளக்கு அது. நான் அந்த விளக்கை தேடி கயைக்குப் போகிறேன். வாள் தூக்காத பரம்பரையை நீ வளர்க்க

முயற்சி செய். போர் தீயது என்று பரப்ப உன்னால் ஆனதைச் செய்."

"எந்தக் கல்லிலே இந்த நந்தா விளக்குப் பற்றி சாசனம் பதிக்கப் போகிறாய்? புத்த பிட்சு கேட்க, வீரன் நடுக்கோவிலின் தெற்கு சுவரைக் காண்பித்தான். புத்த பிட்சு இரண்டு கைகளையும் அந்தப் பாறைக் கல்லில் பதிய வைத்தது. கண் மூடி மந்திரம் முணுமுணுத்தது. "சாஸ்வதம்... சாஸ்வதம்..." என்று சொல்லியபடி கோவிலை விட்டு இறங்கி வெளியே போயிற்று.

வீரன் கட்டளையிட, நந்தா விளக்கொளியில் ஒரு கல் தச்சன் சாசனம் பொறிக்க ஆரம்பித்தான்.

புத்த பிட்சு கல்லொலியின் சத்தத்தைக் கேட்டவாறே வடக்கு நோக்கி நடந்தார்.

***

பின் குறிப்பு:

எந்த சரித்திரக் கதையும் முழுவதுமான கற்பனையில்லை. சேந்தன் உமையாள் பற்றிய கல்வெட்டை கீழே அப்படியே தருகிறேன். புரிகிறதா என்று பாருங்கள்.

ஸ்வஸ்தி ஸ்ரீ – திருமருவிய செங்கோல் வேந்தன் முன்னோன் சேனை பின்னதுவாக இரட்ட பாடி ஏழரை இலக்கமும் மொண்டு கொல்லாபுரத்து சயத்தம்பம் நாட்டி முன் ஆணை தவிர்த்து, தன் ஆணை செலுத்தி எதிர் அமர் பெறாது எண் திசை நிகழ பறையது கறங்க ஆங்கது

கேட்டு பேராற்றங்கரை கொப்பத்து வந்தெரிர் பொறாத ஆஹவ மல்லன் அஞ்சி புறங்கெட்டோட ஆனையும், குதிரையும் பெண்டிர் பண்டாரமும் ஆங்கவன் விவவம் அடங்கலும் கொண்டு விஜாயாபிஷேகம் செய்து வீரசங்காதனத்து வீற்றிருந்தருளிய கோப்பர கேசரியாரான உடையார் ஸ்ரீ ராஜேந்திர தேவர்க்கு ஆண்டு மூன்றாவது. வாணகக் கொப்பாடியான

ராஜேந்திர வளநாட்டு பெண்ணை தென்கரை நரிப்பள்ளி நாட்டு குகூர் பாடியிருக்கும் மலையமான் காட்டு மேலூருடையான் பழங்கூரன் குன்றன் மேற்படி ஊரிலிருக்கும் வீரன் புத்திரன் தாய் சேந்தன் உமையாளை இறை காட்ட அவள் இறை கடவேன் அல்லேன் என்று சொல்ல அவளை கோச்செய்விக்க அவள் நஞ்சு குடித்து சாவ, நான்கு திசை பதினெண் பூமி நாநாதேசியும் கூடி நிறைந்து.*

இந்த பழங்கூரன் குன்றன் மேல் பழியாக்கி இவன் மேல் இந்த பழி தீர கொண்ட நடையாவது, வாளை யூராகிய ஜெகந்நாதபுரத்து திருத்தான் தோன்றி மாதேவர்க்கு திரு நந்தாவிளக்கு ஒன்று வைக்க கடவனாகி இவன் வைத்த காசு முப்பத்திரண்டு. இக்காசு முப்பத்திரண்டு வாளையூராகிய ஜெகந்நாதபுரத்து நகரதோம் கொண்டோம்.

கொண்டு அருமொழித்தேவன் மரக்காலோடு ஒக்கும் உழக்கால் நிசதம் உழக்கெண்ணை ஒட்டக்கடவோம்.

இவ்வெண்ணை வணிக கிராமத்தோம் இரு கூறும், சங்கரப்பாடியார் ஒரு கூறும் சந்திர ஆதித்தர் வரை இது. மகாதேஸ்வரர் ரட்சை.
**(கோர்செய்விக்க = அவமானப்படுத்த)*

இந்த கல்வெட்டு எங்கே இருக்கிறது என்று கேள்வி வருகிறதா?

தென் ஆற்காடு மாவட்டம் திருக்கோயிலூர் தாலுக்கா ஜெம்பை என்கிற ஊரில் உள்ள ஜெம்புநாதர் கோவில் உள் பிரகாரத்தில் தென் திசைச் சுவரில் செதுக்கப்பட்டிருப்பட்டிருப்பதைப் போய் பார்த்துவிட்டு வாருங்கள்.

முடிந்தால் சேந்தன் உமையாளுக்காக, போர் கூடாது என்ற பெண்ணுக்காக, 1054 ஆம் வருடம் இறந்த பெண்மணிக்காக ஒரு சிறிய விளக்கு போட்டு விட்டு வாருங்கள். போரற்ற பூமி மலரட்டும் என்று பிரார்தனை செய்யுங்கள்.

கல்வெட்டு எண். A.R 80/1906 Reference South Indian Inscription Volume XXII Part I page 75.

இக்கதைக்கு உதவி செய்தவர்.
திருமதி வசந்த கல்யாணி ராஜ்குமார், M.A., M.A., D.E.A.
Dept. of Archelogy
Tharamani
Madras